




GRIHALAKSHMI

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ராவ்

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ. (ஆனர்ஸ்).

மலர் 2] ஆகஸ்டு 1938 [இதழ் 8

PRINTED AT THE LODHRA PRESS. ROYAPETTAH MADRAS

OFFICE OF THE REGISTRAR MADRAS

13408
சென்னை-600 008.

# கிரஹலக்ஷ்மி

### சந்தா விவரம்

சந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 3-6-0. தனிப்பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாரராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. யின் அதிகச் செலவுதான்.

### விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½ % கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

### ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

### வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினுல் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

### பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

### சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோறுகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

### குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.






# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர் : மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
கோலார் கோல்ட் பீல்ட்ஸ் : திரு. ஏ. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.
திருப்பதி : மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட்.
சேலம் : எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.
மதனபள்ளி : என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜன்ட்.
திண்டிவனம் : திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.
சித்தூர் : திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.
வேலூர் : திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.
திருச்செங்கோடு : திரு. டி. ஏ. செல்லமுத்து, நியூஸ் ஏஜண்ட், அம்மன்கோயில் [தெரு.
கோயமுத்தூர் : திரு. கே. பழனிக்கவுண்டர், முனிசிபல் மிடில்ஸ்கூலுக்கு எதிர்புறக் [கடை.
மதுரை : திரு. ஏ. கே. ராமஸ்வாமி, 71, தெற்கு ஆவணிமூல வீதி.
திருவண்ணாமலை : மெஸர்ஸ் மணி புரொவிஷன் ஸ்டோர்ஸ், ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ் அண்டு கமிஷன் ஏஜண்ட்ஸ்.
காரைக்குடி : மெஸர்ஸ் பாரதிபிக்சர் பாலஸ்.
திருநெல்வேலி டவுன் : திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.
தூத்துக்குடி : மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட், கதர்ஸ்டோர், 25, கிரேட் காட்டன் ரோட்.
பீமாவரம் : திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் [பார்மஸி.
கிடதவோல் : திரு. கே. வி. சென்ன கேசவய்யர், வியாபாரி.
ஹனுமகொண்டா : திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.
சென்னை : மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.
கொழும்பு : திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.
யாழ்ப்பாணம் : திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.
கண்டி : திரு. வி. ஏ. நடராஜா, ஜாப்னாஸ்டோர், 77 & 78, பிரௌன்ரிக் தெரு.
ரங்கூன் : திரு. வி. பகவதி சாஸ்திரி, 248, பேர் தெரு.
கோலாலம்பூர் : திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட் ரோட், F.M.S.
தாராபுரம் : நாகராஜு நாயுடு, நியூஸ் ஏஜண்ட்.

ஹிக்கின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா இடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
**ராயப்பேட்டை, : : சென்னை.**


**க்ஷீரபலா**
(101 தடவை பாகம் செய்யப்பட்டது)
**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**
எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.
அவுன்ஸ் 1க்கு 3 8 0
**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**

**சாஸ்திரி ஹோட்டல்**
தம்பதிகள் தங்குவதற்கு தகுந்த இடம்—சுவை மிகுந்த உண்டிகள் இன்பமான பானங்கள்—இணையற்ற தயாரிப்பு—வகையான உபசாரம்—நல்ல காற்றோட்டமுள்ள உல்லாச பவனம்—முதல்தரமான வசதிகள் கிடைப்பது
எங்கே?
**சாஸ்திரி ஹோட்டல்**
**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**

**குந்தலகாந்தி தைலம்**
ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்தநிறம் உடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.
**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதறாஸ்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வரலக்ஷ்மீ விரதம் .... .... .... | 505 |
| 2. | ஹிந்து சமூகமும், விவாஹ ரத்தும் — டாக்டர் ஏ. எஸ். அல்டேகர் .... | 508 |
| 3. | தாலாட்டு — திரு. வி. எஸ். ஜகதீசசுந்தரம் .... .... | 516 |
| 4. | பஜனை — திரு. ஜே. வெங்கட்ராம அய்யர் .... .... | 517 |
| 5. | திருமயிலையின் மாட்சி — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... | 521 |
| 6. | கண்களின் வசீகரம் — "சுசீலா" .... .... | 523 |
| 7. | விமலையின் சந்தேகவிடுதலை — டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... | 526 |
| 8. | உறுதி பூண்ட உமா — ஸ்ரீமதி கே. கமலா .... .... | 529 |
| 9. | உமையாளின் உண்மை வாழ்க்கை — ஏ.. எஸ். கே. .... | 532 |
| 10. | வஸந்தா — "தாமரை" .... .... .... | 534 |
| 11. | டைபாயிட் ஜுரம் — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... | 539 |
| 12. | பாலிய விவாஹத்துக்கு பலி! — திரு. பி. மாசிலாமணி முதலியார் பி.ஏ.... | 542 |
| 13. | ராணி மீனாட்சி — "திருமதி" .... .... .... | 544 |
| 14. | விநாயக சதுர்த்தி விரதம் — "ஞானா" .... .... | 546 |
| 15. | ஒக்காரை முதலியன — "ஸரோஜா" .... .... | 550 |
| 16. | 'தாயைப்போல பிள்ளை' — ஸ்ரீமதி எஸ். கமலா .... .... | 553 |
| 17. | இத்தாலி — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... .... | 555 |
| 18. | மனைவி பேச்சை கேட்கலாமா? — "பிரேமா" .... .... | 558 |
| 19. | பலதாரமணம் — ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் .... .... | 562 |
| 20. | ஹிந்து சட்ட சீர்திருத்தகமிட்டி — ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி .... | 565 |
| 21. | செய்தித்திரட்டு .... .... .... | 566 |
| 22. | கதம்பம் .... .... .... .... | 568 |
| 23. | விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... | 570 |
| 24. | சினிமா செய்திகள் .... .... .... | 572 |
| 25. | ஆசிரியர் குறிப்புகள் .... .... .... | 573 |
| 26. | பஞ்சாங்கம் .... .... .... .... | 575 |
| 27. | பிரசவ அட்டவணை .... .... .... | 576 |


**வர்ணப்படங்கள்**


1. வரலக்ஷ்மீ பூஜை
2. "தாயைப்போல பிள்ளை".




## லக்ஷ்மீ தேவி புகழ்

பாற்கட லிடைப் பிறந்தாள்—அது
பயந்தநல் லமுதத்தின் பான்மைகொண்டாள்
ஏற்குமோர் தாமரைப்பூ—அதில்
இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள்—அந்த
நான்கிலும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள்—செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள்.

நாரணன் மார்பினிலே—அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்
தோரணப் பந்தரிலும்—பசுந்
தொழுவிலும் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும்—உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும்—ஒளி
பரவிட வீற்றிருந் தருள் புரிவாள்.

பொன்னிலும் மணிகளிலும்—நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும்—செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும்—மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி—அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்.

—சுப்ரமண்ய பாரதி.



## வரலக்ஷ்மீ விரதம்

தம்பதிகளிருவரும் சுக செல்வ சுகிருத வாழ்வு பெற்றுக்கொள்ளும் வண்ணம் அனுஷ்டிக்கும் விரதங்கள் பல. அவைகளில் உன்னதஸ்தானம் பெற்றுத் திகழ்வது வரலக்ஷ்மீ விரதம் என்று கூறலாம். லக்ஷ்மீ கடாட்சமும், அருளும் பூரணமாக தம்மிடமிருக்க வேண்டுவோர் வரலக்ஷ்மியைத் தமது கிரஹத்திலே வரவழைத்தலும் தமது ஹிருதய பீடத்தில் அந்த 'மலரின் மேவுதிருவை' அமர்ந்து ஆசீர்வதிக்கும்படி வேண்டிக்கொள்வதும் அவசியமாகும். சிலர் இவ்விரதம் ஸ்திரீகளுக்கு மட்டுமே உரியது என்று நினைக்கிறார்கள். உண்மை அப்படியல்ல. ஸ்திரீகள் இதைப்பிரதானமாக அனுஷ்டிக்க வேண்டியது. புருஷர்களும் வரலக்ஷ்மீ பூஜை செய்வது அவசியம்.

இவ்விரதத்தின் மகிமையை விளக்கும் புராண விருத்தாந்தத்தையும் இங்கு கூறுகிறோம். சித்ரநேமி என்ற தேவன் ஸ்ரீ வரலக்ஷ்மியின் கடாட்சத்தைப்பெற்று தான் பெற்ற சாபத்தினின்றும் விடுதலை பெற்றதுமன்றி நிரந்தர நித்யானந்த வாழ்வும் பெற்றான்.

முன்னொருகாலத்தில் பரமசிவனும், பார்வதிதேவியும் கைலயங்கிரியில் உல்லாசமாகப் பொழுது போக்கும் பொருட்டு சொக்கட்டான் ஆடினார்கள். முடிவில் பராசக்தி பார்வதியே ஜயித்தாள். ஆனால் சிவபெருமான் தானே வென்றதாகக் கூறினார். இருவரும் தான் தான் ஜெயித்ததாக வாதாடினார்கள். கைலைநாதர் உடனே அங்கிருந்த சித்ரநேமியைக் கூப்பிட்டு "இத்த ஆட்டத்தில் யார் ஜயித்தது, உண்மையைச் சொல்" என்றார். பகவானை திருப்திசெய்யும் நோக்கத்துடன் சித்திரநேமி "ஸ்வாமி! தாங்களே ஜயித்தீர்கள்" என்றான். தேவிக்கு கோபம் உண்டாயிற்று. உடனே "சத்தியத்தின் மகிமையை குறைக்க நீ பொய் பேசியதால்

உன் மேனியின் எழில் குஷ்ட நோய்க்காளாகி ஒளி குன்றுவதாக" என்று சாபமிட்டாள். ஆலமுண்ட நீலகண்டன் சித்ரநேமிக்காக பரிந்துபேசி அவனை மன்னிக்குமாறு மலையர்கோன்மகளைக் கேட்டுக் கொண்டார். பெண்களின் இயற்கை இனிமை அல்லவா? அதிலும் சர்வஜீவன்களுக்கும் தாயாகிய உமாதேவியின் உக்கிரம் தணிவதே அன்றோ? அன்னையின் முகத்தில் ஆத்திரம் மறைந்து அருளும், சாந்தமும் பொலிந்தன.

சித்ரநேமியின்மீது கிருபை கூர்ந்து அவன் பூலோகத்தில் வதியுங்கால் ஸ்ரோவரத்தில் எப்பொழுது அப்ஸர ஸ்திரீகள் பலர் ஒருங்கே வந்து வரலக்ஷ்மீ பூஜை செய்வரோ அப்பொழுது அவர்களின் உபதேசத்தினால் அவன் சாபம் நீங்கப் பெற்று தேவ தேஜசை யடைவான் என்று தேவி மொழிந்தாள். சித்ரநேமி ஸ்ரோவரத்துக்கு வந்துசேர்ந்தான். குஷ்டமும் அவனைப்பற்றிற்று. அல்லும் பகலும் அப்ஸர ஸ்திரீகளின் வருகையை அவன் ஆவலுடன் சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்து அன்னையின் நாமத்தை ஸ்மரித்துக் கொண்டே தன் சாப விமோசனத்தை எண்ணி ஏங்கியிருந்தான்.

தேவகன்னிகைகளான அப்சரஸ்களான மேனகை, ஸகஜன்யை, க்ருதாஸீ, விச்வாசீ, பூர்வசித்தி முதலிய தசகன்னிகைகளும் ஓர் தினம் வந்து சேர்ந்தனர். அவன் ஆனந்தம் கொண்டவனாய் அவர்களைத் தன் சாபம் தீர வரலக்ஷ்மீ பூஜை செய்யும் விதத்தை தனக்கு போதிக்கும்படி வேண்டினான்.

அவர்களின் தலைவி "சித்ரநேமி! கவனித்துக்கேள். ஸ்ரீ வரலக்ஷ்மீ விரதம் மிகவும் உத்தமமானதும் சிறந்ததுமான ஒரு விரதம். சகல சித்திகளையும் அளிக்க வல்லது. ஆண் பெண் இருபாலருக்கும் செல்வமும், சீரும், சிறப்பும் நல்க வல்லது. இந்த விரதத்தை கங்கையும், யமுனையும் கூடும் பிரயாகையில் அனுஷ்டிப்பது மிக விசேஷம்; அல்லது துங்கபத்ரா நதிக் கரையில் செய்வதும் சிலாக்கியம். அவ்வாறு செய்ய அசக்தர்கள் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அருளைப்பெற வேண்டுமாயின் ஆவணி மாதம் சந்திரனது வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமையில் நான்கு கரங்களுடன் விளங்கும் ஸ்ரீ லக்ஷ்மி தேவியை தங்கத்தில் பிரதிமை செய்து பூஜிக்கவேண்டும். அன்று காலையிலே வீடு முழுதையும் சுத்தஞ்செய்து அலங்கரிக்க வேண்டும். மாவிலை, தென்னங்குருத்து முதலியவற்றால் மகர தோரணம் முதலியன கட்டித் தொங்க விடவேண்டும். மாக்கோல மிட்டு செம்மண் பூசவேண்டும். இவைகள் மகாலக்ஷ்மிக்கு மனோகரமானவை. வீட்டின் ஈசான (வடகிழ்) பாகத்தில் பூஜைக்கென பிரத்தியேகமாக தயார் செய்யப்பெற்ற பரிசுத்த ஸ்தலத்திலே ஒரு படி பச்சரிசியைப்பரப்பி அதன் மேல் கலசம் வைத்து, கலசத்தை ஜலத்தால் நிறைத்து, அதில் கனிகளையும், பொற்காசுகளையும், பத்ர புஷ்பங்களையும் போடவேண்டும். கும்பத்தின் மீது பிரதிமையை வைக்கவேண்டும். பிறகு சுத்த ஜலத்தினால் ஸ்நானம் செய்வித்து, அப்பால் பஞ்சாமிருத ஸ்நானம், மீண்டும் சுத்தஜல ஸ்நானம் செய்விப்பதே அபிஷேகமுறை. மரங்களின் துளிர்களாலும், எட்டுவித வாசனைத்திரவியங்களாலும் (அதாவது பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, புனுகு, ஜவ்வாது, அகில், பன்னீர், அத்தர்,





ஸ்ரீசந்தனம் என்பன) அரசு, ஆல், வில்வம், மாதுளை இவற்றின் துளிர்களில் ஒவ்வொன்றிலும் இருபத்தோரு இலைகள் கொண்டும் மற்றும், தாமரை, மல்லிகை, மணமுள்ள ரோஜா, இருவாட்சி முதலிய புஷ்பங்களாலும் தேவியை இனிய கீதகான ஸ்தோத்திரப்பாடல்களுடன் அருச்சிக்கவேண்டும். கலசத்துக்கு இரு மருங்கும் தூபம், நெய்விளக்கு எரியவேண்டும். பசுநெய் தீப மேற்றிவைப்பது சாலவும் விசேஷம். அறுசுவை அன்ன உணவுகளைப்படைத்து அன்போடு நைவேத்யஞ் செய்யவேண்டும். தட்சிணை தாம்பூலம் கொடுத்து கற்பூர தீபாராதனை செய்து கும்மி கோலாட்டம் போட்டு லக்ஷ்மியின் பெருமையை மனதார வாழ்த்தித் துதிக்க வேண்டும்" என்று கூறினாள்.

மேற்கூறியபடியே அப்ஸர கன்னிகள் நோன்பை நடத்தினர். அவர்களின் காரியங்களை வெகு கவனமாய் சித்ர நேமி பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் உண்டாக்கின ஹோமப் புகையின் கந்தமும், நெய் தீபத்தின் ஒளியும் அவன்மீது பட்டு அவன் குஷ்டம் நீங்கி பொன் மேனியுடன் திகழ்ந்தான். அவர்களும் பூஜையை முடித்துவிட்டு வெறும் வெற்றிலையையும் பாக்கையும் மட்டும் மென்று (சுண்ணாம்பு தடவாமல்) தங்கள் அதரங்கள் ரத்தினம் போல் சிவந்து சிங்காரமாய் பிரகாசிப்பதை சித்ரநேமிக்குக் காட்டி அது வரலக்ஷ்மீ பூஜையின் மகிமையைக் காட்டும் ஒரு சிறிய சித்து என்றும் கூறி அவனுக்கும் வெறும் வெற்றிலை பாக்கு அளித்து பூஜை செய்தபின் மென்று பரீட்சை பார்க்கச் சொன்னார்கள். அவனும் வரலக்ஷ்மீ பூஜை செய்து சாபம் நீங்கப்பட்டு தேவ சொரூபத்துடன் பார்வதி தேவியின் சன்னிதானத்தை திரும்பவும் பெற்று மகிழ்ந்தான்.

வரலக்ஷ்மி விரதத்தின் மகிமை இத்துடன் நின்றுவிடவில்லை. பார்வதி தேவியும் இவ் விரதத்தை அனுஷ்டித்தே குமரக் கடவுளைப் பெற்றாளாம்! அது மட்டுமா? குண்டினபுரத்தில் வாழ்ந்த சாருமதீ என்னும் மங்கையர் திலகம் இந்த விரதத்தைக் கனவிலே அனுஷ்டித்து லக்ஷ்மியின் கடாட்சத்தால் மங்காத கீர்த்தியும் அழியாச் செல்வமும் அடைந்து மகிழ்ந்தாள். விக்ரமாதித்தியனும் இதனால் பயனடைந்தவன். "நல்ல லக்ஷணம் பொருந்திய நங்கை கிடைத்தாலன்றி மணம் வேண்டேன்" என்று பல்லாண்டுகள் பிரமச்சரியம் பூண்ட நந்தனும் இவ் விரதத்தை அனுஷ்டித்த பின்னரே சர்வ அலங்கிருத நாயகியைப் பெற்று சற்புத்திரனையும் அடைந்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. வரலக்ஷ்மியை பூஜித்தவுடன் கிரஹலக்ஷ்மிகளாகிய சில சுமங்கிலிகளுக்கு மஞ்சட் குங்குமம் புஷ்பம் தாம்பூலமளித்து மகிழ்வதும் முறை. இந்தப்பிரகாரம் தவறாமல் ஸ்ரீ லக்ஷ்மியை பூஜை செய்வோர் இவ்வுலகில் சகல சம்பத்துக்களையும் அடைந்து யாதொரு குறையுமின்றி வரலக்ஷ்மியின் அருளால் எப்பொழுதும் இனிது வாழ்வர். எனவே ஒவ்வொரு சகோதரியும் இதன் மகிமையை உணர்ந்து தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கவாறு இவ் விரதத்தைக் கொண்டாடி செல்வத் திருமகளை திடங்கொண்டு சிந்தனைசெய்து செல்வமெல்லாம் பெற்று ஆனந்த மடைவார்களாக!

# ஹிந்து சமூகமும், விவாஹரத்தும்

டாக்டர். ஏ. எஸ். அல்டேகர்

மேல் நாட்டில் விவாஹரத்துகள் சகஜமாக நிகழ்ந்து வருகின்றன. மாஜி மன்னர் எட்டாவது எட்வர்ட் மணம் செய்து கொண்டு முடி துறந்த ஸிம்சன் என்ற அமெரிக்கமாது இருமுறை விவாகரத்து செய்து கொண்டவள் என்பது உலகறிந்த விஷயம். மேல் நாட்டில் சர்வ சாதாரணமாக அனுஷ்டானத்திலிருந்து வரும் இந்த விவாஹரத்துப் பிரச்சினை இப்பொழுது இந்தியாவிலுள்ள படித்த ஆண் பெண்களின் மனதை கலக்க ஆரம்பித்திருக்கிறது. பல சீர்திருத்த மகாநாடுகளில் விவாஹரத்தை ஆதரித்து தீர்மானங்கள் பிரேரிக்கப்படுகின்றன. சில சமயங்கள் அவைகள் நிறைவேறுகின்றன. சிற் சில சமயங்களில் நிராகரிக்கப் பட்டும் விடுகின்றன.

## வைதீகரின் ஆட்சேபம்.

ஒரு சாதாரண பாமர ஹிந்து தன்னுடைய சமூகத்தில் விவாஹரத்தைப் புகுத்துவது ஹிந்து நாகரீகத்தின், கலையின் தத்துவத்துக்கே நேர்மாறானதென்று நம்புகிறான். சமூகத்திலுள்ள வைதீக கோஷ்டியினருக்கு இது அறுவெறுக்கத்தக்க சாபமாக, பீடையாக காட்சியளிக்கிறது. தீவிர சீர்திருத்த வாதிகளும், முற்போக்கடைந்துள்ளவர்களும் அதனுடைய அத்தியாவசியத்தை உள்ளூர உணர ஆரம்பித்திருக்கின்றனர். ஆனால் அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் தீமைகளின்றி பரிபூரண நன்மை மட்டும் விளையுமா என்ற ஐயம் அவர்களை திக்பிரமை அடிக்கச் செய்கிறது. இந்த தயக்கம் அவர்களது மனதை வாட்டாமலில்லை. ஆகையால் இந்தப்பிரச்சினையை சரித்திர ஆராய்ச்சி மூலம் ஆதி யோடந்தமாகப் பரிசீலனை செய்வதே உகந்ததாகும்; அப்படிச் செய்வது அதன் பூரா விஷயத்தையும் நாம் உணர்ந்து முடிவுக்கு வர ஹேதுவாகும்.

பிற்காலத்திய தர்ம சாஸ்திரங்கள் முழுமையும் முதல் மனைவி உயிருடனிருக்கும் போதே கணவன் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கையில், கணவனால் முற்றும் வெறுக்கப்பட்டுக் கைவிடப்பட்ட மனைவிக்குக் கூட விவாஹரத்து செய்து கொள்ளும் உரிமையை அளிக்க மறுக்கின்றனவென்பது யாதொரு சந்தேகத்துக்கிடமின்றி மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஆதி கிறிஸ்து மதத்தைப்போல், ஹிந்து மதமும் மணபந்தமானது பிரிக்க—விலக்க முடியாத தொன்றாக இருக்கவேண்டுமென்று கருதிற்று. இது பற்றி மனு வெகு உக்கிரமான வார்த்தைகள் கூறியிருக்கின்றார். அவரது விதிப்படி கணவன் மனைவியை கைவிட்டாலும் அல்லது பிறருக்கு விற்று விட்டாலும் கூட பதிபந்தமும், தன் பதிக்கு அவள் செய்ய வேண்டிய கடமையும் முடிந்து விடவில்லை என்று மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகின்றது (IX. 46).



## விவாகரத்துக்கு ஆதிஸ்மிருதிகளின் ஆதரவு.

கி. மு. நாலாவது நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தில் எழுதியுள்ளதும், ஏற்பட்டதுமான தர்ம சாஸ்திரங்களின் அபிப்பிராயம் இப்பிரச்சினை விஷயத்தில் மிக்க வேறுபட்டிருந்தது. அக் காலத்திய சாஸ்திர பண்டிதர்கள் ஒரு சில அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் விவாஹரத்தை அனுமதிப்பதற்கு அனுகுணமாகவே இருந்தனர். வேதகாலத்தின் ஆரம்பதிசையில் விவாகரத்து பற்றி ஜனங்கள் எவ்வித வெறுப்போ துவேஷமோ சிறிதும் கொண்டிருக்கவில்லை யென்று தெரிகிறது. அதர்வண வேதம் ஒரு இடத்தில் (IX. 5.27-8) ஒரு ஸ்திரீ மறுமணம் செய்து கொண்டதைக் குறிப்பிட்டு அவள் இரண்டாவது கணவனோடு மறு உலகத்தில், சுவர்க்கத்தில், ஐக்கிய மடைவதற்கான ஒரு லகுவான சடங்கையும் ஏற்படுத்தியிருக்கிறது. மறு விவாகம் செய்து கொள்ள வேண்டுமானால் அவள் ஏற்கனவே விவாஹரத்து செய்திருக்க வேண்டு மென்பது புலப்படுகிறது. தர்ம சூத்திர கர்த்தாக்கள் சில சந்தர்ப்பங்களில் பிராமணப்பெண்கள் கூட விவாகரத்து செய்து கொண்டு மறுமணம் செய்து கொள்ளலா மென்பதை அனுமதிக்கின்றனர்; பொதுவாக விவாஹரத்துக்கு பூரண ஆதரவளிக்கின்றனர். அவர்களினுடைய மனப்பான்மையை வாசகர்கள் கீழே காணப்படும் வசிஷ்டருடைய வாக்கியங்களின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

## வசிஷ்டர் வாக்கியம்.

“யாத்திரை சென்றிருக்கும் ஒருவனுடைய மனைவி ஐந்து வருஷங்கள் காத்திருக்கவேண்டும். ஐந்து வருஷங்களுக்குப்பின் அவள் தன் கணவனோடு வசிக்கச் செல்லவேண்டும். பொருளாதார, ஆத்மீக காரணங்களை முன்னிட்டு அவள் யாத்திரை செய்ய இஷ்டப்படாவிட்டால், தன் கணவன் இறந்துவிட்டால் எப்படி நடந்து கொள்வாளோ அவ்விதமே நடந்து கொள்ளவேண்டும். பின்னர் அவள் ‘சபிண்டா’ அல்லது ‘சகோத்ர’ த்தைச் சேர்ந்த மற்றொரு புருஷனோடு சேர்ந்து வாழவேண்டும்.”

கௌதல்யருடைய அர்த்தசாஸ்திரம் மேற்கூறிய பொதுவான கொள்கைகளை அங்கீகரிக்கிறது. ஆனால், அது பலவித சந்தர்ப்பங்களுக்குப் பொறுத்தமாக விருக்கும்படி சில வித்தியாசங்களையும் மாறுபாடுகளையும் புகுத்தியிருக்கிறது. கணவன் சொற்ப தூரப் பிரயாணத்துக்கென்று சென்று அவனைப் பற்றிய தகவல் யாதொன்றும் ஒரு வருடம் வரைக்கும் தெரியாதிருந்தால், பிறகு மனைவிக்கு மறுமணம் செய்து கொள்வதற்கு உரிமை யுண்டு. அவன் தூர தேசத்திற்கு நெடுநாளைய பிரயாணம் சென்றிருந்தால் அதற்கேற்ப காத்திருக்க வேண்டிய காலவரையறை அதிகமாக்க வேண்டியிருந்தது. மக்களைப்பெற்றெடுத்த மாதர்கள், மக்களைப்பெற்றிராதவர்களைக் காட்டிலும் அதிக காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த விதிகள் பிராமண சமூகத்தினருக்கு மட்டுமே அனுஷ்டிக்கக் கூடியவைகளென கௌதல்யர் கூறியிருக்கிறார்.

இதனின்றும் மேற்படி சாஸ்திர கிரந்த கர்த்தாக்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் விவாஹரத்தை ஆதரித்தார்கள் என்பது புலனாகிறது. மேலே குறிப்பிட்ட விஷயமாக கணவன் நெடுநாளாகத் திரும்பி வராவிட்டால் அதன் பொருள் அவன் இறந்து விட்டான் என்பதே என்றும், ஆகையால் அது மறுமணமேயல்லாது விவாகரத்து ஆகாது என்று வாதிப்பது சரியல்ல. சில சமயங்களில் அப்படி நடப்பதும் உண்டு; ஆனால் வசிஷ்டர் பிரயாணம் செய்ய விரும்பாத அல்லது முடியாத பெண்ணும் மறுபடியும் மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்று கூறுவது இங்கு ஆழ்ந்து கவனிக்கவேண்டிய விஷயமாகும். அப்படியானால் இந்த மறுமணம் தன்னுடைய கணவன் உயிருடன் இருக்கையிலேயே விவாகரத்து செய்து கொள்ளலாம் என்பதையே உணர்த்துகிறது.

## விசேஷமான சமயங்கள்.

'பராசரஸ்மிருதி' விவாகரத்தைப் பரிபூரணமாக ஆதரிக்கிறது. ஒருவள், தன் கணவன் துறவியாகி விட்டாலோ அல்லது ஆண்மையற்றவனாகி விட்டாலோ மறு விவாஹம் செய்து கொள்ள இது அனுமதிக்கின்றது. இந்த மறு மணம் ஆதி மண பந்தத்தை அறவே அறுத்து விவாஹரத்துச் செய்துகொள்ளப்படுவதையே பிரதிபலிக்கச் செய்கிறது.

கௌதல்யருடைய அர்த்த சாஸ்திரம் துரதிர்ஷ்ட வசத்தால் ஒருவர்க்கொருவர் ஒன்று பட்டு ஒற்றுமையாய் குடும்பத்தை நடத்த முடியாத தம்பதிகள் விவாகரத்து செய்து கொள்ள வேண்டிய சட்ட திட்டங்களையும், விதிமுறைகளையும் விவரமாக வகுத்திருக்கிறது. இந்த விதிகள் 'பிரம்மம்' அல்லது 'தைவம்' என்ற முறைப்படி நடந்த விவாஹங்களுக்கு அனுஷ்டிக்கப்படமாட்டாது. 'அசுரம்', 'காந்தர்வம்' என்ற முறைகளின்படி நடைபெற்ற மணங்களுக்கே இவைகள் கையாளப்பட வேண்டியவைகளாகும். பின்னால் கூறப்பட்ட வைதீகத்திற்குப் புறம்பான மணங்கள் ('அசுர'மும், 'காந்தர்வ'மும்) பிராமண வகுப்பாரிடையேயும் நிலவி வந்தது. ஆகையால் விவாகரத்து இவர்களிடையும் ஓரளவு பழக்கத்திலிருந்திருக்க வேண்டும்.

## தம்பதிகள் சம்மதம்.

அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விவாகரத்து விதிமுறைகள் மிகவும் விசித்திரமாக இருக்கின்றன. கௌதல்யர் இது விஷயத்தில் வெகு தீவிரமான அபிப்பிராயம் கொண்டவராயிருக்கிறார். தம்பதிகள் ஒருவரை ஒருவர் வெறுத்தாலுமே அவர்கள் விவாகரத்துச் செய்து கொள்ள அவர் உரிமை நல்கியிருக்கிறார். தம்பதிகளில் யாராவது ஒருவர் மட்டும் மற்றவரை வெறுத்தால் விவாகரத்துச் செய்து கொள்ள முடியாது. புகார் கணவனிடமிருந்து கிளம்புமாயின் அவன் தான் பெற்றிருக்கும் சீதனம், வரசுல்கம் முதலியவற்றைத் திருப்பித் தந்து விடவேண்டும். புகாருக்குக் காரணமும், புகார் செய்பவளும் மனைவியாக இருந்தால் அவள் தனக்களிக்கப்பட்ட வதுசுல்கம், பரிசம், பெண் விலையைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டும். குழந்தைகளின் பாதுகாப்பைபற்றி கௌதல்யர் யாதும் சொல்லவில்லை.





## சில திருஷ்டாந்தங்கள்.

இந்த விவாஹரத்து திட்டங்கள் எவ்வளவு தூரம் நடைமுறையில் அமுலிலிருந்து வந்தது, எம்மட்டும் பயன் படுத்திக் கொள்ளப்பட்டது என்பதை நிர்ணயிப்பது வெகு சிரமமான காரியம். சமூகத்தின் கீழ்ஜாதியாரிடை அவைகள் வெகு சர்வ சாதாரணமாக சகஜமாக இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் கீழ் ஜாதியாரிடை விவாஹரத்து இன்னும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது.

பிராமணீயகலைகளிலும், நூல்களிலும் விவாஹரத்துக்களைப் பற்றிய சம்பவங்களைப் பற்றிய பிரஸ்தாபங்கள் ஒன்றும் காணப்படவில்லை. பௌத்த நூல்களில் சில விவாஹரத்துக்கள் காணப்படுகின்றன. 'தம்மபதா' வைப்பற்றிய வியாக்கியானம் ஒரு ருசிகரமான கதையைக் கூறுகிறது. 'காணா' என்ற மங்கை தன் விவாஹத்துக்குப் பிறகு சில காலம் தன் தந்தையின் இல்லத்தில் இருக்கவேண்டியிருந்தது. அவளை கணவன் தன்னுடன் வருமாறு அழைத்தான். ஏதோ சில காரணங்களால் அவள் போக முடியவில்லை. புருஷன் கோபம் கொண்டு வேறு விவாஹம் செய்து கொண்டான். காலக்கிரமத்தில் இச் செய்தி காணாவுக்கு எட்டிற்று. அவள் அடங்காச்சினம் கொண்டாள். எக்காரணத்தை முன்னிட்டும் தன் கணவனிடம் இனிச் செல்லப்போவதில்லை என்று சபதமிட்டாள். புத்தரின் இஷ்டப்படி அவளை ஒரு அரசன் ஸ்வீகாரம் செய்து கொண்டு தனது வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரபுவுக்கு மறுமணம் செய்து வைத்தான். (தம்மபதா, II, 82வும், வியாக்கியானமும்).

'தேரிகதா' வின் (Therigatha 72) வியாக்கியானம் இதைவிட ஆச்சர்யமான ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. கோசலத்திலிருந்த 'இஸிதாசி' என்ற வனிதை அயோத்தி வியாபாரி ஒருவனுக்கு மணம் செய்விக்கப்பட்டாள். விவாஹம் தம்பதிகளுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதாயில்லை. மனக்கசப்பால் புருஷன் மனைவியைத் தள்ளிவைத்து விட்டான். இஸிதாசியின் தந்தை தன் மகளை மறுபடியும் ஏற்றுக்கொள்ளும்படி தன் மருமகனைக் கெஞ்சிக் கேட்பதில் காலத்தை வீணாக்கவில்லை. அவளுக்கு மறுவிவாஹம் செய்து அந்த கணவனுடன் அனுப்பிவிட்டான். இந்த விவாகமும் துரதிர்ஷ்ட வசமாய் நன்மையாக முடியவில்லை. வெகு சீக்கிரமே பெண் புருஷனால் விலக்கி வைக்கப்பட்டாள். மூன்றும் முறையும் தன் மகளை இல்லற வாழ்வில் தந்தை வைத்தார்; இந்த தடவையும் வெற்றியில்லை; முயற்சி பயனளிக்கவில்லை. மூன்றாவது கணவன் இவளை இரண்டு வாரத்திலேயே ஒதுக்கி விட்டான். கடைசியில் அவள் ஒரு சன்னியாசினியானாள்.

'மஜ்ஜிஹிமாணிக்கேயம்' (Majjihi-manikaya) ஒரு விவாஹரத்துக் கதையைக் கூறுகின்றது. ஷ்ராவஸ்தியில் ஒரு பெண் ஒருவனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டாள். அவனுடன் அவளுக்கு வாழமுடியவில்லை. ஆகையால் அவள் தன் தந்தையிடம் திரும்பி வந்து விட்டாள். தன் பெண்ணை வாழாவெட்டியாக வைக்க இஷ்டப்படாத அவள் தந்தை முதல் விவாக பந்தத்தை அறுத்து விட்டு அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்க ஆசைப்பட்டான். ஆனால் அவள் இதை

விரும்பவில்லை. மேலே என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியவில்லை.

## அனுமதி யிருந்தபோதும் வெறுக்கப்பட்டது

பிராமணீய நூல்களிலோ, பௌத்த நூல்களிலோ வெகு சில விவாகரத்துக்களே காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் விவாகரத்து சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் சமூகத்தில் அது கேவலமாகவே கருதப்பட்டு வந்தது. "கன்ஹதிபாயன ஜாதகா" (Kanhadipayana Jataka) சந்தோஷமற்ற விவாஹம் ஒன்றை குறிப்பிடுகிறது. மனைவி கணவனோடு ஒற்றுமையாக வாழமுடியவில்லை. இருந்தாலும் அவள் விவாகரத்து செய்துகொள்ள பிரியப்படவில்லை. அவள் தன் கணவனிடம் அவளுக்கு யாதொரு பிரியமும் இல்லையென்று நேரில் கூறுகின்றாள். ஆனாலும் அவள் மறுமணம் செய்துகொள்ளவில்லை. ஏனென்றால் அவள் குடும்பத்தில் ஒரு தடவை மணமான பெண் மறுபடியும் பர புருஷரை மணந்துகொள்ளும் வழக்கம் கிடையாது. எனவே தர்ம சாஸ்திர கர்த்தாக்களால் கொடுக்கப்பட்டிருந்த விவாஹரத்து உரிமை வெகுதுர்லபமாகவே கையாளப்பட்டு வந்ததென்பது தெளிவாகிறது.

கி. பி. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஸ்மிருதி எழுதிய ஆசிரியர்கள் விவாகரத்துக்கு விரோதமாகவே இருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் பண்டைய ஸ்மிருதி ஆசிரியர்கள் விவாகரத்தை அனுமதித்திருப்பதை புறக்கணித்து தள்ளவேண்டுமென்று கூறுகிறார்கள். மனு இன்னும் ஒருபடி அதிகம் சென்று, கணவன் தன் மனைவியைக் கைவிட்டாலும், அல்லது விற்றுவிட்டாலும் கூட அவள் தன் மணபந்தத்தினின்றும் விடுவிக்கப்பட்டவளாகமாட்டாள் என்று கூறுகிறார். இவ்வித கொள்கையை மனுவும், அவரது சிஷ்யர்களும் பின்பற்றுவதற்கு, அக்காலத்தில் துறவர, பக்திமார்க்க அலைகள் வேகமாக எங்கும் வீசிக்கொண்டிருந்ததே காரணமாகும். ஒரு மாதை விவாகரத்துச் செய்து மறுமணம் செய்துகொள்ள அனுமதிப்பது ஒழுக்கக் கேடுகளுக்கும், காமச் செயல்களுக்கும், விபசாரத்துக்கும் ஆதரவளிப்பதாகும் என்று சமூகம் உணர ஆரம்பித்தது. ஆகவே அது விவாகரத்தையே வெறுத்து ஒழிக்க முற்பட்டது.

## ஆடவரின் சுயநலம்

புருஷன், முதல் மனைவியை ஒதுக்கித் தள்ளியபின்பு, இரண்டாம் முறை மணம் செய்துகொள்வதை சமூகம் தடை செய்திருந்தால் அது நேர்மையாகவும் பாரபட்சமற்றதாயு மிருந்திருக்கும். மணபந்தம், விலக்க—பிரிக்கமுடியாத அவ்வளவு புனிதத் தன்மையானதாயின், அது மனைவியை மாத்திரமல்லாது கணவனையும் புனர் விவாகம் செய்துகொள்ள அனுமதித்திருக்கக் கூடாது. ஆனால் அவ்வித முயற்சிகள் எதுவும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. தர்ம சாஸ்திரங்களை எழுதிய கைகள் புருஷர்களுடையதல்லவா? ஆகையால் தான் இஷ்டப்படி நடப்பதை தர்ம சாஸ்திரங்கள் தடை செய்யாதபடி புருஷன் சாஸ்திரங்கள் எழுதியிருப்பது ஆச்சர்யமல்ல! அதில் ஜாக்கிரதை காண்பித்திருப்பது எதிர்பார்க்கக் கூடியதே.





ஆதி கிறிஸ்தவ மதமும் விவாகபந்தம் விலக்கமுடியாததென்று கருதி விவாகரத்தை அனுமதிக்கவில்லை. ரோமன் கத்தோலிக மதம் அனுஷ்டானத்திலிருக்கும் ஐரோப்பிய தேசங்களில் இன்றுகூட விவாகரத்து நடைபெறவில்லை. இங்கிலாந்தில்கூட 19-ம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை விவாஹரத்துக் கோரும் ஒருவர் பார்லிமெண்டின் தனி அனுமதியின் பேரிலேயே அடையமுடியும். எனவே விவாகரத்து பெரும் பணக்காரர்களாகிய ஒரு சிலருக்கே சாத்தியமானதாக இருந்தது. 1715-ம் வருஷம் முதல் 1855-ம் வருஷம் வரையுள்ள 140 வருஷங்களில் 180 பேர்களே பார்லிமெண்டின் தனி அனுமதியை அடைய முடிந்தது என்பது கண்டு கவனிக்கவேண்டிய விஷயமாகும்!

இந்தியாவில் விவாகரத்து 5-ம் நூற்றாண்டு முதல் மறைய ஆரம்பித்தது. இது உயர் வகுப்பினர் சம்பந்தப்பட்ட மட்டில் தான் பொருந்தும்; விவாஹரத்து இதற்குப் பின்னரும் கீழ்ஜாதியினரிடை அனுஷ்டானத்திலிருந்து வந்தது. 17-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'சூத்ரகமலாகரா' சூத்திரர்களுக்கு விவாகரத்தை ஸ்பஷ்டமாக அனுமதிக்கிறது. 19-ம் நூற்றாண்டின் மத்தியபாகத்தில் குஜராத்தில் பல பஞ்சாயத்துக்கள் (ஜாதிச் சபைகள்) விவாகரத்து வேண்டியவர்களுக்கு அனுமதியளித்திருக்கின்றன. பம்பாய் ஹைகோர்ட் ஆரம்பத்தில் விவாகரத்தை அங்கீகாரம் செய்தது. ஆனால் பின்னால் இவ்வழக்கம் ஹிந்துமத சட்டத்தின் தத்துவத்துக்கு விரோதமானது என்ற காரணத்திற்காக இது சட்டத்துக்குப் புறம்பானது என்று கூறிவிட்டது. ஆனால் இன்றும் நடைமுறையில் ஹிந்து சமூகத்தில் தாழ்ந்த வகுப்பினர்களுக்கு விவாஹரத்து அனுமதி கிடைப்பது ஒன்றும் சிரமமில்லை.

விவாஹரத்தை சமூகத்தின் உயர் பகுதியிலும் புகுத்தவேண்டுமா? என்பதுபற்றி ஏகோபித்த அபிப்பிராயம் கொள்ளுவது முடியாத காரியம். படித்தவர்களில் ஒரு வகுப்பினர் தனிப்பட்டவர்களுக்கு சில கஷ்டங்களைக் கொடுக்காத ஒரு சமூக அமைப்பையும் நிர்மாணிக்க முடியாதென்றும், விவாகரத்தைப் புகுத்துவதால் ஏற்படும் நன்மையைவிட தீமைகள்தான் அதிகமாகுமென்றும் கூறுகிறார்கள். மற்றொரு பிரிவினர் தற்போது இருக்கும் ஹிந்து விவாக சட்டதிட்டங்கள் மிகவும் அநீதியானவை யென்றும், பாரபட்சமானதென்றும், சமூகம் நன்கு விவரித்து விளக்கி வகுக்கப்பட்ட பொருத்தமான சந்தர்ப்பங்களில் விவாஹரத்தை அனுமதிப்பதே யுக்தம் என்றும் கருதுகிறார்கள்.

## மிகவும் அநீதியானது

தற்சமயம் அமுலிலிருந்து வரும் விவாஹ சட்டங்கள் ஹிந்து ஸ்திரீகளுக்கு பாதகமானது, மிகவும் அநீதியானது என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஒரு மனிதன் முதல் மனைவியை புறக்கணித்து ஒதுக்கிவைத்துவிட்டு மறுமணம் செய்துகொள்ளலாம். மனைவி தன்னுடன் ஒத்து வாழமாட்டேனென்கிறாள் என்று நொண்டி சாக்குக்கூறி அவளை சட்டப்படி சம்ரட்சிக்க வேண்டிய பொறுப்பையும் அவன் உதறித்தள்ளிவிடலாம். கணவன், தன் அன்பை பூராவையும் இரண்டாவது மனைவிக்கு அர்ப்பணம் செய்துவிட்டுத் தன்னை வேண்டாத, சம்பளமில்லாத

# தாலாட்டு

திரு. ஸி. எஸ். ஜகதீச சுந்தரம்

சுந்தரமே போல் ஒளிரும்
சுவர்ண மணி ஒளியே
சொந்தமதாய் என் வயிற்றில்
வந்துதித்த கண்மணியே

மன்னர் மகளாய் இங்கு
வளர்கின்ற பொற்கொடியே
உன்னை ஒரு மன்னன்
உகந்து மணஞ் செய்திடுவான்

அரசற்கரசி யென
அனைவர்களுந் தான் மகிழச்
சரச உல்லாச மதாய்
நின் கணவ னோடிருப்பாய்

உல்லாச மாயிருந்து
உயர்ந்த தவமியற்றி
பல்லோர்கள் போற்றப்
பாலகனைப் பெற்றெடுப்பாய்

பெற்றெடுத்த பாலனுக்குப்
பிரியமுள்ள தாயாகிக்
குற்றங்களைந்து மிகக்
குணமாய் வளர்த்திடுவாய்

குணமாய் வளர் பாலன்
குடும்பம் பெருகிவர
மணமொன்று செய்து
மகிழ்ச்சி யடைவாயே

பாலனுக்குப் பாலன் வரப்
பார்த்து மன மகிழ
ஞாலமதில் உன் பேரன்
நரைப் பாட்டி என்பானே.



பண்டரிபுரத்தில் "ஆஷாடி ஏகாதசி" வைபவம்.

("மச்சேந்திரன்" என்ற தெய்வீகக் குதிரையுடன் பஜனை கோஷ்டி வருகிறது. இதன் தலைவி ஒரு பக்தை. குதிரையின் சேணத்தை பிடித்துக் கொண்டிருக்கிறாள்.)

வேலைக்காரி போல் நடத்தும்போது அப்புருஷனுடன் நிம்மதியாக வாழ எந்த சுயமரியாதையுடைய மனைவியால்தான் முடியும்? இது மாதிரி தங்கள் கணவன்மார்களால் தள்ளப்பட்ட யுவதிகளின் எண்ணிக்கை கொஞ்ச நஞ்சமல்ல. சாதாரணமாக இவ்வித நிராகரிப்புக்கு பெண்ணின் குற்றம் காரணமென்று கூறமுடியாது. கணவனின் அற்பத்தனங்களும், பேதபுத்தியும், துஷ்கிருத்தியங்களுமே அதற்கு முக்கிய காரணங்கள். இந்த துரதிர்ஷ்ட, திக்கற்ற, புறக்கணிக்கப்பட்ட மாதர்கள் மறுமணம் செய்து கொள்ளவும் முடியாது. அப்பேர்பட்ட ஈவிரக்கமற்ற கணவன்மாரோடு செய்து கொள்ளப்பட்ட மணபந்தத்தை அறுத்துக் கொள்வதை சட்டமோ மதமோ அனுமதிக்காததே இதற்குக்காரணம். அவர்கள் மணவாழ்க்கையில் மறுபடியும் ஈடுபட்டு ஸ்திரமான ஜீவனம் செய்யவேண்டுமானால் மதமாற்றமடைய வேண்டும். இவர்கள் ஹிந்து மதத்தின் மீது விஸ்வாசத்துடன் இருக்க விரும்பினால் வைதவ்யத்துக்கீடான வாழ்க்கையைக் கொள்ளத்தயாராக இருக்கவேண்டும். இது அவர்களால் விரும்பத்தக்கதா?

இம்மாதிரியான நிலைமை விரும்பத்தக்கது என்று எவரும் இயம்பார். இது ஹிந்து மதத்தின் உயர்ந்த தத்துவத்துக்கே நேர்மாறானதாக இருக்கிறது. இந்த நிலைமையை சீர்படுத்த இரண்டே வழிகளிருக்கின்றன. முதலாவதும், சிறந்ததுமானது பலதாரமணத்தை அடியோடு சட்டவிரோதமானதாகச் செய்வது. பலதாரமணத்தை ஸ்மிருதிகர்த்தாக்கள் அனுமதித்தது ஆண் சந்ததியில்லாது போவதைத்தடுக்கும் நல்ல கருத்துடன் தான் என்று சொல்லலாம். ஆனால் தற்காலம் தங்கள் ஆத்மீக திருப்திக்கு புத்திரர் அவசியமென்று கருதுபவர்கள் மிகவும் சொற்பமே; இதில் உண்மையான நம்பிக்கையுள்ளவர்கள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமே. குஜராத்தி நாகர பிராமணர்களைப் போன்ற சில உயர் வகுப்பு ஹிந்து சமூகத்தினர் பலதாரமணத்தை பரம்பரை வழக்கத்தின்மூலம் தடை செய்து வந்திருக்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விஷயம். அவர்களது தூயவழக்கத்தை பூராஹிந்து சமூகமும் பின்பற்றி பலதாரமணத்தை அடியோடு ஒழிக்கவேண்டியது மிகவும் அவசியமானகாரியம். இன்னும் காலதாமதம் செய்யக்கூடாது. இது சாதிக்கப்பட்டு விட்டால் இளமங்கையர்கள் தங்கள் கணவன்மாரால் புறக்கணிக்கப்பட்டு தவிக்க, அப்புருஷர்கள் வேறு நங்கையர்களை மணந்து உல்லாசமாயிருக்கும் இந்த அநீதி ஒழியும்.

## புறக்கணிக்கப் பட்டவர்களுக்கு

இந்த முயற்சி சாத்தியமற்றதாகத் தோன்றினால், புறக்கணிக்கப்பட்ட மாதுக்கு விவாஹாரத்துரிமை அளிக்க வேண்டியதே. ஹிந்து சமூகத்தின் கட்டுப்பாடும், அதன் பரிசுத்த நீதிநெறியும் காப்பாற்றப்பட வேண்டுமாயின் தள்ளி வைக்கப்பட்ட மனைவிகள் விரும்பினால் அவர்களுக்கு விவாகரத்து உரிமை கட்டாயம் வழங்கவேண்டும். அவர்களின் கணவர்களின் விருப்பத்துக்கிணங்க விவாகரத்து கொடுக்கக்கூடாது. ஏனெனில் ஆகாத பத்தினியை போஷிக்கவேண்டிய சட்டபூர்வமான கடமையிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள அது உதவியாகி





விடும். அப்பேர்பட்ட மனைவியர் தம்மைத் தாங்களே போஷித்துக் கொள்ளவோ, அல்லது விவாகரத்து ஏற்பட்டபின் மறுமணம் செய்து கொள்வதோ லகுவான காரியமல்ல.

புருஷர்களின் கொடுமை, மூளைக்கோளாறு, நீண்ட நாள் பிரிவு, ஓயாத விபசார நடத்தை போன்ற காரணங்களுக்காக பெண்களுக்கு விவாகரத்துரிமை வழங்கலாமா? என்ற கேள்வி மிகவும் சிக்கலானது. தற்சமயம் ஹிந்து சமூகத்தின் மனப்பான்மை இருந்து வரும் நிலையில் மேற்படி காரணங்களுக்காக ஒரு பட்ச விவாகரத்துரிமை வழங்குவது பெரும்பான்மையான ஸ்திரீகளுக்குத் தீமையையே விளைவிக்கும். பால்ய விதவைகளே மறுவிவாகம் செய்து கொள்வதற்கு கஷ்டப்படுகிறார்கள். விவாகரத்து செய்து கொண்டவர்களில் 5% ஸ்திரீகள்கூட மறுவிவாகம் செய்து கொண்டு தகுந்த கணவனுடன் புதிய வாழ்க்கை நடத்த முடியுமென்று நினைக்க ஹேதுவில்லை. இந்த விஷயத்தை நாம் கவனியாமலிருக்க முடியாது. பாக்கி 95% பேர்கள் புனர்விவாகம் செய்து கொள்வது முடியாதகாரியம். ஆகையால் விவாகரத்து அவர்களுக்கு சட்டப்படியுள்ள ஜீவனாம்ச உரிமையையும் பிடுங்கிவிடவே பிரயோஜனப்படும்.

எனவே கொடுமைக்காகவும், மூளைக்கோளாறுக்காகவும், ஒழுக்கமின்மைக்காகவும், புருஷனின் நீண்டகால பிரிவாற்றாமைக்காகவும் விவாகரத்து அளிப்பது ஹிந்து ஸ்திரீகள் நன்மைக்குகந்ததாகாது. மேல் நாட்டில் விவாகரத்துச் சட்டத்தை மிகவும் எளிதாகவும் விரிவாகவும் செய்ததால் ஜனங்களின் ஒழுக்கம் குன்றவும், சந்தோஷம் அற்ற பல மணங்கள் ஏற்படுவதற்குமே இடமுண்டாயிற்று. சமீப காலத்தில் மேல் நாடுகளில் விவாகரத்துக்கள் மிகவும் பெருகியிருக்கின்றன. ரஷ்யாவிலும், இங்கிலாந்திலும் விவாகரத்துச் சட்ட விதிகளில் ஏற்பட்ட திருத்தங்கள் அவ்வுரிமையைக் கட்டுப்படுத்தவே என்று தெரிகிறது.

மணபந்தம் சாஸ்வதமானதாகவும், விலக்கமுடியாததாகவும் இருக்க வேண்டியது சமூகத்தின் நன்மைக்கு இன்றியமையாததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. மணவாழ்க்கையின் அடிப்படையான நோக்கமும் லட்சியமும் வெகு உன்னதமானதாக இருந்தால்தான் இது சாத்தியம். தம்பதிகளும் தன்னடக்கமும் பொறுப்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். மனித சுபாவத்தின்படி தினசரி வாழ்க்கையில் தங்களுக்குள் அபிப்பிராய பேதங்களிருப்பது சகஜமேயென்று உணரவேண்டும். புனர் விவாகம் செய்துகொள்ளுவதால் இந்த சில்லரை சிக்கல்கள் தீர்ந்துவிடாது. தம்பதிகள் வாழ்க்கையிலேற்படும் பலகஷ்டங்களையும் எதிர்க்க மேலான தியாகங்கள் செய்யவும், தன்னலமற்றும், ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் குணமுடையவர்களாயும் இருந்தால்தான் குடும்பத்தில் அமைதியும், ஆனந்தமும் நிலவும்.

ஆகையால் தம்பதிகள் நீண்டகாலம் தொடர்ந்து ஒருவரை ஒருவர் விட்டு விலகியிருந்தால் தான் விவாகரத்து அளிக்கப்படவேண்டும். அதுவும் மனைவியின் வேண்டுகோளின் பேரிலேயே அனுமதிக்கப்படவேண்டும்.



ஸ்ரீ க்ருஷ்ண ஜனனம்



# பஜனை

திரு ஜே. வெங்கடராம அய்யர்

(உரிமை)

முன் கீர்த்தனங்களில் த்யான பஜனையென்று சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கது. த்யானமும் பஜனையும் பாகவத மார்க்கத்திற்கின்றியமையாதவை. ஸ்ரீராம க்ருஷ்ண பரமஹம்ஸரிடம் எப்படிப் பகவானைப் பஜிப்பது யென்று கேட்டபொழுது முதலில் திருவருளை மனதில் த்யானித்தே பிறகு தோத்திரம் சொல்லி பஜிக்கவேண்டு மென விடையளித்தார். இக்காரணம் பற்றியே மனத்தை த்யான பஜனையிலீடுபடும் படிக்கும் பஜனைக்குமுன் த்யானத்தின் அவசியத்தை வற்புறுத்தவே த்யானமென்ற பதத்தை முன்னால் வைத்தும் "த்யானபஜன ஸேயவே" என்று "விவர்த்தனி" கீர்த்தனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "த்யானமே" என்ற கீர்த்தனத்தில் அதன் மஹிமையைச் சொல்லப்பட்டது. "பஜனை" யின் வழி என்னதென்று ஆராய்வோம்.

மனமானது புலன்கள் வழியாய்ச் செல்லவொட்டாமல் அடங்கி பரமனடி பற்றி நிற்கவே த்யானம், பஜனை, பூஜை, வழிபாடு, துதித்தல் முதலிய நற்காரியங் களைப் பெரியோர் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். மனமெய்மொழி நல்வழியில் நடந்தால் மனமானது உலகாயதத்தில் அழுந்திக்கெடாது. அடியாரைப் போற்றிப் பரமனடிபாடிய அப்பர் ஸ்வாமியும் தன் மனமடங்கவே உழவாரப்பணிவிடை மேற் கொண்டு கோயிலில் புல் சீய்த்தார். குலசேகராழ்வாரும் தன் ஐம்பெறிகளுக்கும் பகவத்பரமான வேலை கொடுக்கும் வாயிலாய் மனதை ஒருவழிப்படுத்தும் பாடலை இங்கு குறிப்பிடுவோம்.

"ஜிஹ்வே! கீர்த்தய கேசவம் முராரிபும்; சேதோ! பஜஸ்ரீதரம்;
பாணித்வ'ந்த! ஸமர்ச்சயா; ச்யுதகதா ச்ரோத்ரத்வய! த்வம்ச்ருணு
க்ருஷ்ணம் லோகயலோசனத்வய! ஹரேர்கச்சங் க்ரியுக்மாலயம்
ஜிக்ர! க்ராணமுகுந்த பாததுலஸிம்; மூர்த்தன்! நமாதோக்ஷஜம்."

## பொருள்

ஜிஹ்வே=ஏ நாக்கே! கேசவம் கீர்த்தய=கேசவனைத் துதிப்பாய், சேதோ=ஏ மனமே! ஸ்ரீ தரம்பஜ=ஸ்ரீ தரனை நினைப்பாய், பாணித்வந்த!=இருகைகளே! ஸமர்ச் சய=பரமனை அர்ச்சித்து வணங்குக, ச்ரோத்ரத்வயம்!=இருகாதுகளே! அச்யுதகதா= அச்சுதனுடைய கதையை, ச்ருணு=கேளுங்கள், லோசனத்வய=கண்காள்! க்ருஷ்ணம்

லோகய=கண்ணனைக் காண்மின், அங்க்ரியுக்ம! = கால்களே! ஹரே=ஹரியின் கோயிலுக்கு, கச்ச=போங்கள், முகுந்தபாத துலஸிம்=முகுந்தன் பாதார்ப்பணமான திருத்துளாயை, ஜிக்ர=மூக்கே, க்ராண=முகருவாய், மூர்த்தன்=தலையே! அதோக்ஷஜம் நம=அதோக்ஷஜனை வணங்குவாய். இப்பாடலும் "தலையே நீ வணங்காய்" என்ற தேவாரமும் ஒரே பொருள் கொண்டவை. இவ்விதம் வழிபட்டுப் பஜனை செய்தால் எப்படியிருக்கு மென்பதைபற்றி பரமானந்த மென்றுள்ள கீர்த்தனத்தை அடியில் குறிப்பிடுவோம். இக்கீர்த்தனமே ஸஹஜஸமாதியை வர்ணிக்கிறது.

13. பிலஹரி—ரூபகம்.

பல்லவி

இந்த கன்னனந்த—மேமி? ஓ! ராம ராம!

அ. பல்லவி

ஸந்த ஜனுலகெல்ல—ஸம்மதையுண்டு கானி || (இ)

சரணங்கள்

1. ஆடுசு நாதமுன—பாடுசு எதுடர
வேடுசு மனஸுன—கூடியுண்டேதி சாலு || (இ)

2. ஸ்ரீ ஹரி கீர்த்தனசே—தேஹாதி இந்த்ரிய,ஸ
மூஹமுலு மரசி—ஸோஹமைனதே சாலு || (இ)

3. நீ ஜபமுலு வேளனு—ஈ ஜகமுலு நீவை
ராஜில்லு நயத்யாக—ராஜ நுதசரித! || (இ)

பொருள்

சரணங்கள் :—1. நாதமுன=பண்ணுல்; பாடுசு ஆடுசு=பாடியாடிக்கொண்டு, எதுடர=எதிரில் (உன்னை) வேடுசு=வேண்டி, மனஸுன=மனதில், கூடியுண்டுடே=கூடியிருப்பதே, சாலு=போதும்.

2. ஸ்ரீ ஹரி கீர்த்தனசே=ஸ்ரீ ஹரியைக் கீர்த்திப்பதினுல்; தேஹாதி இந்த்ரிய ஸமூஹமுலு=தேகம் புத்தி மனசு இந்திரியங்கள் முதலிய கூட்டங்களை; மரசி=மறந்து; ஸோஹமைனதே=ஸோஹம் பாவமடைந்ததே; சாலு=போதும்.

3. நீ பஜனமுலு வேளனு=உன்னைப் பஜிக்கும் சமயத்தில்; ஈஜகமுலு=இவ்வுலகமுழுதும்; நீவை=நீயாக; ராஜில்லுநய=விளங்கு மய்யா; (ஆதலால்) த்யாக ராஜநுத=த்யாகராஜனுல் துதிக்கப்பட்ட, சரித=சரிதனே! அல்லது குணமுள்ளவனே!





அ. பல்லவி:—ஸந்த ஜனுலகெல்ல=ஸஜ்ஜனர்களுக்கு மிகவும், ஸம்மதை=ஸம்மதமாக; உண்டுகானி=இருக்கும் அன்றி.

பல்லவி:—ஓ ராம ராம! இந்த கன்னு=இவைகளைக்காட்டிலும், ஆனந்த மேமி?=(வேறு) ஆனந்த மென்ன இருக்கிறது?

பெரியோரால் ஆமோதிக்கப்பட்ட ஆடல்பாடல் ஜபம் முதலிய வழிபாட்டைக் காட்டிலும் மனிதனுக்கு வேறு ஆனந்தமுளதோ?

"கண்ணுண்டு காணக்கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க வீசனிருக்கையிலே
மண்கொண்டு போகுதையோ கெடுவீரிந்த மாநிலமே"

—பட்டினத்தார்.

என்னுமிப் பாடலும் ஸஹஜ ஸமாதியைப் போதிக்கிறது. இவ்விதமாகவே ஸ்ரீ அருணகிரியாரும் ஸஹஜ ஸமாதி வேண்டும் திருப்புகழும் இச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானது.

மத்யமாவதி—ஆதி.

(1) வாதினையடர்ந்த வேல்விழியர் தங்கள்; மாயமதொழிந்து—தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து; மாபதமணிந்து—பணியேனே.

(2) ஆதியொடு அந்தமாகிய நலங்கள்; ஆறுமுகமென்று—தெரியேனே
ஆனதனிமந்த்ர ரூபநிலைகொண்ட, தாடுமயிலென்ப—தறியேனே.

(3) நாதமுடன் விந்து வானவுடல்கொண்டு, நானிலமலைந்து—திரிவேனே
நாகமணிகின்ற நாத நிலைகண்டு; நாடியதில் நின்று—தொழுகேனே.

(4) ஜோதியுணர்கின்ற வாழ்வு சுகமென்ற—ஸோஹ மதுதந்து—எனையாள்வாய்
சூரர்குலம்வென்று வாகையுடன் சென்று, சோலைமலை நின்ற—பெருமாளே!

இத்திருப்புகழ் மிகவுமற்புதமான பொருள்கொண்டது. இப்பாடலில் "ஸோஹம்" நிலை யின்னதென்பதும் அதற்குச் செல்ல வேண்டியபடிகளும் மயிலின் உட்பொருளும் முருகனின் ஸ்வரூபமும் கூறப்பட்டிருக்கிறது. முதற்பாட்டில் காமினி மாய மொழிந்து மனமடங்கி மலர்கொண்டு தொழவேணுமென்று குறிப்பிட்டிருக்கிறது. மனதைப் பலமாகப்பற்றி நிற்பது காமமாதலால் மற்ற உலகப்பற்றுமதனுள் அடங்கியதே. இரண்டாவது சரணம் மயில் உருவம் என்னவென்று சொல்கிறது. வடமொழியில் ஓம் என்னும் எழுத்தின் வடிவம்—"ஓம்" மயில் தோகை விரித்தாடி நிற்பது போலுள்ளது. இவ்வெழுத்தாகிய ப்ரணவாகாரமே மயில். அதிலிருப்பது தான் பரப்ரம்ம மாகியதும் "ஓம்" என்ற ப்ரணவமந்திர வொலியுமான ஸ்ரீசுப்ரமண்யக் கடவுள். மயிலேறிய முருகனே ப்ரணவம், ப்ரம்மம் அழிவற்ற பொருள்

என்று மனதில் நினைக்கவேண்டியது. இதுவே நாதரூபம், ஒளிவடிவு, உலகின்கரு. இப்படி த்யானித்தபின் எங்குமலையாது மனதையும் உடலையும் ஓரிடத்தே ஸ்திரமாய் நிறுத்தி நாதகலை விந்துகலை யென்ற இடைபிங்கலை யென்ற கலைகளை சுழிமுனையிற் சேரும்படி யோகம் புரியவேண்டியது என்று மூன்றுவது சரணம் சொல்கிறது. இதில் "நாகம்'' என்பது முதுகிலிருக்கும் வீணாதண்டமாகிய முதுகெலும் புள்ளிருக்கும் இருகலைகளும் சஹஸ்ராராவாகிய உச்சி மூளையும். நாதநிலை யென்பது யோக சித்தியால் உள்ளே கேழ்க்கும். ஓங்காரவோசை. இந்த நாதநிலையால் வெளியுலகம் யோகியின் கண்ணினின்று மறைகிறது. இதற்கப்பால் புருவமத்தியில் "ஜோதி" தோன்றும். இச்சோதி வடிவே பரமாத்மா. ஸோஹம்=அப்பொருளே தானென்றவுணர்ச்சி. இதுவே பெருவாழ்வும் சுகமுமாமென்று நான்காவது சரணத்தின் முடிவு. யோகமார்க்கத்தில் எப்படி "ஸோஹம்" பாவனையடையலாமோ அதுபோல் பக்தி மார்க்கத்திலும் ''ஸோஹம்'' கைகூடுமென்று அய்யரின் அனுபவத்தை மேற்கண்ட கீர்த்தனத்தில் சொல்கிறார்.

## பக்தி

ராகம்—பிலஹரி.

பல்லவி

பக்தியினாலே—தெய்வ—பக்தியினாலே

சரணங்கள்

பக்தியினாலே—இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும்—இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும்—நல்ல
வீர ருறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவ முண்டாம்—நெஞ்சிற்
சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும். (பக்தியினாலே)

காமப் பிசாசைக்—குதிக்
கால் கொண்டடித்து விழுத்திட லாகுமித்
தாமஸப் பேயைக்—கண்டு
தாக்கி மடித்திட லாகுமெந் நேரமும்
தீமையை எண்ணி—அஞ்சுந்
தேம்பற் பிசாசைத் திருகியெறிந்து பொய்ந்
நாமமில்லாத—உண்மை
நாமத்தினாலிங்கு நன்மை விளைந்திடும். (பக்தியினாலே)



# திருமயிலையின் மாட்சி

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

திருமயிலை சென்னப்பட்டணத்தின் தென்புறத்தில் சமுத்திரத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இங்கு ஓர் அழகிய கோயிலும் அதன் எதிரில் ஓர் அழகிய தாமரைக்குளமும் இருக்கின்றன. இக்கோயிலில் கபாலீச்வரரும், கற்பகாம்பிகையும் தங்கள் திவ்யதரிசனத்தினால் பக்தர்களை சந்தோஷிக்கச் செய்கின்றனர். இந்த ஸ்தலத்துக்கு பல வகையில் சிறப்பு உண்டு. இந்த விசேஷ இடத்தில் தான் உலக மாதாவான பார்வதிதேவியார் மயிலுருவங்கொண்டு சிவபிரானை புன்னைமரத்தடியில் பூஜை செய்து பிறகு மயிலுருவம் நீங்கி கடவுளை அடைந்தாள். இங்கு தான் பக்தர்களுள் சிறந்த வாயில்லா நாயனார் அவதரித்தார். இங்குதான் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவ நாயனார் அவதரித்தார். இங்குதான் சம்பந்த ஸ்வாமிகள் சிவநேசன் செட்டியாரின் புதல்வி பூம்பாவையம்மாளை மறுபடியும் உயிருடன் எழுப்பினார். இந்த நான்கு காரணங்களால் மயிலைக்கு ஏற்பட்ட சிறப்பு ஒரு நாளும் குறையாமலிருந்து வருகிறது.

## உலகமாதா ஸ்ரீ பார்வதி தேவியார் மயிலுருவம் கொண்ட வரலாறு

ஒரு நாள் கைலாயத்தில் பரமசிவனும் பார்வதி தேவியும் வீற்றிருக்கையில் அவர்களை தரிசிக்க அநேக முனிவர்கள் வந்தனர். அவர்களுக்கு பகவான் புனிதமான புத்திமதிகளைப் புகட்டினார். பின்னர் அவர்கள் சென்றதும், பார்வதியை நோக்கி, தேவியாருக்கு, விபூதி, ருத்ராக்ஷம், பஞ்சாக்ஷரம், முதலியவைகளின் மகிமைகளை எடுத்துக் கூறினார். கடவுள் இவ்வாறு சொல்லிவரும்பொழுது தேவியாரின் மனம் சமீபத்திலிருந்த ஓர் மயிலின் மேல் பற்றியது. அதை யறிந்த பகவான் "உன் மனம் மயிலில் பற்றியதால் நீ மயிலாக ஆகக்கடவாய்" என்று சபித்தார். தேவியார் பயந்து பலவிதமாக மன்னிப்புக்கள் கோர கடவுள் "நீ மயில் உருவத்துடன் கபாலிபுரம் சென்று, அங்கு லிங்க ரூபமாய் விளங்கும் என்னைப் பூஜை செய். உன் சாபம் அப்பொழுது நீங்கும்,'' என்று கூறினார். தேவியார் அவ்வாறே மயிலுருவங் கொண்டு கபாலீச்வரரைப் பூஜித்து சாபம் நீங்கியதால் இந்த ஸ்தலத்திற்கு திருமயிலை அல்லது மயிலாப்பூர் எனப் பெயர் ஏற்பட்டது.

## வாயிலா நாயனார் வரலாறு

வாயிலார் திருமயிலையில் வேளாள குலத்தில் உதித்த ஓர் உத்தமர். சிறு வயது முதல் சிவபிரானிடம் பக்தி பாராட்டி வந்தார். வயது ஆக ஆக அவருடைய பக்தி அதிகரித்தது. உலக வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு மௌனவிரதம் பூண்டார். கண்ணை மூடிக்கொண்டு எப்பொழுதும் மனதால் சிவனைப் பூஜை செய்ய ஆரம்பித்தார். தன் மனதில் சிவபிரானுக்கு ஓர் அழகிய கோயில் கட்டி, அதில் பகவானை லிங்க ரூபமாய் அமர்த்தி, அவருக்கு அலங்காரம் செய்து அந்த அழகிய உருவத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்

தார். இவ்வாறு தன் வாழ் நாட்கள் முழுவதும் மௌனமாயிருந்து சிவபிரானை வழிபட்டதால் இவருக்கு வாயிலார் எனப் பெயர் ஏற்பட்டது.

## திருவள்ளுவரும் அவர் மனைவியும்

திருவள்ளுவர் மகா பெரிய ஞானி. அவர் மனைவி வாசுகியம்மையார் மகா உத்தமி. கணவன் மனம் கோணாது நடப்பவள். ஒருநாள் ஒருவர் திருவள்ளுவரைப் பார்க்க வந்தார். அவர் வந்த காரணத்தை திருவள்ளுவர் கேட்க அவர் "ஸ்வாமி, இல்லறம் மேலா? துறவறம் மேலா? இதை உங்களிடமிருந்து அறிய வந்தேன்" என்றார். "நீங்கள் கேட்ட கேள்வி மிக்க கடினமானது. உடனே பதிலுரைக்க முடியாது. நீங்கள் இங்கு என் வீட்டில் சிலகாலமிருந்தால் உங்களுக்குத் தெளிவாய் பதிலுரைக்கிறேன்" என்றார் திருவள்ளுவர். வந்தவர் அதைக்கேட்டு அவ்வாறே சந்தோஷமாய் திருவள்ளுவர் வீட்டில் வசித்து வந்தார்.

ஒரு நாள் திருவள்ளுவரும் வந்த அதிதியும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, திருவள்ளுவர் தன் மனைவியைக் கூப்பிட்டார். அம்மாது அப்பொழுது கிணற்றிலிருந்து ஜலம் இழுத்துக்கொண்டிருந்தாள். புருஷன் தன்னைக் கூப்பிட்டது காதில் பட்டவுடனே அரைக்கிணறு வந்துகொண்டிருந்த பாத்திரத்தை விட்டு முன் பின் யோசியாமல் கணவனிடம் ஓடினாள். ஏற்றக் கயிறும் அப்படியே நின்றது. இதைப் பார்த்து அதிதி வியப்படைந்தார்.

மற்றொருநாள் பகலில் தைக்கும் ஊசி கீழே விழுந்துவிட்டது. அதைத் தேட திருவள்ளுவர் தன் மனைவியை ஓர் விளக்கு கொண்டுவர உத்தரவிட்டார். அம்மாது "பகலில் ஊசியைத் தேட விளக்கு எதற்கு", என்று கேட்காமல் விளக்கை எடுத்துக்கொண்டு ஓடிவந்தாள். இதைப் பார்த்த அதிதிக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவில்லை.

மற்றும் ஒருநாள் திருவள்ளுவர் பழயது சாப்பிடுங் காலத்தில் "அப்பா என்ன சூடு; கை எரிகிறது, விசிறியை உடனே எடுத்து வா" என்று உத்தரவிட்டார். வந்த அதிதி இப்பொழுது திருவள்ளுவரின் மனைவி என்ன செய்யப் போகிறாள் என்று வியப்புடன் நோக்குங்கால் அம்மாது கணவன் உத்தரவின்படி விசிறியைக்கொண்டு வந்து விசிறினாள். இதைப் பார்த்த அதிதி இல்லற தர்மத்தின் உண்மையை திருவள்ளுவர் சொல்லாமலே அறிந்தார். அவர் அறிந்தது பின்வருமாறு:

> பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
> எத்தாலும் கூடி வாழலாம்.

## பூம்பாவை உயிர் பெற்ற வரலாறு

திருமயிலையில் சிவநேசன் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மகா சிவபக்தர். வெகுகாலம் குழந்தையில்லாமல் கடைசியாக சிவபிரானின் அருளால் ஒரு அருமைப் புதல்வியை அடைந்தார். அதை வெகு செல்வமாய் வளர்த்து வந்தார். பூம்பாவை என்ற அப்பெண் ஓர் தினம் நந்தவனத்தில் பூக் கொய்து கொண்டிருக்கும் பொழுது கருநாகத்தினால் தீண்டப்பட்டு உயிர் துறந்தாள். உடனே சிவநேசன் செட்டியார் திருவாலங்காட்டிற்கு வந்திருந்த ஞானசம்பந்தரை அழைத்தார். அவரும் திருமயிலைக்கு வந்து கபாலீச்வரரை தரிசித்து

> "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
> கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்மர்ந்தா
> னொட்டிட்ட பண்பினுருத்திர பல் கணத்தார்க்
> கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்ற பதிகத்தைப் பாடியதும் பூம்பாவையாள் உயிருடன் எழுந்தாள்.

இத்தகைய சிறப்புகளினால் மயிலைக்கு மாட்சிமை ஏற்பட்டது.

ஓர் முறையாவது சகோதரிகள் திருமயிலைக்குச் சென்று, கபாலீஸ்வரனையும் கற்பகாம்பாளையும் தரிசித்து பேறு பெறுவார்களாக.



# கண்களின் வசீகரம்

"சுசீலா"

கண்களே ஆத்மாவின் ஜன்னல்கள் என்று கருதப்படுகிறது. ஆத்மஜோதியின் பிரகாசத்தை வெளிப்படுத்தும் சாளரங்களே நயனங்கள். நம்முடன் பழகுபவர்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு நமக்கு மிகவும் உதவியாக இருப்பது நமது கண்களே. கண்களின் வசீகரத் தன்மையாலும் கூரியபார்வையாலும் சமூகத்தை நாம் எளிதில் வென்று விடலாம். ஒரு மனிதனிடம் காணப்படும் வசீகர சக்திக்கும், பிறரை தன் வசப்படுத்தும் தன்மைக்கும் (Personal magnetism) முக்கிய காரணம் கண்களே. பிரகாசமும், அழகும் மிகுந்த கண்களையுடையவர்கள் எளிதில் பிறரை தங்கள் வசப்படுத்தலாம். மந்தமான பார்வையும் சோபையுள்ள கண்களுமுடையவர்கள் மற்றவரின் மதிப்பைப்பெற முடியாது. அப்பேர்பட்ட குறைகளுள்ள கண்களையுடையவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவது மிகவும் சிரமம். எனவே உலகத்தில் பலரும் கௌரவிக்கப்பட்டு ஜெயக்கொடி நாட்ட விரும்பும் ஒவ்வொருவரும் தீட்சண்யமான பார்வையும், வனப்பு மிக்க கண்களையுமுடையவர்களாக இருக்க வேண்டும். அதிலும் ஸ்திரீகளுக்கு கண்களின் அழகே மிகவும் பிரதானம். ஆடவர்களின் மனதை அவர்களின் பார்வையே ஆட்டிப் படைக்கக் கூடியது. வள்ளுவர் முதலிய பண்டைய ஆசிரியர்களும் அப்பார்வையின் சக்தியைப் பலவாறாகப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். எனவே தங்கள் வாழ்க்கையை வெற்றியுடன் நடத்த விரும்பும் ஒவ்வொரு மங்கையும் தங்கள் கண்களின் வசீகரத்தை அதிகரிக்கச் செய்ய முயலவேண்டும்.

கண்களின் அழகை அதிகப்படுத்தவும், அவற்றின் பலத்தை மிகுதியாக்கவும் கண்களின் அமைப்பைப்பற்றிய பூராவிவரங்களையும் நாம் உணர்ந்திருக்கவேண்டியது அத்தியாவசியமன்று. கண்ணும் பெரும்பாலும் தசை நாரால் செய்யப்பட்ட அவயவமே. தசைநார்களால் ஆக்கப்பட்ட எந்த அவயவங்களும் சரியான பயிற்சி அளிக்கப்பட்டால் எப்படி உரமும், அழகும் பெறுகின்றனவோ அதே போல் கண்களுக்கும் தகுந்த அப்பியாசமும், பயிற்சியும் கொடுத்து வந்தால் அவைகள் நன்றாக இருக்கும்.

கண்கள் தங்கள் வேலையைச் சரிவரச் செய்யவும், அழகான பார்வையுடனிருக்கவும் வேண்டுமானால் உடம்பில் நல்ல ரத்தமிருக்கவேண்டும். சுத்தமான இரத்த ஓட்ட மிருந்தால்தான் கண்களும் பிரகாசமாயிருக்கும். கண்களின் ரத்தஓட்டம் சரியாயிருக்க அவைகளுக்குள்ளேயும், பக்கத்திலுமுள்ள தசை நார்களுக்குப் போதிய அப்பியாசம் ஒழுங்காகக் கொடுத்து வர வேண்டும். எதற்கும் பொதுவாக தேகம் ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்கவேண்டும். கண்கள் அழகாக இருக்கவேண்டுமானால் ஆரோக்கியமில்லாமல் முடியாது. ஆரோக்கியம் கெட்டால் கண்களும் குழிவிழுந்து ஒளிமங்கி மாசு படிந்து கெடும். எனவே பொதுவாக

உடல் வளம் பெற்றும், சௌக்கியமாகவும் இருக்கும்படி செய்தால்தான் கண்களும் ஒளியுடனும், எழிலுடனும் விளங்கும். நமது தேகத்தின் பொது ஆரோக்கியம் நன்றாக இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். கண்களின் தனி வளர்ச்சிக்காக நாம் என்ன செய்யவேண்டுமென்று கவனிக்கலாம்.

கண்ணைச் சுற்றி மெத்தைபோல் மிருதுவான கொழுப்பு இருக்கிறது. அது கண் தன் வேலையைச் சரிவரச்செய்ய உதவுகிறது. திடீரென்று ஏற்படும் அதிர்ச்சிகளாலும், நடுக்கங்கள் ஆடல்களாலும் கண்ணுக்குத் தீமையுண்டாகாவண்ணமும் அந்தக் கொழுப்பு மெத்தை காப்பாற்றுகிறது. கண்களின் தசை நார்களின் முக்கியவேலை கண்மணிகள் பல பக்கங்களிலும் சுழன்று பார்க்க உதவுவதே. எனவே கண்களுக் களிக்கப்படும் அப்பியாசங்களும் அதற்குகந்தவையாக இருக்கவேண்டும்.

ஆகையால் தங்கள் கண்கள் வசீகரத்துடன் விளங்கவேண்டுமென்று விரும்புபவர் அவைகளுக்கு ஒழுங்காகப் பயிற்சியும், அப்பியாசமும் கொடுக்கவேண்டும். கண்மணிகளை பத்து தடவை மெள்ள இடது பக்கமும், வலதுபக்கமும் போகும்படி அசைக்கவேண்டும். அதுபோலவே மேலும் கீழும் உருளும்படி பத்துதடவையும், சுழற்சியாக பத்துதடவையும் சுழலச் செய்யவேண்டும். இந்த அப்பியாசங்கள் செய்யும்போது ஒவ்வொன்றுக்கும் இடையில் சில வினாடிகள் ஓய்வுநேரம் இருக்கவேண்டும். பின் கண்களை உறுத்தாதபடி இறுக மூடிக்கொண்டிருந்து கொஞ்ச நேரம் கழித்து மெள்ள திறக்கவேண்டும்.

இந்த அப்பியாசங்கள் முடிந்தவுடன் உங்கள் விரலையோ அல்லது ஒரு பென்ஸிலையோ நமது மூக்கிலிருந்து ஆறு முதல் ஒன்பது அங்குல தூரத்தில் அசையாமல் நிறுத்தி வைத்து அதன் முனையை இமை கொட்டாமல் பார்க்கவேண்டும். திடீரென்று பார்வையை எடுத்து வெகு தூரத்திலுள்ள ஒரு பெரிய மரத்தின் உச்சியையோ, ஒரு மாதாக் கோவிலின் கோபுரத்தின் சிகரத்தையோ அல்லது ஆகாயத்திலுலாவும் மேகக் கூட்டங்களின் ஒரு பாகத்தையோ பார்த்துவிட்டு மறுபடியும் அந்தப் பென்ஸில் நுனியின்மீது திருஷ்டியை அசையாதபடி செலுத்தவேண்டும்.

இதேபோல துரிதமாக பத்து தடவைகள் செய்யவும். இதில் கூறப்பட்டுள்ள அப்பியாசங்கள் வெகு எளிதாகவும், சர்வசாதாரணமானதாகவும், லகுவானதாகவும் தோன்றுகின்றனவல்லவா? வாஸ்தவந்தான். அவைகள் சுலபமாகச் செய்யக்கூடிய அப்பியாசங்களே. ஆனால் இந்த அப்பியாசங்களை ஒழுங்காகமட்டும் ஒருவர் அப்பியசித்து வந்தால் அதனால் ஏற்படும் பலன் வெகு ஆச்சர்யமானதாக இருக்கும். இதன் பலனை ஒரு மாத அப்பியாசத்துக்குள்ளாகவே தெரிந்துகொள்ளலாம்.

அடுத்தாற்போல் கண் தசைகளை வருடிப் பிடித்தலையும் (Massage of the eyes) கவனிப்போம். நம்விரல்களின் நுனியை, கண்களை மூடிக்கொண்டு இமைகளின் மேல் வைத்து மெதுவாக இடதுபுறமும், வலதுபுறமுமாக தடவவும். அப்படியே மேலும் கீழாகவும், சுற்றி சுற்றியும் தடவிக்கொண்டிருக்கவும். சுமார் ஒரு நிமி





ஷம் இது மாதிரி தடவிக்கொண்டிருந்தால் போதும். இதுமாதிரிப்பிடித்து விடுவதால் கண்களின் ரத்த ஓட்டம் சரியாகின்றது; சுற்றுவட்டாரத்திலும் ரத்த ஓட்டம் சரியாக்கப்படுகிறது. கண்களிலுள்ள நுண்ணிய அழுக்குகளும் வெளியேவந்து விழுந்து விடும். ரத்தம் சுத்தமாகும்.

மேலே கூறியபடி 'மாஸேஜும்' கொடுத்து, விவரிக்கப்பட்ட அப்பியாசங்களையும் ஒழுங்காகச்செய்து அத்துடன் சுத்தமான குளிர்ஜலத்தால் கண்களைக் கழுவியும் வந்தால் (Pure cold water bath) வெகு சீக்கிரமே நூற்றுக்கு நூறு பங்கு குணமும் (Cent per cent improvement) திருத்தியும் கட்டாயமேற்படுமென்று திட்டமாய்ச் சொல்லலாம். கண்களைக் 'குளிப்பாட்டு' வதற்கு பல முறைகள் கையாளப்பட்டு வருகிறது. சிலர் கண்களை மூடிக்கொண்டு அதன்மேல் ஜலத்தைத் தெளித்துக்கொள்ளுகிறார்கள். சிலர் பேஸினிலோ அல்லது கண் கிண்ணங்களிலோ (Eye-cup) சுத்தமான குளிர்ந்த ஜலத்தை விட்டு அதில் கண்களை மூடிக்கொண்டு முழுகி ஜலத்துக்குள் கண்களிருக்கும் போதே இரண்டு மூன்று தடவைகள் கண்களை திறந்து திறந்து மூடுகின்றார்கள். இதுவே மிகவும் சுலபமான முறை. கண்கிண்ணங்கள் நாலணாவுக்கு எந்தமார்க்கட்டிலும் கிடைக்கும்.

நயனாஞ்சனம் அல்லது கண்ணுக்கிடும் மையும் கண்களுக்குக் குளிர்ச்சியையும் வசீகரத்தையும் அளிக்கின்றது. விளக்கெண்ணையைக் கண்ணில் விட்டுக் கண்களைக் கொஞ்சம் கசக்கிவிட்டுப்பின் சுத்தம் செய்து கொள்ளுவதும் கண்ணுக்கு நல்லது. நம் சகோதரிகள் இதுபோன்ற லகுவான முறைகளைக் கையாண்டு பிரகாசமும் வசீகரமும் உள்ள தாமரைக் கண்களை அடைந்து தங்கள் வேல் விழிப் பார்வையால் உலகை ஆண்டு ஜகமெங்கும் இன்பம் இலங்கும்படி செய்வார்களாக! எண்சாணுடம்புக்கு சிரசே பிரதானம்; சிரசுக்கு நயனங்களே முக்கியம்; கண்களுக்கு வசீகரமே உயிர் நிலை!

# விமலையின் சந்தேக விடுதலை

டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

ஒரு நாள் காலை, விமலை, தன் வேலையைச் சமையலறையில் முடித்த பின்பு, தன் கணவன் அறைக்குப்போய் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டுபோக நுழைந்தாள். அச்சமயம் அவ்வறையிலிருந்த அலமாறி திறந்திருப்பதைக்கண்டு, அதனுள்ளிருக்கும் புத்தகங்களையும் காகிதக் குவியலையும் பார்க்கலானாள். காகிதக் குவியலின் மேல் தன் கண்களுக்கு நன்ருய்ப் புலப்படும் படியான ஒரு பெண் மணியின் படம் இருப்பதைக் கண்டுவிட்டாள். எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கினாள். தன் கணவன் வேலையிலிருந்து திரும்பும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சந்தேகமும் ஏக்கமும் அந்தப் பகல் முழுதும் அவளை வருத்திக்கொண்டிருந்தன.

விமலையின் கணவன் மாணிக்கம் மாலை வீட்டை அடைந்தான். தன் சந்தேகத்தைக்காட்டிக் கொள்ளாமலே விமலை, அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை செய்து உணவு பரிமாறினாள்.

போஜனம் முடிந்ததும் விமலை தன் கணவனை நோக்கி, "ஏதாவது விளையாட்டாய்ப் பேசலாம் வருகிறீர்களா?" என்று ஆரம்பித்தாள்.

மாணிக்கம் புன்சிரிப்புடன், "ஆகா சந்தோஷமாய் வருகிறேன்," என்று விடையளித்து "எதைப் பற்றிப்பேசுவது?" என்று கேட்டான்.

"அது மிகவும் நுட்பமான விஷயம். நான் சொல்லுவதற்கு முன் நீங்கள் நான் கேட்கும் ஒவ்வொன்றிற்கும் உண்மையேயன்றிப் பொய் சொல்வதில்லை என்று வாக்குறுதி கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் நான் அந்தப் பேச்சையெடுக்கச் சம்மதிப்பேன்," என்று ஒரு பீடிகை போட்டாள்.

"சரி" என்று வாக்குறுதி கொடுத்தான் மாணிக்கம்.

"உங்கள் காளைப்பருவத்தின் பொழுதெல்லாம், அதாவது என்னைக்கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பு, யாரேனும் ஒரு பெண்ணைத் தாங்கள் காதலிக்கச் சந்தர்ப்ப மேற்பட்டதா?" என்று விஷமத்ததும்பும் பார்வையோடு விமலை தன் கணவனைக் கேட்டாள்.

மாணிக்கத்துக்குக் கோபம் வந்து விட்டது. எனினும் சற்றுப் பொறுமையாய் எதற்காக அவள் இந்த விதமான குறும்புக் கேள்வியைக் கேட்டாள் என்று சிந்தித்தான். ஒன்றும் புலப்படவில்லை. இருந்தாலும் இத்தகைய குறும்புக் கேள்விக்குப் பதில் சொல்லுவதே சரி என்று முடிவு செய்து, "ஆம், அத்தகைய சந்தர்ப்ப மேற்பட்டதுண்டு" என்றான்.

விமலை:—அப்பெண் மணி யாரென்று எனக்குச் சொல்லுங்களேன்.

மாணிக்கம்:—"மோகனம்" என்று ஒருத்தி இருந்தாள்.

விமலை:—காதல் வேட்டை எப்படி? ஜெயம்தானே?



மாணிக்கம்:—ஆம். நாங்களிருவரும் கை கோர்த்துக்கொண்டு உல்லாசமாய் கடற்கரைக்குப் போவது வழக்கம்.

விமலை:—என்ன துணிச்சல்! கேள்வி கேட்பாடு ஒன்று மில்லையா?

மாணிக்கம்:—அப்படி ஒன்றும் ஏற்பட்டதில்லை.

விமலை:—சரி, சரி, என் சூரரே! மேலே சொல்லுங்கள். இன்னும் என்ன நடந்தது?

மாணிக்கம்:—மரங்களுக் கடியிலுள்ள இருட்டில் நாங்கள் உட்கார்ந்து நெடுநேரம் பேசுவோம். சில சமயங்களில் நடு இரவில் கூட மனந்தோன்றியபடியெல்லாம் சுற்றுவோம்.

விமலை:—அவள் தலையில் இடி விழ! மேலும் சொல்லுங்கள்.

விமலை குறும்புத்தனமாய்க் கேட்டதற்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மாணிக்கம் மேலும் "கதைவிட" ஆரம்பித்தான். "விமலா! மேலும் எனக்குச் சொல்லப் பைத்தியமா? நீ விழிக்கிறதைப்பார்த்தால் என் என்னைக் கொன்று விடுவாய் போலிருக்கிறதே" என்றான்.

விமலை:—இல்லை. பயப்படாதீர்கள்! எனக்கு இன்னும் கேட்க ஆவலாயிருக்கிறது. இத்துடன் நிறுத்திவிடாது கூறுங்கள்.

மாணிக்கம்:—அவள் என் வாயில் இனிமையான தின்பண்டங்களை ஊட்டுவாள்.

விமலை:—உம். அதுவும் செய்வாளா? என்ன அன்பு. அப்புறம்!

மாணிக்கம்:—எனக்குக் கணக்கற்ற முத்தங்கள் தந்திருக்கிறாள்.

விமலை:—அப்போது நீங்கள் அதினின்றும் விலகிக்கொள்ள முடியவில்லையா?

மாணிக்கம்:—எப்படி விமலா விலகமுடியும்? நீயே சொல்லு. நான் அப்போது தேவலோகத்தில் இருப்பது போலல்லவா நினைத்தேன்.

விமலை:—அந்த லோகம் கூடவா உங்களுக்குக் கிட்டிவிட்டது. சரி! சரி! அப்பெண் இன்னும் உயிருடன் இருக்கிறாளா? அவள் பெயரென்னவோ?

மாணிக்கம்:—இன்னும் இருக்கிறாள். பெயர்தான் "மோகனம்" என்று அப்பொழுதே சொன்னேனே.

பாவம்! விமலையின் வதனம் வர வர வெளுத்துக்கொண்டே வந்தது. சரீரம் பதறிற்று. அழகிய கன்னங்களில் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. திடீரென்று "இந்த பாதகியா அவள்!" என்று கோபமாய்க் கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த ஒரு போட்டோவை எடுத்து தன் கணவன் முன் எறிந்தாள்.

மாணிக்கம் "விமலா! ஏன் என்னைப் பாதகி என்கிறாய்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

விமலை:—கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். என்னை இனி தாங்கள் ஏமாற்றவே முடியாது.



ஸ்ரீ தேவி தாதனி

(இங்கிலாந்து சென்று கிரஹ நிர்வாஹ சாஸ்திரத்திலும், மனோதத்துவத்திலும் உயர்தரப்பயிற்சி பெற்று சமீபத்தில் இந்தியா வந்து சேர்ந்தார்.)



# உறுதிபூண்ட உமா

ஸ்ரீமதி கே. கமலா

குண்டலபுரமென்னும் பட்டணத்தில் கும்பேசன் என்றொரு வைஷ்ணவனிருந்தான். அவன் ஒரு சமயம் கப்பலில் சரக்கேற்றிக்கொண்டு வியாபார நிமித்தம் அயல் நாடுசென்று மூன்று வருஷகாலம் தங்கி இருக்கையில், அந்நாட்டில் தனக்கறிமுகமான தேவசேனன் என்பவனின் மகளான தையநாயகியைக் கண்டு மிக்க ஆசைகொண்டு, அவர்கள் சைவ மதத்தினராக இருப்பதை அறிந்தாலும் தையநாயகியிடமிருந்த ஆசையால் அதைப் பொருட்படுத்தாமல் அவளை விவாகம் செய்துகொண்டு இரண்டு வருஷகாலம் சந்தோஷமாக இருந்து பிறகு மனைவியுடன் தனது நாட்டிற்குத் திரும்பினான்.

கும்பேசன் மனைவிசகிதம் பந்துக்களிடையில் வந்தபிறகு பந்துக்களனைவரும் "தையநாயகி சைவவீட்டுப் பெண்ணாக இருப்பதுடன் பராசக்தியை பக்தி பூர்வமாய் ஆராதித்து வருவதாலும் அவள் வைஷ்ணவமான நமது வீட்டிலிருப்பதே பாவமென்றும் அப்பாபத்தினால் தான் கும்பேசனுக்கு அதுவரையில் ஒரு குழந்தையும் பிறக்கவில்லை என்றும்" தினம் கும்பேசனிடம் போதனை செய்யவே, திடசித்தமில்லாத கும்பேசனும் நாளடைவில் தையநாயகியிடம் வெறுப்படைந்து, அவள் கருவுற்றிருப்பதையும் அறியாதவனாய், சிறிது பொருள் கொடுத்து தனது மனைவியை அவள் தன்னிடமிருக்க அருகதையற்றவள் என்று கூறி அவள் அவளது பிறந்தேசம் செல்லுமாறு வீட்டினின்றும் வெளிக்கடத்திவிட்டான்.

பதிவ்ருதையான தையநாயகி தான் பிறந்த நாடு செல்ல மனமற்றவளாய், கணவனிருக்கும் ஊருக்குச் சிறிது தூரத்திலுள்ள ஓர் சிறுகிராமத்தில் ஓர் எளிய இடத்தில் வசிக்கச் சென்றாள்.

கும்பேசன் தனது முதல் மனைவியைத் துரத்திவிட்ட பிறகு தனது வைஷ்ணவ மதத்திலுள்ள ஓர் பெண்ணை மணந்து சுகமாக இருந்தான்.

கணவனால் துரத்தப்பட்ட தையநாயகி தனக்கு எத்துயர் நேர்ந்த போதிலும் பராசக்தியே துணை என்று திடநம்பிக்கையுடன் தன்னை தன்னுயிர்போகுமுன் கணவனிடம் சேர்த்து வைக்கவேண்டுமென்று வேண்டினவளாய், அக்கிராமத்தில் எல்லையோரத்திலிருக்கும் காளியம்மனைத் தொழுது வந்தாள்.

கணவனால் துரத்தப்பட்ட ஒன்பதாம் மாதம் ஓர் சுபதினம் இரவில் சுபவேளையில் தையநாயகி ஓர் மகவை ஈன்றாள். அக்குழந்தைக்கு 'உமா' வென்று பெயரிட்டு வளர்த்துவர, அக்குழந்தையும் தனது தாயின் குணத்தையொட்டி நற்குணத்தை ஆபரணமாகப் பூண்டு பிரகாசித்தாள்.

உமாவிற்கு வயது ஒன்பதாயிற்று. ஓர் தினம் அவள் தனது ஒத்த சிறுமிகளுடன்

மாணிக்கம் :—"கண்மணி விமலா! நான் சொல்வதைக் கேள்" என்று விமலையை நெருங்கினான்.

விமலை :—"கண்மணியா? போதும் நிறுத்துங்கள். மோகனமல்லவா உங்கள் கண்ணின் மணி. அந்த உங்கள் பெண் பாவை எங்கிருக்கிறாளென்று தெரிவியுங்களேன். நான் அந்த அழகியைப் பார்க்க வேண்டும்" என்று தழுதழுத்த குரலில் அழுதுகொண்டே கேட்டாள்.

மாணிக்கத்தின் மனம் இளகிவிட்டது. "விமலா! இங்கே பார்! அழாதே! போட்டோவில் இருப்பது நானே. இனி மேல் இந்தமாதிரி விஷமமான கேள்விகள் கேட்காதே" என்று சிரித்துக்கொண்டே கூறினான்.

விமலை :—"இன்னுமா என்னை ஏய்க்கிறீர்கள்" என்று மேலும் அழலானாள்.

மாணிக்கம் :—கண்ணே! ஆத்திரப்படாதே. நான் நாடகச் சபையில் சேர்ந்திருந்தபோது பெண் வேடம் போட்டுக்கொண்டு "கிரௌன்ஸ்டுடியோ"வில் (Crown studio) எடுத்தபடம் இது. என்னை எல்லோரும் "மோகனம்" என்றழைப்பதை நீ கேட்டதில்லையா? நன்றாய்ப் படத்தை உற்றுப் பார். நீ இவ்வாறெல்லாம் வீண் சந்தேகம் என்மேல் கொள்ளலாமா?

மாணிக்கம் இவ்வாறெல்லாம் கூறிய பின், விமலையின் மனதில் உண்மை புலிச் சென்று புலப்பட்டது. வெட்கமடைந்தாள். இதுவரையில் கெட்ட எண்ணத்துடன் மாணிக்கத்தை நிந்தித்ததற்கு மிகவும் வருந்தினாள்.

"தயவுசெய்து என்னை மன்னியுங்கள்" என்று அவள் இரக்கம் குடிகொண்ட குரலில் சிரந்தாழ்த்திய வண்ணம் மாணிக்கத்தை வேண்டினாள். மாணிக்கமும் அவளது கரங்களைப் பிடித்து முத்தமிட்டு சிரித்தான். விமலையும் சிரித்தாள்.





பம்பாயில் திரு. ஜி. பி. ஹாதிசிங் தலைமையில் 'சைனுதினம்' கொண்டாடப் பட்டபோது தேசசேவகிகள் கொடி விற்கப் புறப்பட்ட காட்சி. இடது புறத்தில் 3வது நிற்பது ஸ்ரீமதி. சோபியாகான்.

விளையாடிக்கொண்டிருக்கையில் சச்சரவு ஏற்படவும் மனம் வேறுபட்டு நின்றனர். அப்பொழுது ஓர் வாயாடிச்சிறுமி மற்றொருவளைப் பார்த்து "அடி இந்த உமா நம்மிடம் ரொம்பவும் நியாயம் பேசவந்துவிட்டாளே. முதலில் அவளுடைய பவிஷு அவளுக்குத் தெரியுமா? அப்பனறியாப் பெண்ணுக்கு வாயென்னடி?" என்றாள். உடனே மற்ற சிறுமிகள் யாவரும் கூடி "ஏண்டி உமா உனக்கு அப்பாவைத் தெரியாதா? அப்பண்ணா உன் அம்மா தேவடியாளாடி?" என்று பரிகசித்து நிற்கவும் உமாவிற்கு பதில் கூறத் தெரியாமல் அழுதபடி தன் தாயிடம் ஓடிச் சென்று, நடந்த விஷயங்களைக்கூறி "அம்மா என்னுடைய அப்பா யாரு? உண்மையைச் சொல்லு. இல்லாவிட்டால் நீ தேவடியாளா?" என்று கேட்டாள். தையநாயகி மனம் வருந்தி, அவளது தந்தை யார் என்பதையும், மற்ற விஷயங்களையும் விவரமாக எடுத்துரைத்தாள்.

அதைக்கேட்ட உமா "அம்மா நான் இன்னும் மூன்று தினத்திற்குள் எனது தந்தையிடம் சென்று என்னை அவரது பெண் என்பதை ஏற்கச்செய்து, என்னைப் பரிகசித்த பெண்களின் வாயை அடக்காவிட்டால் என் பெயர் உமா அல்ல," வென்று உறுதிகூறி, தாய் என்ன சொல்லியும் கேளாமல் குண்டலபுரத்திலுள்ள கும்பேசனது வீட்டினுள் நுழைந்து, பலபந்துக்களுடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் தனது தந்தையருகில் சென்று நமஸ்கரித்து "தந்தையே, சைவ மதத்தினள் என்ற ஒரேகாரணத்தால் உத்தமியான உமது மூத்த மனைவியைத் துரத்திவிட்டு இந்நாள் பரியந்தம் கவனியாதிருந்தாலும் உமது புத்திரியாகிய நான் இப்பொழுது உம்மை வந்தடைந்து வணங்கியபடியால் என்னையும் என் தாயையும் ஏற்றுக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டினாள்.

களைததும்பும் உமாவின் முகத்தையும் அவளது தைரியத்தையும் கண்டு ஆச்சரியப் பட்டானாயினும், மறுக்ஷணமே கோபமூண்ட கும்பேசன் "ஓகோ, நீ அந்தத் தையநாயகியின் பெண்ணாக இருக்கலாம். ஆனால் நீ எனக்குப் புத்திரியல்ல. அவள் தனது துர்நடத்தையால் உன்னைப் பெற்றாள் போலும்! நீ எனது புத்திரியல்லவென்பதை நான் கூறுவதுடன் இங்கிருக்கும் இவ்வளவு பேர்களும் கூடச் சொல்லுகின்றனர். இனி க்ஷணம் கூட உன் அவமான பேச்சைக் கூறிக்கொண்டு நில்லாதே ஓடிப்போ" வென்று கடிந்து கூறினான். உமா யாவரையும் நோக்கிவிட்டு, "ஓ தந்தையே! நான் உமது புத்திரி. என் தாய் உத்தமி; இது சத்தியம். கடவுள் நீதியுள்ளவர் என்பது உண்மையானால், என் தாய் உத்தமி என்பது சத்தியமானால், இன்றைக்கு நான்காம் நாள் கிராமத்தில் நாங்கள் தொழுதுவரும் பராசக்தியான காளி கோயிலுக்கு நீங்கள் யாவரும் வாருங்கள். நான் உமது புத்திரி என்பதை பராசக்தியானவள் நிரூபிக்கட்டும். இல்லையேல், நானும் என்தாயும் அநீதியுள்ளோராக இருப்பின் எரிந்து சாம்பலாகப் போகிறேன்" என்று சபதங்கூறவும், கும்பேசனும் மற்றவர்களும் அச்சிறுமியின் சபதத்தைக்காண வருவதாய்க் கூறினர்.

கிராமத்திற்குத் திரும்பி வந்த உமா நேரே காளி கோயிலுக்குச் சென்று சன்னதி முன் அமர்ந்து பசிதாகத்தையும் மற்ற உணர்ச்சிகளையும் அறவே மறந்து கண்களை இறுக மூடி உணர்வு சிறிது மற்றவளாய் சிலைபோல் அமர்ந்துவிட்டாள். அவ்வித நிலையிலே மூன்று பகலும் இரவும் கழிய நான்காவது தினம், (உயா தந்தைக்குக் குறித்த தினம்) காலையில் கும்பேசன் பந்துக்கள் சகிதம் காளி கோயிலை நோக்கி வந்தான். அதே சமயம் தையநாயகி, முதல் நாள் இரவில் கனவில் ஒரு ஸ்திரீ தன்னெதிரில் தோன்றி "உன் புத்திரியின் நிலையைக் காண என் கோயிலுக்குக் காலையில் வந்துசேர்," என்று கூறி மறைந்ததை நினைத்து, எட்டு தினங்களாய் புத்திரியின் பிரிவால் மூர்ச்சையடைந்து பாயுடன் கிடந்த அவள், சற்று மனம் தேறி ஆவலுடன் காளி கோயிலுக்குள் வந்து நிஷ்டையிலிருக்கும் தன் புத்திரியைக் காண "ஆ உமா" வென்று கூறி மூர்ச்சித்து உமாவின் பக்கத்தில் விழுந்துவிட்டாள்.

கோயிலுக்குள் வந்த கும்பேசனும் பந்துக்களும், அங்கு காணப்பட்ட நிலையைக் கண்டு பிரமித்து நின்றனர்.

அதே சமயம் காளி விக்ரகமிருக்குமிடத்தில் ஓர் பிரகாசம் உண்டாக "சிவனை வெறுக்கும் எவனும் உண்மையான விஷ்ணு பக்தனாகமாட்டான் என்பதையறியாத கும்பேசனே! உத்தமியான உன் மனைவியை நீ விலக்குகையில் அவளது கர்ப்பத்தில் உனது புத்திரி இருபது நாளையக் கருவாக இருந்ததை நீ மூடனாதலால் அறியாமற் போனாய். உமா உனது அருந்தவப் புதல்வியே! உன் மனைவி மாசுமருவற்ற உத்தமி. இனியாகிலும் அஞ்ஞானத்தைவிட்டு அவர்களுடன் சுகித்திரு" என்று சுத்தமாய் அசரீரி உண்டாகவும், யாவரும் கைகூப்பியபடி பிரமித்து நின்றனர்.

பிறகு கும்பேசன் அப்பவும் சிலைபோல் அமர்ந்திருக்கும் உமாவை புத்திர வாத்ஸல்யத்துடன் உச்சி முகந்து முத்தமிட்டு தன்னறியாமையை நினைத்துக் கண்ணீர் உகுத்தான். தைய நாயகிக்கு மூர்ச்சை தெளியவும் அவளையும் அருகிலழைத்து, கடவுளின் கருணையை வியந்து மகிழ்ந்தான். பிறகு உமாவுடனும் முதல் மனைவியுடனும் தனது வீட்டிற்குச் சந்தோஷத்துடன் புறப்பட்டான்.

அச்சமயம் உமாவைப் பரிகசித்த பெண்கள் ஓடோடியும் வந்து "உமா, நாங்கள் தெரியாத்தனத்தால் உன்னை ஏசிவிட்டோம். எங்களை மன்னிப்பாயா?" என்று கேட்கவும் உமா "அடி என் தோழிகளே! நீங்கள் என்னை ஏசினதாலல்லவோ எனக்கு இவ்வளவு பாக்யங்களும் உண்டானதுடன் கடவுள் நீதியுள்ளவர் என்றும், திடபக்தியுள்ளோரை அம்பாள் என்றும் கைவிடுவதில்லை என்றும், என் தாய் உத்தமி என்பதும் தெரியக் காரணமாக இருந்தது. எனக்குண்டான இத்தனை சிறப்பும் உங்களால் உண்டானதுதான்" என்று அன்புடன் கூறினாள்.

பிறகு உமாவும் அவள் தாயும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

# உமையாளின் உண்மை வாழ்க்கை!

ஏ. எஸ். கே.

"பெண்ணறத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணுமாயிற் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக்காக்கு மிரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடுவோமடா!"

[இது சமீபகாலத்தில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி. இதை என் உள்ளம் ஒளித்துவைக்க இயலாது, வெள்ளம்போல் பொங்கி, வெளியிடச் செய்துவிட்டது!]

இருபது வயதான முத்துக்குமரன், அழகிய வாலிபன்! பணக்காரன்! நற்குண சீலன்! பத்து வயதுடைய சற்குணவதி உமையாளை மணந்தான். உமையாள் கல்வியில் கலைவாணி! செல்வத்தில் மலர்மகள்! சாமர்த்தியத்தில் உமாதேவி! ஆனால், திருமணதினத்திலிருந்து, எட்டு ஆண்டுகள்வரை, தம்பதிகள் ஒற்றுமையில்லை. காரணம்? முத்துக்குமரன் துஷ்டர்கள் சேர்க்கையினால் கெட்டான்!

"கற்பு நிலையென்று சொல்லவந்தாரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்!..."

என்பதை யுன்னாது, விபசாரத்தில் வீடுபட்டு, தனது கற்பை விலைமாதர் வசத்தில் சிதறவிட்டு உமையாளின் கவனமின்றி, ஊர் சுற்றினான்! உமையாளோ தன் காதலனின் சீர்திருத்தத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள்! முத்துக்குமரன் சீர்திருந்துவதாயில்லை! அதே கவலையில் அவள் அடைந்த கதி?

பத்து வயதுடையாள்
பைங்கிளி நல்லுமையாள்
முத்துக்குமானுக்கே—கிளியே!
மோஹனமாலை யிட்டாள்.

நற்குண வாலிபனை
நல்வழி போகாவண்ணம்
துர்குண தோழர்கூடி—கிளியே!
துன்பங்களாக்கினரே.

ஆறுலக்ஷ ரூபாய்
அழகு பணக்காரனடி
தேறுதலில்லையடி—கிளியே!
திவ்வியவழிகளிலே.

சீட்டாட்டக் காரர்கூடி சிந்திவிட்டார்
பணத்தை!
சிற்றிடைத் தாசிகூடி சிதறச் செய்தாள்
குணத்தை!
மோட்டார்கார் மைனர்கூடி மோசம்மிகச்
செய்தார்!
மோஹ நாடகங்களிலே மோதிப்பணம்
பெய்தார்!
எட்டாண்டு வரையிலுமை இன்ப வர்ழ்க்கை
யில்லை!
எழிலுமையாளேக்கமது எரிந்திருக்கும்
கல்லை!
கட்டழகன் காதலிலே கவலையடைந்து
வைத்தாள்!
கவலைக்காசமாக மாறி காரிகையே
செத்தாள்!

வாழ்க்கையில் ஒற்றுமை யில்லையேல், வையகத்தில் இன்பம் இல்லை! பெண்கள் அறவழி செல்வோர், ஆண்கள் அக்ரமவழி



செல்வோர், என்று நான் அபிப்ராயப்படுவதாக சிலர் நினைக்கலாம். நல்லவை, கெட்டவை, இரு பாலாருக்கும் உண்டு. கெடுதல்கள் இரு பாலரிடமும் அணுகவொட்டாமல் தடுப்பது மனது! ஒற்றுமை வாழ்க்கையில், அம்மனம் உறுதிபடும்! உறுதிப்பட்டால், கெடுதல்கள் விலகி ஓடும்! மனம் போன போக்கெல்லாம் போகாது. மனத்தை சீர்திருத்த வழியில் விட்டு,

"காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்யவே!—ஓதுகலை
எண்ணிரண்டு ஒன்றுமதி என்முகத்தாய்
நோக்குமால்
கண்ணிரண்டும் மொன்றையே காண்!

என்ற நீதியைக் கடைப்பிடித்து வாழ்தலே, இன்ப வாழ்க்கையின் எழில் வழியாகும்!

"ஆணெல்லாங் கற்பைவிட்டுத் தவறுசெய்தால்
அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தானெரிந்திடாதோ?
பேணுமொரு காதலினை வேண்டியன்றோ
பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்றார்?
காணுகின்ற காக்ஷியெலா மறைத்துவைத்துக்
கற்புக் கற்பென்றுலகோர் கதைக்கின்றாரே!"

——:o:——

## விநாயகர் ஸ்துதி

கடமைதானேது? கரிமுகனே வையத்
திட நீ யருள் செய்தா யெங்க—ளுடமைகளு
மின்பங்களு மெல்லா மீந்தாய் நீ, யாங்களுனக்
கென்புரிவோம் கைம்மாறியம்பு.

இயம்பு மொழிகள் புகழ்மறையாகு மெடுத்தவினை
பயன்படும், தேவர் இருபோதும்வந்து பதந்தருவார்,
அயன், பதி, முன்னோன், கணபதி, சூரியன், ஆனைமுகன்
வியன் புகழ் பாடிப்பணிவார் தமக்குறு மேன்மைகளே.

வர் போல் கல்யாணப்பந்தலில் கூப்பாடு போட்டுக்கொண்டு கூத்தாடினார்.

நடேச அய்யர், கைகளைக் கூப்பிக்கொண்டு தன் சம்மந்தியின் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் விழுந்து "ஐயர்வாள், கோபித்துக்கொள்ளக்கூடாது. தயவுசெய்து என்மேல் அனுதாபம் காட்டி என் மானத்தைக்காப்பாற்றும்படி கோருகிறேன். தற்சமயம் கைவசம் இருக்கும் இத்தொகையை ஏற்றுக்கொள்ளுங்கள். இன்னும் ஒரு வாரத்தில் சொச்சத்தை எப்படியாவது உமக்கு சேர்த்து விடுகிறேன்" என்று மன்றாடினார்.

இதற்குள் அங்கு கூடியிருந்த அனைவரும் இவ்விருவரையும் சூழ்ந்துகொண்டனர். சிலர் மத்தியஸ்தம் செய்ய ஆரம்பித்தனர். இந்தக் கலவரத்தில் மணப்பெண்ணும் மணப்பிள்ளையும் மாத்திரம் தனியே விடப்பட்டனர். அவர்களிருவரும் நாணத்துடன் ஒருவரை ஒருவர் நோக்கினர். ராமச்சந்திரன் தைரியமாக வஸந்தாவை நோக்கி "நான் என் தகப்பனாரின் செய்கைக்கு மிகவும் வருந்துகிறேன். இதற்காக நீ என்மேல் ஒருக்காலும் மனஸ்தாபப் படக்கூடாது" என்று தாழ்ந்த குரலில் கெஞ்சிய பார்வையுடன் கூறினான்.

வஸந்தா இதற்குப்பதில் ஒன்றும் கூறாமல் தன்னை மீறி தன் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். இதைக்கண்ணுற்ற ராமச்சந்திரன் மனம் நொந்தான்.

கடைசியாக, பொன்னுசாமி அய்யர் பிறருடைய மத்தியஸ்தத்தால் ஒருவாறு சமாதானத்திற்கு வந்து இன்னும் ஒரு வாரத்திற்குள் அவருக்குச் சேரவேண்டிய தொகை முன்னூறும் கொடுக்கப்படாவிட்டால் வஸந்தா ஆயுள்பரியந்தம் பெற்றோர் வீட்டிலேயேதானிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விடுத்து பந்தலில் வந்து அமர்ந்தார்.

மாங்கல்யதாரணம் ஆயிற்று. சிரமப்படி நலங்கு, ஊஞ்சல் எல்லாம் நடந்தன. உபசாரணைகள் சரியாக நடத்தப்படவில்லையென்றும் சீர் பாத்திரங்கள் மிகவும் குறைச்சலாக வைக்கப்பட்டன என்ற குறையுடனும் அதிருப்தியுடனும், ஐந்தாம் நாள் சம்பந்திகள் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

வஸந்தாவின் கழுத்தில் தாலி ஏறியுங்கூட நடேசய்யருக்கும் மீனாக்ஷி அம்மாளுக்கும் மன நிம்மதி உண்டாகவில்லை. இன்னும் இரண்டு நாள் தவணைக்குள் எப்படி முன்னூறு ரூபாய்கள் கிடைக்குமென்ற ஏக்கத்துடனும் மனக்கவலையுடனுமிருந்தனர். நடேசய்யர் எங்கெங்கு அலைந்தும் ஒருவராவது அவருக்கு பண உதவி செய்ய முன் வரவில்லை. வஸந்தாவின் கல்யாணத்திற்கு முன்பு அடகுவைக்கப்பட்ட இரண்டு நகைகளுக்கும் இருநூறு ரூபாய்கள் தான் கிடைத்தன. அப்பணம் கலியாணச் செலவுக்கே போதும்போதாதது மாய் ஆகிவிட்டது. பொன்னுசாமி அய்யரோ ஒரு நக்ஷத்திரய்யன். குறிப்பிட்ட தேதியில் பணம் கைக்கு வந்து சேராவிடில், நாட்டுப் பெண்ணை தன் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளுகிற பேச்சே இல்லையென்றும் தன் மகனுக்கு வேறு விவாகம் செய்வித்து விடுவதாயும் பயமுறுத்தி இருக்கிறார். இவ்வித இக்கட்டில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் பெண்ணைப் பெற்றவர்களின் நிலைமையை நம் வாசகர்களே யூகிக்கலாம்.

"கையில் ஒரு காசுமில்லை கடன் கொடுப்பார் யாருமில்லை" என்ற ஸ்திதியில் இருந்தார் நடேசய்யர். அவருக்கு மாதந்தோறும் வரும் முப்பது ரூபாய் சம்பளம் குடும்பத்து சாப்பாட்டுச் செலவிற்கே போதும் போதாததுமாயிருந்தது. பி.ஏ., எம்.ஏ., படித்துத் தேறிவிட்டு இருபது ரூபாய்க்கு தாளம் போடும் இக்காலத்தில், உயர்தர ஆரும் வகுப்புக்கூட தேறாத நடேசய்யர் தாலுகா குமாஸ்தா உத்தியோகம் வகித்து முப்பது ரூபாய்களைப் பெறு





தாம் மூன்று பத்து ரூபாய்களைப் பெறுவது அவருடைய பூர்வ ஜன்ம புண்யமே என்று சொல்ல வேண்டும்.

நிற்க, பொன்னுசாமி அய்யருக்கு பணம் கொடுக்க வேண்டிய தினத்திற்கு முதல் நாள் பகல் 11-மணிக்கு நடேசய்யர் தொங்கிய முகத்துடனும் சஞ்சல மனதுடனும் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் வீதியிலிருந்து தபால்காரன் "நடேசய்யர், இன்ஷியூரன்ஸ் (Insurance) வந்திருக்கிறது" என்று கூவினான்.

நடேசய்யர் வியப்பு மேலிட்டு, "நமக்கு இன்ஷியூரன்ஸ் செய்து அனுப்பும்படியாக அவ்வளவு பெரிய தொகையையோ, விலை உயர்ந்த சாமானையோ யார் அனுப்பி இருப்பார்கள்? ஒரு வேளை தபால்காரன் தவறுதலாக வேறு யாருக்கோ சேரவேண்டியதை என்னிடம் கொண்டுவந்து விட்டானோ" என்று யோசனை செய்தவண்ணம் வாசலுக்கு வந்து தபாற்காரனிடமிருந்து உறையை வாங்கி மேல் விலாஸத்தை கவனத்துடன் படித்தார்.

தன் விலாஸத்திற்கே வந்திருப்பதென்பதையும் உறையின்மேல் "முன்னூறு ரூபாய்கள்" என்று எழுதப்பட்டிருப்பதையும் அறிந்தவுடன் நடேசய்யர் ஆச்சர்யம் மேலிட்டு தன் கண்களையே நம்பாமல் ஸ்தம்பித்து நின்றார்.

"ஐயா, கையெழுத்தைப் போட்டுக்கொடுமைய்யா, எனக்குப்போதாயிற்று" என்று தபாற்காரன் அவசரப்படுத்தினான்.

நடேசய்யர் நடுங்கிய கரத்தினால் கையெழுத்துப் போட்டுவிட்டு உறையுடன் உள்ளே நுழைந்தார்.

"என்ன, கையில் காயிதம் போலிருக்கிறதே. சம்மந்தி பிராம்மணன் ஞாபகப்படுத்தி எழுதியிருக்கிறாரோ?" என்று சலிப்புடன் வினவியவண்ணம் மீனாக்ஷி அம்மாள் புறக்கடையிலிருந்து வந்தாள்.

"இல்லை, இந்த ஆச்சர்யத்தை என்னவென்று சொல்வேன்! எந்த மஹானாலோ முன்னூறு ரூபாய்கள் அனுப்பப்பட்டு சமய சஞ்சீவியாக வந்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு உறையை உடைத்து நோட்டுகளை எண்ணினார். சரியாக நான்கு ஐம்பது ரூபாய் நோட்டுகளும், ஒரு நூறு ரூபாய் நோட்டும் இருந்தன.


"இதென்ன, இத்துடன் இவை யாரால் எனக்கு அனுப்பப்பட்டவை என்பதை விளக்க கடிதம் ஒன்றும் வைக்கப்படவில்லையே! தபால் முத்திரையிலிருந்து இப்பணம் மதுரையிலிருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. மதுரையில் நமக்கு வேண்டியவர்கள் யாருமில்லையே! நம்மாப்பிள்ளை ராமச்சந்திரன் தான் இஞ்சினீயரிங் காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கிறான். பெரிய விந்தையாக இருக்கிறதே. நாளை விடிந்தால் அப்பாதக பொன்னுசாமி அய்யருக்கு நான் எவ்வித ஸால்ஜாப்பு சொல்லப்போகிறேன் என்று எண்ணி தவித்துக்கொண்டிருந்த எனக்கு இத்தொகை எந்த பேருபகாரியாலோ அனுப்பப்பட்டது எவ்வளவு மகிழ்ச்சியையும் மன நிம்மதியையும் உண்டாக்கி, இருக்கிறது?" என்று அத்யந்த ஸந்தோஷத்துடன் உரைத்துக்கொண்டு உணர்ச்சி மேலிட்டு ஒரு நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தார்.

இதைக்கேட்ட மீனாக்ஷி அம்மாளும் தன் செவிகளையே நம்பாமல் தன் கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே நழுவவிட்டு சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றாள்.

இவ்வாச்சர்ய சமாசாரத்தை அறிந்த வஸந்தாவும் க்ருதக்ஞையுடன் சர்வேச்வரனை துதித்துக் கொண்டாடினாள்.

நடேசய்யர் குதூகலத்துடன் கச்சேரிக்குச் சென்றார்.

பிறகு அன்று சாயந்திரமே பூதலூர் சென்று தன் சம்மந்தியிடம் பணத்தைக்கொடுத்து



# வஸந்தா

"தாமரை"

பிற்பகல் மூன்று மணி சுமார் இருக்கும். நடேசய்யர் சாய்வான நாற்காலியிலமர்ந்து கொண்டு தன் கையிலிருந்த ஏதோ ஒரு கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தார். படித்து முடிந்தவுடன் ஏதோ ஆழ்ந்த யோசனை செய்பவர் போல் தன் வழுக்கைத் தலையை வலக்கரத்தால் தடவிய வண்ணம் ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு உரத்த குரலில், "இந்தா, உன்னைத்தான். இங்கு வந்து விட்டுப் போ" என்று தன் சஹ தர்மிணிக்கு உத்தரவிட்டார்.

சமயலறையில் மத்தியானத்திற்காக ஏதோ பலஹாரம் தயார் செய்து கொண்டிருந்த மீனாக்ஷி அம்மாள் தன் கணவன் கூப்பிடுவதைக் கேட்டு "இதோ வந்துவிட்டேன்" என்று பதிலளித்து கையிலிருந்த மாவைத் தட்டிய வண்ணம் கூடத்திற்கு வந்தாள்.

"என், என்ன சமாசாரம்? ஏதோ கடிதம் வந்திருக்கிறது போலிருக்கே? காயா, பழமா?" என்று மிகுந்த ஆவலுடன் வினவினாள் மீனாக்ஷி அம்மாள்.

."பழம் தான். ஆனால் ஆயிர ரூபாய்க்கு ஒரு சல்லி கூட குறைத்து வாங்கிக்கொள்ள முடியாது என்று பிடிவாதமாக எழுதியிருக்கிறார் பூதலூர் பொன்னுசாமி அய்யர். எப்படியாவது கஷ்டப்பட்டு கடன் வாங்கி எழுநூறு ரூபாய் சேகரித்து விடலாம். வரதக்ஷிணைக்கே இன்னும் முன்னூறு ரூபாய் வேண்டியிருக்கிறதே. மேலும் கல்யாணத்திற்கு குறைந்த பக்ஷம் முன்னூறு ரூபாய்களாவது செலவாகுமே. இதற்கெல்லாம் எங்கே போய் திருடுகிறது? ஈச்வரா, என்னை இப்படியா பரிசோதிக்க வேண்டும்?" என்று அத்யந்த வருத்தத்துடன் பகன்றார் நடேசய்யர்.

"நன்றாயிருக்கிறது, நீங்கள் இதற்கெல்லாம் தயங்கவே கூடாது. முதற் பெண் கல்யாணத்திற்கே உங்களுக்கு இவ்வளவு கவலையும் வெறுப்பும் உண்டாகி விட்டதே. நம் பெண்ணிற்கோ பதினைந்து வயது பூர்த்தியாகி விட்டது. ஊரெல்லாம் என்னை ஏசிக்காட்டி வறுத்துக் கொறிப்பது போதாதா? எப்படியாவது சிரமப்பட்டு பணத்தை சேகரித்து கூடிய சீக்கிரம் கல்யாணத்தை முடிக்கும் வழியைப் பாருங்கள். நாம் பார்த்திருக்கும் இந்தப் பிள்ளை தங்கக் கம்பியாம். நான்கு காசு வரதக்ஷிணை அதிகமாக கொடுத்தாலும் நல்ல இடம் என்கிற திருப்தி இருக்கிறதோ இல்லையோ? என் அட்டிகையையும் கடியாரச் சங்கிலியையும் அடமானம் வைத்தால் ஐநூறு ரூபாய்களாவது கிடைக்கும். நீங்கள் ஏற்கனவே கடன் வாங்குவதாக சொன்ன எழுநூறு ரூபாய்களையும் இந்த ஐநூறு ரூபாய்களையும் வைத்துக் கொண்டு ஒப்பேற்றி விடலாம். நன்றாய் இதற்கெல்லாம் தலையில் கைவைத்துக்கொண்டு யோசனை செய்தீர்கள். நீங்கள் புருஷரா இல்லையா?" என்று படபட வென்று ஒரே மூச்சில் தீர்ப்புக் கூறினள் மீனாக்ஷி அம்மாள்.

"சரி, இந்த வருஷம் வஸந்தாவுக்குக் கல்யாணம் செய்யா விட்டால், நீ என்னைக் கொத்திப் பிடுங்கி விடுவாய் போலிருக்கிறது! நீ செய்யும் உபத்ரவத்தைப் பார்த்தால் பெண்ணின் கழுத்தில் எப்படியாவது தாலி ஏறினால் போது மென்றிருக்கிறது. எனக்கு பகவான் இருக்கிறார். எல்லா வற்றிற்கும் அவர் காப்பாற்றுவார். நீ கல்யாண ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிடு. நான் பொன்னுசாமி அய்யருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக எழுதி விடுகிறேன். வருகிற மாதம் 10ம்தேதி முஹூர்த்தத்திலேயே விவாகத்தை நடத்தி விடலாமென்று தோன்றுகிறது. உனக்கும் அது ஸௌகர்யம் தானே?" என்று நடேசய்யர் கேட்டார்.

"எனக்கு ஒரு அசௌகர்யமும் இல்லை; வஸந்தாவின் விவாகம் கூடிய சீக்கிரம் முடிந்துவிட்டால் என் மனம் நிம்மதியாக இருக்கும்" என்று பதிலளித்து மீனாக்ஷி அம்மாள் சமயலறைக்குள் சென்றாள்.

தன் தாய் தந்தையரின் சம்பாஷணையை மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த வஸந்தா, அவர்கள் தனக்காகப்படும் கஷ்டங்களை நினைத்து கண்ணீர் உகுத்தாள். "என் பொருட்டு இவர்கள் வசம் இருக்கும் அற்ப சொற்பமான ஆஸ்தியனைத்தும் வாரிவழித்து செலவழிப்பது மன்னியில் கடன் என்ற படுகுழியில் வேறு விழுவதற்கு இவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்களே! இவர்கள் இப்பொழுது இப்படித் தலைகால் தெரியாமல் நடந்து கொண்டால், வருங்காலத்தில், எனது தங்கை மரகதம், மற்றும் எனது இளைய சகோதரர்களின் கல்வி, சுச்ரூஷை முதலியவற்றை எவ்விதமாக சமாளித்துக் கரையேறுவார்களோ தெரியவில்லையே! அப்பாவிற்கு வரும் சொற்ப சம்பளம் இக் குடும்பத்திற்கு எந்த மூலை. ஹா கடவுளே! இந்த வரதக்ஷிணைப் பேய் என் இப்படி ஜனங்களைப் பிடித்து ஆட்டுகிறது. இந்திய வழக்கத்திற்கு விமோசன மில்லையா?" என்று மனம் புண்பட்டு புலம்பினள்.

குறிப்பிட்ட தேதியில் நடேசய்யர் கிருஹத்தில் விவாகச் சடங்குகள் தொடங்கப்பட்டன. மணப்பந்தலில், கொழுந்து விட்டெறியும் அக்னியின் முன்பு பெண்ணும் பிள்ளையும் அமர்ந்திருந்தனர். கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு ஒருவருடன் ஒருவர் தமாஷாக உரையாடிக்கொண்டும், சில நாரீமணிகள் வஸந்தாவையும் மணமகனை, ராமச்சந்திரனையும் பரிகாசம் செய்து கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டுமிருந்தனர். வைதீகர்கள் மழைகால தப்பளைகள் போல் மந்திரங்களை துரிதகாலத்தில் விரட்டிக்கொண்டிருந்தனர். மேளகாரன் தனக்குத் தெரிந்த பாட்டுக்களை எல்லாம் தன் திறமைக்கு மேல் வாசித்துக்கொண்டிருந்தான்.

இத்தருணத்தில் திடீரென்று பெண்வீட்டு சம்பந்தி அய்யருக்கும் பிள்ளைவீட்டு சம்மந்தி அய்யருக்கும் ஏதோ வாக்குவாதம் ஆரம்பமாயிற்று.

"ஓய், நீர் இப்பொழுது வள்ளிசாக ரூபாய் ஆயிரத்தையும் கீழே வைத்தாலொழிய நான் உம் வீட்டில் அரைக்கணமும் நிற்கமாட்டேன். இதோ இப்பொழுதே என் பிள்ளையையும் என்னைச்சேர்ந்த மற்ற பந்துக்களையும் அழைத்துக்கொண்டு வெளி நடந்து விடுகிறேன். இதென்ன அய்யா அக்ரமம்! சொல்வதொன்று நடப்பதொன்றா? ஆயிர ரூபாய் தவறாமல் முகூர்த்த பந்தலில் கொடுத்து விடுகிறேன் என்று வாக்களித்து கலியாணத்தை நிச்சயம் செய்தபொழுது உமது புத்தி எங்கு போயிற்று? இப்பொழுது எழுநூறு ரூபாய்களைக் கொணர்ந்து நீட்டி இன்னும் முன்னூறு ரூபாய்களை பிற்பாடு கொடுப்பதாகச் சொல்லுகிறீரே! உமது பெண்ணையும் பணத்தையும் நீரே வைத்துக்கொள்ளும்!" என்று பூதலூர் பொன்னுசாமி அய்யர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆவேசம் வந்த

விட்டு, பெரிய சுமையை இறக்கியவர்போல் தன் ஊர்வந்து சேர்ந்தார். பணப்பேய் பிடித்த பொன்னுசாமி அய்யரும் நோட்டுக்களைக் கண்டவுடன் வாயைப் பிளந்தார். நடேசய்யருக்கு தடபுடலாய் விருந்து செய்து ஊருக்கு அனுப்பினர்.

வஸந்தாவின் விவாகம் ஆகி மூன்று வருஷங்கள் ஆயின. அவளுக்கு சாந்தி கல்யாணத்திற்கு வேறு சீர்கள் செய்ய வேண்டி யிருந்தபடியால் நான்கைந்து பேர்களிடம் 1½ வட்டியின் பேரில் நானூறு ரூபாய்கள் கடன் வாங்கி சாந்தி கல்யாணத்தையும் நிறைவேற்றிப் பெண்ணை புக்ககத்தில் கொண்டுபோய் விட்டு வந்தார் நடேசய்யர். இப்பொழுது வஸந்தா தன் மாமியார் வீட்டிற்கு வந்து ஆறு மாதங்கள் ஆயின. அவள் தன் மாமியாரிடம் வாங்கிய கொடும் சொற்கள் கணக்கிலடங்கா.

“நீ கொண்டு வந்திருக்கும் சீரும் சினைத்தைக்கும் உனக்கு மூன்று வேளைகள் பிண்டம் கொட்டவேண்டுமோ?” என்று தன் நாட்டுப் பெண்ணை ஏசுவாள் அவள் மாமியார்.

பாவம், நம் வஸந்தா மிகுந்த விவேகம் வாய்ந்தவள். பொறுமையில் பூமாதேவி. தன் மாமியின் கடும் சொற்களையும், தன்னைக் கொடுமையாக நடத்துவதையும் எள்ளளவும் பாராட்டாமல், எப்பொழுதும் சந்தோஷ முகத்துடனிருந்து தன் மாமியாரை திருப்தி செய்ய முயன்று வந்தாள். ஆனால் வஸந்தாவின் பிரயத்தனமெல்லாம் விழலுக் கிறைத்த நீராயின.

ஓர் சமயம் ஏதோ பண்டிகையின் பொழுது இட்டலி வார்க்க வேண்டிவந்தது. அதற்காக வஸந்தா தன் மாமியை நோக்கி “அம்மா, இட்டலி வார்க்க வேண்டுமே. நம் ஆத்தில் இட்டலி பாத்திரம் இல்லை போலிருக்கிறதே?” என்று கேட்டாள்.

“ஆமாண்டி, தரித்திர வீட்டுப் பெண்ணே! உங்கம்மாள் சவரணையாக சீர் பாத்திரங்கள் கொடுத்திருந்தால் எல்லாம் இருக்கும். உன் வாயைத்திறடி. வாயில் இட்டலி வார்க்கிறேன். இட்டலி பாத்திரம் நம் ஆத்தில் இல்லையே என்று கையை விரிப்பதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா? இன்னொரு பெண்ணானால் இன்றையத் தேதியிலேயே தன் தகப்பனுக்குக் கடிதம் எழுதி இட்டலி பாத்திரம் வரவழித்திருக்காதா? கோடியாத்து குப்புஸாமி பெண்ணை நாலாயிர ரூபாய் வரதக்ஷிணையுடன் எங்க ராமுவுக்கு கொடுக்கிறேன் என்று மன்றாடினார்கள். தங்கம்மாட்டமா அந்தப் பெண்ணை பண்ணிக் கொள்ளுவதை விட்டு, ஒரு அஷ்ட தரித்திர வீட்டுப் பெண்ணை மணம் செய்துக்கொண்டு வந்திருக்கும் இந்த நாகரீகப் பிள்ளையின் புத்திக்கு நான் என்னவென்று சொல்வேன். அடிச்சிண்டு அழ இரண்டு கைகள் போதாதே” என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள் ராமச்சந்திரனின் தாயார்.

தன் அன்னையின் வார்த்தைகளை தற்செயலாய் கேட்டுக்கொண்டு வந்த ராமச்சந்திரன் அடங்காத்துயரமும் சினமும் கொண்டு, “அம்மா, இப்படியெல்லாம் இந்தப் பெண்ணை நீ வருத்தினால் உனக்கும் எனக்கும் கட்டாயம் மனஸ்தாபம் ஏற்படும். நான் அவளை அழைத்துக் கொண்டு மதராஸில் தனியாக குடித்தனம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். நீயும் அப்பாவும் சௌக்கியமாக இவ்வூரிலேயே இருங்கள். உங்கள் சிலவுக்கு வேண்டியதை மாதாமாதம் அனுப்புகிறேன். அனியாயமாய் அந்தப் பெண்ணையும் அவளுடைய பெற்றோர்களையும் ஏன் கண்டபடி பேசுகிறாய்? வஸந்தாவின் பெற்றோர் நமக்குக்கொடுத்த வரதக்ஷிணையினாலும் செய்த சீர்களினாலும் மிதமிஞ்சி கடன்பட்டு சாப்பாட்டிற்கு கூட இல்லாமல் திண்டாடுவது நீ அறியாத விஷயமா? இந்த சமயத்தில் நீ அவர்களுக்கு உதவி செய்ய முன் வராதது மன்னியில், புண்ணில் கோலிடுவது போல், வசைச் சொற்களினால் அவர்களை ஏசுகிறாயே! இது சரியா?” என்று தன் தாயை விளித்துக்கேட்டான். (தொடரும்)



வைத்தியப் பகுதி

# டைபாய்ட் ஜுரம்

## (TYPHOID FEVER)

திரு. டி. கே. கோவிந்தய்யர்

தற்காலத்திய நாகரீகத்துக்கு ஏற்றபடி பட்டணங்கள் அதிகரித்து அதில் வசிப்பவர்கள் விசேஷமாய் சுத்த காற்றுக் குறைவினாலும், சுத்தஜல கஷ்டத்தினாலும் சாக்கடை, குப்பை இதுகளினின்று உண்டாகும் அசுத்தங்களினாலும் அநேக கொடிய வியாதிகளுக் குள்ளாகிறார்கள். இதில் அதிக ஆபத்தானவைகள் தொத்து வியாதிகள். இவை காலரா, பெரிய அம்மை, பிளேக், டைபாய்ட் சுரம், மலேரியா சுரம். மேலே சொல்லப்பட்டவைகளில், டைபாய்ட் தவிர, மற்றவைகளெல்லாம் சாதாரண ஜனங்கள் அறியும்படியாக கவர்ன்மெண்டார் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

ஜுரங்களின் வகை சங்கையற்றது. சில வியாதிகளோடு சுரமும் கூடவரும். அப்படிக்கில்லாமல் தொத்து வியாதிகளாய்ப் பீடிக்கிற ஜுரங்கள் அநேகம். டைபாயிட் சுரமானது நமது நாட்டிற்கு புதியதல்ல. ஆயுர்வேத பண்டிதர்கள் இதை விஷ சுரமென்றும், ஜன்னி சுரம் என்றும், பித்தவாத ஜன்னி யென்றும் பலவாறாகச் சொல்லுகிறார்கள். இது சாதாரணமாக பட்டணங்களில் வசிப்பவரை பீடிப்பதல்லாமல் அங்கங்கே கிராமவாசிகளையும் பீடிக்கும். 5 வயதுக்கு மேற்பட்டு 59 வயதுக் குள்ளானவர்களை விசேஷமாக பீடிப்பதாக தெரியவருகிறது. இது இங்கிலாந்து முதலான தேசங்களில் குளிர் காலத்துக்கு முந்திதான் பீடிக்கிறது. ஆனால் நம்ம தேசத்திலேயோ இதற்கு விசேஷித்த காலம் ஒன்றும் இல்லை. வருஷம் முழுமையும் ஏறக்குறையக் காணலாம்.

இந்த ஜுரமானது அணுதரிசினிக் கண்ணாடியினால் (Microscope) காணக் கூடிய சிறு பூச்சிகளினால் உண்டாகிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். டைபாயிட் பூச்சியானது இரு நுனியிலும் உருண்டும், இங்கும் அங்கும் நகரக் கூடிய சக்தியுடைத்தாயுமிருக்கும். இந்தப் பூச்சிகள் ஜலம், பால், மற்று முட்கொள்ளுகிற ஆகாரத்தோடு கலந்து உட் சென்றவுடன் குடலில் போய்ச் சேர்ந்து அவ்விடத்தில் ஏராளமாய் விருத்தியாகின்றன. 10 நாள் முதல் 15 நாள்களுக் குள்ளாகவே ஜுரத்தையுண்டு பண்ணிவிடும். ஒரு சிறு பூச்சி உட்சென்றால் 10 நாளைக்குள் அது கோடான கோடியாய் விருத்தியாய் விடும்.

### வியாதியின் குறிகள்

இந்த வியாதி ஆரம்பத்தில் அதிக மோசடியுள்ளது. வியாதி யென்று வியாதியஸ்தனுக்கே தெரியாது. சாதாரணமாய் அலுவல் பார்த்துக் கொண்டே யிருப்பான். ஆனால் ஒரு மாதிரி பசியடைப்பும் கொஞ்சம் தலை நோவும் இருக்கும். சிறு

பிள்ளைகள் கூட இச்சிறு அவஸ்தைகளை இலட்சியம் செய்யாமல், விளையாடிக் கொண்டிருப்பார்கள். பார்ப்பவர்களுக்கும், அவர்களுக்கு வியாதி யென்று தோன்றாது. இருக்க இருக்க பசியில்லாமையும், கால் கைகளில் நோவும், தலைவலியும், குளிரும் உண்டாகும். சிலருக்கு ஆரம்பத்திலேயே பேதியிருக்கும். இது சாதாரண மந்தபேதி யென்று எண்ணக் கூடியதாயிருக்கும். சிலருக்கு வயிற்று சங்கடமும், வாந்தியுமிருக்கும். வயித்தியர்கள்கூட, அது இன்ன காரணத்தாலென்றறியாமல் வயிறு கெட்டிருக்குமென்று அதற்கு சிகிச்சை செய்வார்கள்.

சுரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வரும். 5 அல்லது 6 நாளைக்குப் பின்பு நாடி துடியாயும், உடம்பு உஷ்ணமாயும் ஆகும். இப்பொழுதுதான் வியாதியஸ்தனுக்கு படுத்துக் கொள்ள வேண்டுமென்கிற கவலை தோன்றும். வீட்டிலிருப்பவர்களுக்கும் இவனுக்கு ஏதோ வியாதி இருக்கிறதென்று தெரியும். டைபாய்ட்டில் சாதாரணமாய் 6, 7, நாளைக்குப்பிறகு தான் தக்க சிகித்சைக்கு ஆரம்பிக்கிறோம். இப்படி ஒரு வாரமானவுடன் ஜ்வரம் விடாமல் அடிப்பது தெரிய வரும். 'சாயங்கால வேளைகளில் சுரம் ஜாஸ்தியாயும் காலைவேளைகளில் குறைந்துமிருக்கும். நாக்கு அசுத்தமாயும், ஜலம் மட்டுப்பட்டும் இருக்கும். ஜலம் சிவந்த வர்ணமாயுமிருக்கும். இரவில் ஆராட்டம் அதிகரிக்கும். இச்சமயத்தில் வியாதியஸ்தனுடைய வலது பக்கத்து அடி வயிற்றை, அமுக்கினால் அவனுக்கு அதனால் ஒரு நோவுண்டவாதுடன் கலகல வென்ற இரைச்சலும் கேட்கும். பேதியிருந்தால் அது மஞ்சள் வர்ணமாயுமிருக்கும்(pea-soup colour). இச்சுரத்தில் நம்மவர் ஸ்திரீகளுக்கு பேதியிருக்கிற கேசுகள் அதிககொஞ்சம். வாந்தி பேதியால் உண்டாகும் பேதி வடித்த கஞ்சி போலவும், டைபாயிட் சுரத்தினால் உண்டாகும் பேதி மஞ்சள் நிறமாய் இருக்கும். சுரத்தோடு பேதிகண்டால் அது டைபாயிட் என்று சந்தேகிக்க வேண்டியதுதான்.

7 முதல் 12 நாளைக்குள்ளாக மார்பில் அம்மை போன்ற செங்குறுவுகள் புறப்படும். அது இரண்டு மூன்று நாளிருந்து, மறைந்து, மறுபடியும் புதிதாய்க் கிளம்பும். இக்குறு சிகப்புடம்பு உள்ளவர்களன்றி நம் போன்ற மாநிற முடையவர்களுக்குத் தோன்றினாலும் கண்டறிவது கஷ்டம்.

இரண்டாவது வாரத்தில் சுரம் அதிகரித்து சாயங்கால வேளைகளில் 105 டிக்கிரியும், காலை வேளைகளில் 103 அல்லது 102 மாய் இருக்கும். இப்பொழுது தலைவலி அவ்வளவு கடினமாய் இல்லாமற் போனாலும் சுரம் அதிகமாயும் பேதியுமிருந்தால் சாயங்கால வேளைகளில், வெறி, மயக்கம், பேத்தல், நினைவழிவு, இதுகள் உண்டாகி, வியாதியஸ்தன் படுக்கை, போர்வைகளில் சேஷ்டைகள் உண்டாகும். இப்பொழுது தான் தலைக்கு பனிக்கட்டி வைப்பதும், பனிக்கட்டி மீது படுக்க வைப்பதும், முதலிய சிகிச்சைகள் செய்வது.

இந்த வியாதி கண்ட நாள் முதல் வியாதியஸ்தனை படுக்கையை விட்டு எழுந்திருக்க விடக்கூடாது. நமது புகழ் பெற்ற டாக்டர் கேஸரி அவர்களால் அன்னாது கேஸரி குடீரத்தில் தாயாரிக்கப் படுகிற





“அர்க்கா” என்ற மருந்தை கொடுக்க வேண்டும். கூடக்கூட “அமிருத” என்ற டானிக்கையும் கொடுக்கவேண்டும். அதனால் சுரமும் நிவர்த்தியாகி பலமும் உண்டாகின்றது. சாதம் முதலிய கெட்டி போஜனங்கள் ஆரம்பத்திலிருந்தே தள்ளி விடவேண்டும். ஏனென்றால் இது குடலொத்த வியாதி; குடல்களெல்லாம் இந்த பூச்சிகள் சஞ்சாரத்தால் புண்ணாயிருக்கும். ஆதலால் கெட்டி உணவு ஜீர்ணம் ஆகவே ஆகாது. ஆதலால் அதை முக்கியம் தள்ளி விட வேண்டியது.

பார்லி கஞ்சி, ஜவ்வரிசி கஞ்சி, பால் கொடுக்கலாம். இது ஜீர்ணமாகா விட்டால், காய்ச்சினபாலில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்தால் அது உடைந்து போய் விடும். உடனே அதை ஒரு நல்ல துணியில் வடிகட்டி, அந்த வடிகட்டின ஜலம், இவைகளைக் கொடுக்கலாம்.

மூன்று வாரத்தில் சுரம் நின்று விட்டாலும் வியாதியஸ்தன் பின்பு, இரண்டு வாரத்துக்குக் குறையாமல் படுக்கையிலேயே படுத்திருக்க வேண்டும்.

## தடுக்கும் முறை

இந்த வியாதி சாதாரணமாய் சாக்கடை நீர், குப்பை, முதலியவைகளினின்று உண்டாகும் அசுத்த காற்று அதிகமாய் இருக்கிற இடத்தில் ஜாஸ்தி உண்டாகிப் பரவுகிறதென்று நிர்ணயிப்பதால், நம்முடைய வாசஸ்தலங்களை அதிக சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டுவது அவசியம். பட்டணங்களில் இவைகளைச் சேரவொட்டாமல் தடுப்பது அதிகாரிகளின் கடமை.

## பார்லியின் உபயோகம்

பார்லி ஜலம் வியாதியஸ்தர்களுக்கு மட்டும் உபயோகப் படுவதன்று. நல்ல ஆரோக்கியமாயிருப்பவர்களும் அதை உபயோகிப்பதால் மிகுந்த நன்மைகள் அடையலாம். வயிறு, குண்டிக்காய்கள், ஈரல், குடல் முதலியவற்றைக் குளிர்ச்சி படுத்தும் குணம் பார்லித் தண்ணீருக்கு இருக்கிறது. ஜ்வரம், வயிற்றுப்போக்கு, வயிற்றிழைச்சல், தலைவலி, தேக அசதி, பலஹீனம் முதலியவற்றுக்கும் பார்லி ஜலம் சாப்பிடுவது நல்லது. இதை எப்படி தயார் செய்வதென்பது எல்லோருக்கும் சரியாய் தெரியவில்லை. சரியான பார்லித் தண்ணிக்கும், சுத்த ஜலத்துக்கும் கலரில் தான் வித்தியாசம் தெரியும். பார்லி ஜலம் கொஞ்சம் இளநீர் போலிருக்கும். பார்லித் தண்ணீருடன் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும், துளி உப்பும் கலந்து சாப்பிட்டால் வெகு நன்மையளிக்கும். இரவு பகல் எந்த வேளையிலும் ‘பார்லி வாட்டரை’ இம்மாதிரிச் சாப்பிடலாம். கடுமையான அஜீரணத்துக்கு பார்லித் தண்ணீர் கொடுத்தால் அற்புதமான பலன் உடனே காணலாம். சாதாரணமான தாகத்துக்கும் அதைக்குடிக்கலாம்.

# பாலிய விவாகத்துக்கு பலி!

திரு. பி. மாசிலாமணி முதலியார். பி. ஏ.

ஸரோஜா என்பவள் ஒரு சிறு பிராமணப் பெண். இவளை இளவயதிலேயே ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்க அவன் திடீரென ஆற்றில் விழுந்து இறக்க நேரிட்டது. இதனால் சரோஜாவுக்கு வைதவ்யம் ஏற்பட, இவளது பெற்றோர் முதலானவர்கள் தம் குலாசாரத்திற்கேற்ப, இவளுடைய அழகிய கூந்தலை எடுத்து விடத் தீர்மானித்தனர். சரோஜாவுக்கு இது சற்றும் சம்மதமில்லை. ஆகவே இவள் குடும்பத்தினின்றும் வெளியேற்றப்பட்டாள்; ஊரூராய்த் திரிந்தாள்; கடைசியில் ஒரு சோலையுள் புகுந்து பின் வருமாறு பிதற்றலானாள்.

ஹா! இனி என்ன செய்வேன்? கொஞ்சமேனும் நெஞ்சில் இரக்கம் பச்சாத்தாபமின்றி என் தந்தையார் தன் வீட்டை விட்டு ஓடிப் போய் விடும்படி எனக்கு உத்தர விட்டாரே! என் தாயார்—என் அருமைத்தாயார்—என்னைப்பத்து மாதம் பரிந்து சுமந்து பெற்ற தாயார் அவர்கள் மனம் என்ன பாடு பட்டிருக்குமோ? தெய்வமே! ஏனோ நீர் என்னைப் பெண்ணாய்ப் படைத்தீர்? நல்ல குடும்பத்திலே பிறந்து, நல்ல குடும்பத்திலே வாழ்க்கைப்பட்டு, புருஷ சுகத்தை ஒன்றும் அனுபவியாமல் இந்த வயதிலேயே எனது நாதரையும் இழக்கும் படி நேர்ந்து இப்படி அவதிப்படுவதற்கோ? என் ருது சாந்தி முகூர்த்தத்திற்கு நாள் ஏற்படுத்துவதாவது! அதற்குள்ளே என் புருஷன் தன் உயிர் இழப்பதாவது! இதெல்லாம் விதியின் செயலே! என்றாலும் என்னை எதற்காக இவர்கள் மொட்டையடித்துக் கொள்ளும்படி தொந்தரவு செய்யவேண்டும்? நாகரீகம் விருத்தியடைந்து வரும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே, நாளுக்கு நாள் இளம் விதவைகளின் கண்ணீர் ஆறாய்ப் பெருகி இறைவன் அடியைச் சேருகின்ற இக்காலத்திலே, இதன் பயனாக ஆண்டவன் அருளினால் ஆங்காங்கு விதவைகளுக்கு ஒருவாறு தனிச் சுதந்தரமும் விமோசனமும் உண்டாகி வருகின்ற இத்தருணத்திலே, கார்மேகம் போன்று கறுத்து நீண்டு அடர்ந்து வெகு அழகாய் வளர்ந்திருக்கும் இக்கேச பாரத்தை, இக்கருங் கூந்தலை, இவ்வழகிய மயிரை, அடியோடு எடுத்து மொட்டையடிக்கின்ற, மஹா முரட்டுத்தனமான, அநாகரீகமான இந்த கெட்ட பழக்க வழக்கம் இன்னும் ஒழியா திருக்கவேண்டுமா? ஹே! ஜகதீசா! நீ தான் எனக்குத் துணை. எனக்கு என் இக்கதி வரவேண்டும்? சின்னஞ் சிறுமிகளைக் கட்டிக்கொடுக்கும் பொல்லாத வழக்கத்தினால் அல்லவா, நான் இச்சமயம் இப்படி சீர்குலைந்து பரதவிக்க நேருகிறது. வயது வந்த பிறகு, நான் புத்தியறிந்த பிறகு எனக்கு விவாகம் நடந்திருக்குமானால் நானே என் தந்தையுடன் மன்றாடி, எனது நாயகர் வேண்டிய வைரக்கடுக்கன், வைரமோதிரம் முதலானவைகளை, எப்படியாவது வாங்கிக்கொடுக்கச் செய்திருப்பேன். ஹா கஷ்டம்! நஷ்டம்! இந்நாட்டில், எத்தனை இலட்சக்கணக்கான என்னைப் போன்ற இளம் விதவைகள் இருக்கின்றனர். எத்தனை ஆயிரக்கணக்கான கைம் பெண்கள் இருக்கின்றனர். இவர்கள் எல்லாம் இக்கோலத்திற்கு ஆளான காரணம் பாலிய விவாகம் என்கிற கொடியபழக்கமே யல்லவா?

மற்றும் என் போன்றோர் கதி யென்ன? ஹே ஜன சமூகமே! எங்கள் நிலைமையை நீங்கள் உள்ள படியே உணர்வீர்களானால், உங்கள் உடலில் அந்த சகோதரத்வமாகிற உதிரம் பரவி ஓடிக்கொண்டிருப்பது உண்மை



யானால், நீங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நிர்பாக்கிய மான கதிக்கு, நெஞ்சங் கலங்கி எங்களுடைய துயர் நீங்க ஏதேனும் வழி தேடாமலிருப்பீர்களா? பத்தரை மாற்றுத் தங்க நிறத்தையொத்த மேனியுடைய பதினாறுண்டு பிராயமுடைய தங்கை, பாலிய விவாகக் கொடுமையினால், பாரில் தன் கணவனையிழந்து விதவையாகி, கட்டாந்தரையில் படுத்துக் கண்ணீர் விட்டுக் கலங்க, எத்தனை புருஷர்கள் தங்கள் தங்கள் மனைவியரோடும் இன்னும் போதாக்குறைக்கு மற்ற "லேடிகளோடும்" பஞ்சணை பரப்பிய சப்ர மஞ்சத்தில் கூடிக் கொஞ்சிக் குலாவுகின்றனர். அம்மட்டோ! தான் பெற்ற மகள், தக்க பருவத்தில் புருஷனை யிழந்து பெருந்துயரத்தில் ஆழ்ந்து தவிக்க, அவளை ஏனென்றுகூடக் கண்ணெடுத்து ஏற இறங்கப் பாராமல், எத்தனை தகப்பன்மார்கள், தாம் வயது சென்றவர்களாயிருப்பினும், இளம் பெண்களை இரண்டாந்தாரமாக விவாகம் செய்து கூடிச் சுகிக்கின்றனர். அந்தோ! இதென்ன அனியாயம்! மனைவி யிறந்தால் பிணவாசலிலேயே மணப்பேச்சு நடக்கின்றதே! கணவன் இறந்தால் பெண்ணின் கதியை எண்ணுவார் எவரும் இல்லையே! நீதியை நிலைநாட்டி, நடு நிலைமையை வகித்து வரும் சாட்சாத் கடவுள் தாம் உண்டாக்கிய மானிட சிருஷ்டியில் பெண்களுக்கென ஒரு விதியும் ஆண்களுக்கென ஒரு விதியும் பேதப்படுத்தி நியமித்திருப்பாரா? இருக்கமாட்டார். இது கடவுளுக்கு ஒருக்காலும் சம்மதமாகாது. ஜன சமூகத்தில் சில சாதியார் இவ் விதவா விவாகத்தைக் கைக்கொள்ள வில்லையா? அப்படி யிருக்க ஏன் எல்லா சமூகமும் இதை அனுஷ்டிக்கலாகாது? சாஸ்திர சம்மதமல்லவென்று நீங்கள் சாற்றுவீர்களானால், உலகில் நடைபெறுவதெல்லாம் சாஸ்திர சம்மதந்தானா? ஆங்காங்கு விபசாரம் நடைபெறுவது சாஸ்திர சம்மதமா? கள்ளத்தனமாய்ப் பிள்ளைகளை வாங்கிக்கொண்டு கருவழிக்க மருந்து தேடுவது சாஸ்திர சம்மதமா? கெட்ட நடத்தையால் வெளியேறிய ஸ்திரீகளை மீண்டும் கொண்டு வந்து குடித்தனம் செய்வது சாஸ்திர சம்மதமா? கொலை களவு சூது பொய் சாக்ஷிகள் இவைகள் எல்லாம் சாஸ்திர சம்மதமா? இல்லையே!

நிற்க, நாங்கள் எதிரே தோன்றினால் அபசகுனமாம். அடடா! நாங்களும் மற்றவர்களைப்போல் ஸ்திரீகள் அல்லவா? எங்களை சௌபாக்கியவதி யென்று எவரும் அழைக்கக் கூடாதாம். இன்னும் நாங்கள் தயிர் சாப்பிடக் கூடாது; பால் குடிக்கலாகாது; நல்ல துணி மணிகள் அணியலாகாது; தாம்பூலம் போடலாகாது; கட்டிலில் படுக்கலாகாது; சுபகாரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது; உப்பு உதவாது, தித்திப்பு உதவாது. இப்படி 60 வயது வரையில் காலம் கழிக்க வேண்டுமாம். சகோதர சகோதரிகளே! நீங்கள் நன்றாய் ஆலோசித்துப் பாருங்கள். இது கடவுளின் சட்டமா? ஸ்திரீகள் கெட்டுப்போவார்களென அந்தக்காலத்தில் சிலர் கூடி ஏற்படுத்திய சட்டதிட்டங்களே இவைகள். சாக்கடைகளிலும் குப்பைத் தொட்டிகளிலும் வீழ்த்தப்பட்டிருக்கும் சிறு குழந்தைகளைக் கணக்கிட்டுக் கவனித்துப் பார்த்தால், எவ்வளவு தூரம் அந்த சட்டங்கள் பயனை விளைவித்திருக்கின்றன என்று எளிதில் எல்லோரும் அறிந்து கொள்ளலாம். ஒரு காலத்தில் உடன் கட்டை ஏறுவதும் கடவுள் சட்டமென நினைத்திருந்த ஜனங்கள் பலர். அதற்கு இப்போது சாவுமணி அடித்தாய் விட்டது. அதே போன்றுதான் இதற்கும் என அறியுங்கள். எல்லாவற்றிற்கும் இந்த பாலிய விவாகமே! பாழும் பாலிய விவாகமே! பொல்லாத பாலிய விவாகமே! சீர்குலைக்கும் பாலிய விவாகமே! நீதான் காரணமாயிருக்கின்றாய் ஈசா! இந்த வழக்கம் அடியோடு ஒழிந்து நாடு செழிப்படையாதா? மக்கள் க்ஷேமமடையார்களா? நாட்டார் நன்மையடையாரா? என்போன்ற நாரியர் சுகமடையாரா!! என்று பிரலாபித்துக்கொண்டே நமது சரோஜா ஒரு நீரோடை சமீபம் சென்று வெகு நேரம் அந்த தெள்ளிய நீர்ச்சுழலை உற்று நோக்கிய வண்ணமிருந்து கடைசியாய் "இனிப்பலவிதம் யோசிப்பதில் பயன் என்ன! தென்னிந்திய யுவதி ஒருத்தி பாலிய விவாகத்தாலுண்டாம் தீமையினால், தன் தேகத்தைத்தானே இவ்வாறு இழந்தாள் என்ற செய்தி நாடெங்கும் பரவட்டும்" என்று 'தொப்'பென விழுந்தாள்.

# ராணி மீனாட்சி

"திருமதி"

மதுரை நாயக்கர் ராஜ வம்சத்தரசரில் மீனாக்ஷியும் ஒருவராவர். இவர் ஐந்து வருஷகாலம் ராஜ்ய பாரம் செலுத்தினார். இவர் 1731-ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார். தமது கணவன் சொக்க நாதன் எழுதி வைத்துச் சென்ற உயில்படி ராஜவம்சத்தைச் சேர்ந்த வங்காரு திருமலையின் மகனை ஸ்வீகாரம் செய்து கொண்டார். தமது சகோதரன் வெங்கடராய பெருமாள் நாயக்கன் மூலமாய் அரசாட்சி செலுத்தி வந்தார்.

இப்படி அரசாட்சி செய்துவரும் நாளில், மீனாட்சிக்கு விரோதமாக ராஜ்யத்தில் ஒரு கட்சியேற்பட்டது. இக்கட்சிக்குத் தலைவர் தளவாய் வெங்கடராயாசாரியார் என்பவர். மீனாட்சியை பட்டத்தினின்றும் நீக்கி வங்காரு திருமலையைப் பட்டத்தில் வைக்க வேண்டுமென்பது இக் கட்சியினரின் லட்சியம். ராணி திருச்சிராப்பள்ளி கோட்டையிலிருக்கையில் திருமலையின் கட்சியினர் அவளறியு முன்னர் கோட்டைக்குள், பலாத்காரமாய் புகுந்து விட்டார்கள். இவ்விஷயம் தெரிந்த மீனாட்சி தன் படைத்தலைவருக்கு ஊக்கம் கொடுத்து திருமலையையும் அவன் கட்சிக்காரரையும் தோற்கடித்துத் துரத்தி விட்டாள்.

அக்காலத்தில் ஆறுகாடு ராஜ்யத்தை நவாப் தோஸ்த் ஆலிகான் அரசாண்டு கொண்டிருந்தான். அவன் தக்ஷிண தேச முழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பேராசை கொண்டவன். அவன் அதற்காக தன் மூத்த மகனான ஸதர் ஆலிகானையும், தன் மாப்பிள்ளையும் மந்திரியுமான சந்தா ஸாகியையும் தக்க சேனையுடன் அனுப்பினான். மகம்மதியர்கள் தஞ்சையைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால், திருச்சிராபள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும், தெற்கே திருவாங்கூர்வரை சென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ் செய்துவிட்டுத் தக்க கொள்ளைப் பொருளுடன் திரும்பி வந்தார்கள்.

1734-ம் வருஷம் துரோகி வங்காரு திருமலை, ஸதர் ஆலிகானுடன் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டான். துருக்கர் தலைவன் மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும் விலக்கித் தனக்குப் பட்டங் கட்டினால் அதற்கு பிரதி பிரயோசனமாய் 30 லட்சம் ரூபாய் கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஸதர் ஆலிகான் ஒரு யுக்தி செய்தான். மதுரை அரசாட்சியைப் பற்றித் திருமலைக்கும் மீனாக்ஷிக்கும் ஏற்பட்ட விவாதத்தைத் தீர்த்து வைக்கத் தான் வந்திருப்பதாகவும், அதில் இருதாப்பினும் சாக்ஷ்யம் சொல்லக் கூடியவர்கள் தன் முன் ஆஜராகும் படியாகவும் பறை யடிக்கச் செய்தான். இதையொன்றும் கவனியாத மீனாக்ஷி அலக்ஷ்ய மாயிருந்து விட்டாள். தன் பாத்தியதையை நிர்ணயிக்க அன்னியன் யார்? என்றாள். பேருக்கு ஒரு விசாரணை மாதிரி செய்து விட்டு எதிர்பார்த்த வண்ணமே திருமலைக்கு அநுகூலமாய்த் தீர்ப்புச் சொல்லிவிட்டான். ஸதர்





ஆலிகான் ஒப்பந்தப்படி திருமலைக்கு பட்டங் கட்டி விட்டு 30 லக்ஷ ரூபாயை வாங்கி வரும்படி சந்தா ஸாகியை நிறுத்தி விட்டு ஸதர் ஆலிகான் ஆறுகாடு போய்ச் சேர்ந்தான்.

காரியம் மிஞ்சி விட்டதென்று மீனாட்சியின் மந்திரிகளே துரோகிகளானார்கள். அவளை ஆதரிக்க வில்லை. அதுகண்டு மீனாக்ஷி சந்தா ஸாகியுடன் ஓர் ரகசிய ஒப்பந்தம் செய்தாள். மீனாக்ஷி கோடி ரூபாய் கொடுத்து விடுகிறது என்றும், அதைப் பெற்றுக்கொண்டு சந்தா ஸாகிப் ஒன்றும் செய்யாமற் போய்விடவேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. முள்ளை முள்ளாலேயேதானே வாங்க வேண்டும். வஞ்சனையை வஞ்சனையால் வெல்ல ராணி மீனாட்சி துணிந்தாள். அரசியலில் தந்திரமே முக்கியம். தர்மநியாயம் அடுத்தபடியே. வஞ்சனை மிகுந்த சந்தாஸாகிப் அதற்கிணங்கினான். ஆயினும், மீனாக்ஷி சந்தேகங்கொண்டு அவனைக் கொரான் மேல் பிரமாணம் செய்யச் சொன்னாள். அங்ஙனமே காவேரிக் கரையிலுள்ள தளவாய் மண்டபத்திற் சந்தா ஸாகிப் சத்யம் செய்து கொடுத்தான். பிரமாணம் தன்னைக் கட்டுப் படுத்தாமலிருக்கும் பொருட்டு கொரானுக்குப் பதிலாக ஒரு செங்கல்லைப் பட்டுத் துணியாற் சுற்றி அதன்மேல் பிரமாணம் செய்து ஏமாற்றி விட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாஸாகிப் கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டையும் அதிலுள்ள யானை குதிரைகளும், கஜானாக்களும் கைவசமானதும், தன் அந்தரங்கமான கபட எண்ணத்தை வெளியிட்டான். தான் சொந்தம் பாராட்ட வந்தவனே யொழிய மீனாக்ஷியையாவது திருமலையையாவது காப்பாற்ற வந்தவனல்லவென்று தெரிவித்துவிடவே திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடிவிட்டார்கள். பாவம்! ராணி மீனாக்ஷி கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டாள். மீனாக்ஷியின் அரண்மனையைக் காக்கத்தக்க சேனையை நிறுத்திவிட்டு, மிகுந்த சேனையுடன் சந்தா ஸாகிப் மதுரை நோக்கிப் புறப்பட்டான். மதுரையிலிருந்து ராணி கட்சியைச் சேர்ந்த கோவிந்தையர், ராவணையர் என்ற இரண்டு சேனாதிபதிகள் 8000 குதிரைப் படையுடன் திண்டுக்கற் பக்கத்தில் துருக்கற் படையை எதிர்த்துத் தோற்றுப் போனார்கள். துருக்கர் மதுரை நோக்கி வரவே திருமலையின் இன்னொரு படை, அவர்களை அம்மயநாயக்கனூரில் எதிர்த்து வீராவேசத்துடன் போர் புரிந்தும் கடைசியில் தோற்றுப்போயிற்று. சந்தா ஸாகிப் மதுரை வந்து சேர்ந்தான். திருமலை நகரைவிட்டுத் தப்பி ஓடிச் சிவகங்கை போய்ச் சேர்ந்துவிட்டான். மதுரைத் தேச முழுதும் மகமதியர் வசமாகி விட்டது. மீனாக்ஷி உயிருடன் இருக்கும்வரை யாராவது கலகஞ்செய்துகொண்டேயிருப்பார்களென்றெண்ணி, சந்தாஸாகிப் மீனாக்ஷியைக் கொலைசெய்ய உத்தேசித்தான். இது விஷயம் தெரிந்து அவன் கையாற் சாகும்வரை காத்திராமல், மீனாக்ஷி தானே விஷம் உண்டு இறந்தாள்.

மாற்றான் கையில் சிக்கி மானமிழந்து உயிர் வாழ்வதுடன் தானே உயிரைத் தியாகம் செய்துகொண்டாள் மீனாட்சி. புருஷர்களின் பொறாமையினாலும், வஞ்சக சதிகளாலும், தேசத்துரோகத்தாலும் என்ன பலன் உண்டாயிற்று? மதுரை ராஜ்யம் அன்னியர் வசம் அகப்பட்டது. ஸ்திரீ ஹத்தியின் பயனை நாயக்கர்கள் அனுபவித்தனர். பலவித சூட்சிகளுக்கும், நம்பினோரின் மோசங்களுக்கு மிடையில் ஒரு ஸ்திரீ எவ்வளவுதான் சமாளிக்கமுடியும்? தன்னுறவினரின் துரோகத்துக்கும், எதிரியின் வஞ்சனைக்கும் ராணி மீனாட்சி பலியுண்டாள். தன் மானத்தையாவது விடக்கூடாதென்று விஷத்தை அமிர்தமாக பாவித்து உயிர் நீத்தாள். பெண்ணரசை விரும்பாத ஆடவர்களுக்கு இச் சரித்திர சம்பவம் ஓர் படிப்பினையாகுமா?

# ஸ்ரீ விநாயக சதுர்த்தி விரதம்

"ஞானு"

உலக முழுவதையும் பெருது பெற்ற உமாதேவியார் தமது தோழிகளாகிய ஜயை விஜயை, முதலாயினோரோடு ஒரு நாள் விளையாடுகையில் விஜயை விமலா தேவியைப் பணிந்து "தாயே! நமது ஈஸ்வரருக்கு நந்தி, பிருங்கி, முதலிய பிரமத கணங்கள் எண்ணற்றவர்களாயிருக்கின்றனர். நமது ஆசார வாயிலை சிவகணங்களே காக்கின்றனரெனினும் அவர்கள் சிவபிரானது ஆக்கினைப்படி நடப்பாரேயன்றி ஒரு காலத்திலும் நமதாக்கினைப்படி நடவார்கள். ஆகவே நமக்கென்று கணபாலர்களும் கணங்களும் தனியே வேண்டும்" என்று மொழிந்தனள். இது கேட்ட விமலையும் யோஜித்து வேண்டுவன செய்வாம் எனக்கூறினாள். சில நாட்களுக்குப் பின் தேவியார் தோழியரோடு நீராடுகையில் சமயம் தெரியாது நந்திதேவர் உட்புக, அம்மையார் உபய வஸ்திரமணிந்திருந்தாரெனினும் வெட்கி, "விஜயை சொல்லியது மெய்தான். நமது கட்டளையின்றி இவ்வந்தபுரத்துக்கு யாரும் வரக்கூடாதுதான்," எனக் கருதி, கையில் ஜலங்கொண்டு, பிரணவஸ்ரூபமும், யானை முகமும், திரிநேத்திரங்களும், மங்கள ரூபமுமுள்ள கணனென்னும் புத்திரனை நிர்மித்துப் பிராணன் கொடுத்து திருவாயிலில் அமர்த்தி "நீ நமதுத்திரவின்றி எவரேயாயினும் உள்ளே விடற்க" என்று உத்தரவு தந்து "நீ எனது அன்புக்குகந்த புத்திரன். தீர்க்காயுளாயிரு" என்று ஆசீர்வதித்து அந்தப்புரமடைந்தாள்.

அடுத்தநாளே சிவபெருமான் பிரமத கணசகிதமாய் தேவியின் அந்தப்புரத்துக்கு வர கணபாலர் ஒருவரையும் உள்ளே செல்லவிடாது தண்டத்தை கையிலெடுத்துக்கொண்டு தடைசெய்ய, சிவபெருமான் "நான் யார்; சிவனென்றறியாயா? உள்ளே செல்லவிடு" என கேட்க "சிவனானால் என்ன? உமக்கு மட்டும் என்ன விசேஷம்? எனது தாயின் கட்டளையின்றி யாராயிருப்பினும் உள்ளே விடமாட்டேன்" என கணபாலர் கூற "நான் உன் தாயின் நாயகன், என்னை உள்ளே விடு, உன்னை தாய் கோபியாள்" என சிவபிரான் கூறியும் கணபாலர் உள்ளேவிட மறுத்துவிட்டார். இதுகேட்ட சிவபிரானுக்கு கோபம்வர பலாத்காரமாய் கணங்களுடன் உள்ளேபுக யத்தனிக்கவும் கணபாலர் தண்டத்தால் கணங்களை நையப் புடைத்தார். சிவபிரானாலும் நந்தி முதலானவர்களாலும் எதிர்க்க முடியவில்லை. பிரம்மாவும் விஷ்ணுவும் எதிர்த்து பார்த்தார்கள்? கணபாலரை எதிர்க்க அவர்களாலும் முடியவில்லை. கணபாலரோ வஸ்திரத்தை வரிந்துகட்டி தண்டத்தை, பிரும்மா, விஷ்ணு, சிவன், முதலியோருக்கு காட்டி "ஜாக்கிரதை" என முழங்கினார். இந்த முழக்கச் சத்தம் அந்தப்புரத்துள் தேவியாருக்கு கேட்டு கணபாலரிடம் ஓடோடியும் வந்தார். ஸ்ரீ தேவியாரைக் கண்டதும் நாரதர், நந்தி, மற்றுமுள்ள கணங்கள் யாவரும் ஸ்ரீ தேவியைத் துதிக்கலானார்கள்;



*ஜகதம்ப நமஸ்துப்யம் பிரக்ருதயையே*
*நமோஸ்துதே*

*அபர்ணயை நமஸ்துப்யம் கிரிஜாயை*
*நமோநம:*

*பவார்யைதே நமஸ்சைவ துர்காயைதே*
*நமோஸ்துதே*

*பத்ராயை நமஸ்துப்யம் பிரக்ருத்யைதே*
*நமோஸ்துதே*

*சண்டிகாயை நமஸ்சைவ காத்யாயர்யை*
*நமோஸ்துதே*

"ஜகந்மாதாவே! பிரகிருதிரூபியே! ஹிமாசலன் புத்திரியே! பவானியே! சர்வமங்களையே! சண்டிகாதேவியே! கார்த்தியாயினியே நமஸ்காரம்! நமஸ்காரம்! அபயம்! அபயம்! நாங்கள் யாவரும் உம்மால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். க்ஷமித்தருளவேண்டும்! காத்தருளவேண்டும்," என வேண்டி துதித்தார்கள். ஸ்ரீ பார்வதி தேவியாரும் அவர்களிடம் மனமிரங்கி "ஹே! கணங்களே! ஹே நாரதா! ஹே! நந்தி, மற்றும் உங்கள் ஈஸ்வரர்களான பிரும்மா, விஷ்ணு, சிவன் யாவரும் கணபாலரை துதித்து பூஜிக்கவேண்டும்" என்றாள். கணபாலரை நோக்கி "நீ கணங்களுக்கெல்லாம் ஈசன். ஆகவே உனக்கு இன்று முதல் கணேசர் என பெயர் வழங்கட்டும். உன்னை பூஜித்த பிறகே எங்களுக்கு பூஜை! இந்த சுதினமாகிய விநாயக சதுர்த்தியில் உன்னை பூஜிப்பவருக்கு எல்லாவித சம்பத்தும் பெருகி தீர்க்காயுளாய் வாழ்வார்கள்" என்று கூறி அநுக்கிரஹித்தாள். சிவபிரானும், கணேசரை அணுகி, மடிமீதிருத்தி, "ஹே! கணபதி நீ சற்று நேரத்துக்குள்ளாகவே எங்களை எவ்வளவு பாடுபடுத்திவிட்டாய்! பிரளயம் வந்து விடுமோவென நாங்கள் பயந்துவிட்டோம். உன்னை பூஜிப்பவருக்கு சகல காரியங்களையும் இடையூறின்றி நடத்த அநுக்ரஹிப்பாய். இன்று முதல் உனக்கு முதலில் பூஜை செய்த பின்னரே எங்களுக்கு பூஜை" எனக் கூறி அநுக்கிரகித்தார்.

சில நாட்களுக்குப் பின்பு, கயமுகன் என்னும் அசுரன் ஒருவன் திருமூர்த்திகளாலும் காணற்கரிய சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்ய சிவபெருமான் அவனது அருந்தவத்திற்கு மெச்சி அவனது விருப்பப்படி தேவர்கள் முதலிய யாவராலும் எவ்வித ஆயுதங்களாலும் இறவாதிருக்கவும், தேவர்கள் முதலிய யாவரும் அவனுக்கடங்கி அவனிட்ட ஏவல்களைச் செய்து நிற்கவும் வரந்தந்து மறைந்தருளினார். பெற்ற வரத்தினால் கர்வமடைந்த கயமுகனும் முனிவர்களையும் தேவர்களையும் பிடித்துச் சிறைப்படுத்தி வருத்தி உலகத்தை அரசாண்டு பெருங் கொடுமைகளைச் செய்து வந்தான். நெடுங் காலமாக இவன் செய்யுங் கொடுமைகளை சகிக்க இயலாது முனிவர்களும் தேவர்களும் வருத்தமடைந்தவர்களாய், சக்தி தேவியாலுண்டாக்கப் பெற்றவரும் பிரணவ சொரூபியாய் விளங்குபவருமான விநாயகக் கடவுளின் சந்நிதியில் வந்து முறையிட்டனர்.

சிந்தூர நிறமேனியும், யானைமுகமும், பூதவயிறும், ஒற்றைக் கொம்பும், மூன்று கண்களும், ஐந்து கரங்களும், அக்கரங்களில் அங்குசம், பாசம், மோதகம், கலசம், தந்தம் என்னு மிவற்றையுமுடைய விநாயகர் அவர்களுக் கிரங்கிப் பூதகணங்கள் புடைசூழச் சென்று, அக் கயமுகாசுரனோடெதிர்த்துப் போர் புரிந்து அவன்

எவ்வித ஆயுதங்களினுலுமிறவான் என்றுணர்ந்து தமது திவ்விய திருமுகத்தின் கண் விளங்கியிருந்த தந்தங்களில் வலப்புறத் தந்தத்தை யொடித்து அதனுல் அவனை வதைத்தனர். சிவபெருமானின் வரப்பிரசாதம் பெற்றவனுதலின் அவன் இறவாது அச்சரீரம் மாறி மூஷிக வடிவங் கொண்டு போர் செய்தான். அதைக்கண்ட ஏகதந்த விநாயகர் அப் பெருச்சாளியைப் பிடித்து அதன்மேல் ஆரோகணித்துக் கொண்டார். கணேசருக்கு வாகனமாயமைந்ததும் அவனுக்கு ஞானேதயமாய் அக்கடவுளர்க்கு வாகனமாயிருப்பதே பெரும் பேறென்றெண்ணி இறும்பூதெய்தி, அக்கடவுளின் கிருபையால் வாகனமாயமைந்தான். பிறகு தேவர் முதலியோர் யாவரும் ஏககாலத்தில் ஆவணித்திங்களில் பூர்வ பக்ஷத்துச் சதுர்த்தி திதியில் பூர்ணமாய் பக்தி செலுத்திச் சித்தியடைந்து தத்தமக்கு வேண்டும் வரங்கள் பலவற்றைப் பெற்றுக்கொண்டதோடு இச்சுபதினத்தில் பூசிப்பவருக்கு வரமுந் தந்தருளல் வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்கள்.

அதன்படி இராவணன், தக்கன் முதலியோர் பூஜித்து அரசையும், அகத்திய முனிவர் பூசித்து வேண்டிய வரங்களையும், அகலிகை பூஜித்து கௌதமரையும், ஸ்ரீராமபிரான் பூஜித்து இழந்த சீதையையும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூஜித்து ருக்மணி தேவியையும் அடைந்தனர். அஷ்ட தேவதைகளும் அருச்சித்து அஷ்டபோகமும் பெற்றுர்கள்.

"அரும்பிய விடரெலா மறுக்கத் தக்கது
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது
பொரும் பகை வலிகளும் போக்கத் தக்கது
விரும்பிய பொருளெலாம் விளைவிக்கத் தக்கது"


விநாயக சதுர்த்தி விரதமே. இது பற்றியே கவிச்சக்கரவர்த்தி பாரதியாரும்.

சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்
குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்
அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்.
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்
வித்தை வளரும் வேள்வி யோங்கும்
அமரத் தன்மையு மெய்தவும்
இங்கு நாம் பெறலாம் இதுணர்வீரே
(சகோதரிகளிதை நன்குணர் வீரே)

அழகாக செய்யுளின் மூலம் விளக்கியுள்ளார்.

ஸ்ரீ விநாயகக் கடவுள், பிரமதேவன் கொட்டாவியில் உதித்த சிந்துரனென்பவனைச் சங்கரிக்கக் கஜானன மூர்த்தியாயவதரித்த தினமும், நம்பியாண்டார், ஔவையார், மற்றும் பலரும் தொழுது அவரவரெண்ணப்படி தக்க பேறடைந்த தினமும் ஆவணிமாத பூர்வபக்ஷ சதுர்த்திதியே. ஆகவே அத்தினம் விநாயக சதுர்த்தி விரதமனுஷ்டிக்கத்தக்க தினமாகியது. இவ்விநாயக சதுர்த்தி விரதம் இம்மாதம் ஆவணிமாதம் 13உ (ஆகஸ்டு 28-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) வருகின்றது. அன்று நமது சகோதரிகள் ஸ்ரீ விநாயக மூர்த்தியை ஆராதிக்க வேண்டும். ஸ்ரீ விநாயகரை பக்தி செய்யும் சகோதரிகளுக்கு அளவிலாப் பெருமையுண்டு. அதிசய சக்தியுண்டு. எந்நாளும் சந்தோஷமுண்டு. அஷ்டலக்ஷ்மியின் கடாக்ஷமும் உண்டாகும் என்பது திண்ணம்.




பால விநாயகர்



பால விநாயகர்



"ஆஷாடி ஏகாதசி" ஸ்நானம்

(பண்டரிபுரத்தில் இப்புனித தினத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் சந்திரபாகநதியில் ஸ்நானம் செய்கின்றனர்.)

## ஸ்ரீ விநாயக சதுர்த்தி விரதம்

எனது அன்பார்ந்த சகோதரிகளே! நீங்களே இம்மாதம் (ஆவணி 13, (ஆகஸ்டு 28) ஞாயிற்றுக்கிழமை) வரும் விநாயக சதுர்த்தியை கொண்டாடி, விநாயகரை ஸ்துதித்து, அவரை அருச்சித்து, மோதகம் நேவேத்தியம் பண்ணி, இன்னிசை கீதங்களால் அவரை கொண்டாடி அவரது அனுக்ரஹத்தைப் பெற்று சகல சம்பத்துக்களுடனும் கிரஹலக்ஷமிகளாய் வாழ்வீர்களாக!

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

# ஞானகணபதி தியானம்

ஸ்ரீதா முராஹரி என்ற மெட்டில்

பல்லவி

ஞான கணபதியை தியானம் நாம் செய்குவோமே

அ. பல்லவி

கான ரூபமாகவே ஆனந்த ரூபனே (ஞான)

சரணங்கள்

1. அத்தி முகத்தோனே
சித்தி அளிப்போனே
பக்தியுடன் பாதம்
நத்திப் பணிகுவோமே (ஞான)

2. அறிவோர் நிறைந்துள்ள
அரியதோர் அவனியில்
சிறியோம் செய் காரியம்
திருவுறச் செய்குவானே (ஞான)

JL N15 M N37 1138.2



# ஒக்காரை முதலியன

**"ஸரோஜா"**

ஒக்காரையைக் கடலை பருப்பிலும் செய்யலாம். கோதுமை மாவிலும் செய்யலாம். கோதுமை மாவு ஒக்காரை செய்வது எப்படி என்றால் மாவை நன்றாக சலித்தெடுத்துக்கொண்டு, முதலில் பாணலியில் நெய் விட்டு "கம்" என்று வாசனை வரும் மட்டிலும் வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு படி மாவிற்கு அரைப்படி வெல்லப்பொடி கணக்கில் வெல்ல கட்டியை உடைத்து அளந்து அடி கெட்டியாக விருக்கும் பாணலியில் ஜலம் விட்டு கரைத்து அடுப்பின் மேல் வைக்கவேண்டும். வெல்லம் நன்றாகக் கரைந்து, கம்பிப்பாகு வந்த உடன், அதில் நெய்விட்டு வறுத்து வைத்துக்கொண்டிருக்கும் மாவைத்தூவி, கட்டியும், முட்டியும் ஆகாவண்ணம் கைவிடாமல் கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். (வறுத்த கோதுமை மாவை பாகில் கொட்டுவதற்கு முன் சல்லடையில் ஒரு தடவை சலித்து வைத்துக்கொண்டால் நலம்) கிளரும் பொழுது அடி பிடித்துக் கொள்ளாமலிருக்க எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு நெய்யை கொஞ்சம் கொஞ்சமாக கலந்து கொண்டு நிதானமான எரிச்சல் போட்டு கிளரிக் கொண்டே வந்து ஒக்காரை பூ போல் மிருதுவாக வெந்து "பல பல" வென்று வெந்து உப்புமா பதம் வந்ததும் கீழே இறக்கி விடவேண்டும். நெய்யில் வறுத்து துண்டுகளாக செய்த, மிந்திரி பருப்பையும் ஏலப்பொடியையும் ஒக்காரையுடன் இப்பொழுது கலக்க வேண்டும். நெய் ரொம்பவிட்டு, ரொம்ப வறுத்து விட்டாலும் பதம் கெட்டுப் போவதல்லாமல் ருசியும் கெட்டுப் போய்விடும். ஒக்காரை "உப்புமாவு" பதத்திற்கு வருவதற்குள்ளாகவே அடுப்பிலிருந்து இறக்கிவிட்டாலோ "நொளுக்கு" என்று களியாட்டமா ஆய்விடும். பதம் பார்த்து நிழல் போன்ற எரிச்சலில் கிளறி இறக்கினால் மிகவும் ருசியாகத்தானிருக்கும்.

## கடலைப் பருப்பு ஒக்காரை

கடலைப் பருப்பை முதலில் வேகவைக்க வேண்டும். பின்பு வெந்த பருப்பை வடியப் போட வேண்டும். வெந்த பருப்பிற்கு தேங்காய் துருவல், ஏலப்பொடி, வெல்லம் எல்லாம் சேர்த்து உரலில் கொட்டி அறைக்க வேண்டும். பின் மேல் தெரிவித்திருப்பது போலவே கோதுமை மாவு ஒக்காரை போலவே பாணலியில் நெய் விட்டு, நெய்யில் முத்தையை போட்டு உதிருதிராக ஆகுமட்டும் கிளறவேண்டும். போதுமான அளவு நெய் சேர்த்து இவ்விதம்கிளறி இறக்க வேண்டியது. இந்த ஒக்காரை "புட்டு" மாதிரி ருசியாக விருக்கும்.

## கொழும்மாவு

இந்த நவநாகரிக காலத்தில் புதிய தின்பண்டங்களை பார்க்க, பார்க்க பழைய தின்பண்டங்கள் செய்வதை மறந்து கொண்டேவருகிறார்கள். ஆனால் நம் பாட்டிமார்



கள் செய்து கொடுத்துக் கொண்டிருந்த பக்ஷணங்களின் மணமும் மற்றும் ருசியும் அதொரு மகிமைதான். வாய்க்கு அவ்வளவு ருசியையும், மணத்தையும் தற்காலத்து தின் பண்டங்கள் கொடுப்பதாக விருந்தாலும் கூட பழையவைகளின் மாட்சியே மாட்சி. "கொழுமாவு" என்பதும் நம் பாட்டிமார்கள் செய்து கொடுக்கும் ஒரு ருசிகரமான பக்ஷணம்தான். அரிசி மாவை (கொழமாவை) புளித்தண்ணீரில், வேண்டிய உப்பு சேர்த்து நெகிழ பிசைந்து (இட்லிமாவுபோல்) வைத்துக் கொள்ளவேண்டும். அடிகட்டியான பாணலியில் நிரம்ப நல்லெண்ணை விட்டு (எண்ணையும் நெய்யுமாகவும் கலந்து வைக்கலாம்) அடுப்பின் மேல் வைத்து, எண்ணை காய்ந்ததும், பச்சை மிளகாய், கருவேப்பிலை, கடுகு கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு எல்லாம் தாளித்து, அதில் பிசைந்த கொழமாவை கொட்டி கைவிடாமல் கிளற வேண்டும். மாவு வெந்து உப்புமா பதம் வந்தவுடன் அடுப்பிலிருந்து கீழே இறக்கி விடவேண்டியது.

## உருளைக்கிழங்கு அல்வா

உருளைக்கிழங்கு அல்வா செய்வதற்குக் கீழ்கண்ட சாமான்கள் வேண்டும். ஒரு பவுண்டு உருளைக்கிழங்கு, ஒரு பவுண்டு சர்க்கரை, ஒரு கப் நெய், ஏலக்காய் தூள் ஒரு டீஸ்பூன், குங்குமப்பூ கொஞ்சம், முந்திரிப்பருப்பு இரண்டுபலம், ஒரு பலம் திராட்சைப்பழம்.

உருளைக்கிழங்கை வேகவைத்து தோலை உறித்துவிட்டு மசித்துக்கொள்ள வேண்டும். சர்க்கரையை ஒரு கப் ஜலத்தில் போட்டுக் கறைத்து ஒரு வாயகண்ட பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைக்கவேண்டும். நெருப்பு அதிகமாக எரியாமல் இளஞ்சூடாக இருக்கும்படி எரியவிட வேண்டும். அது கம்பிப்பாகாக ஆகும் தருணத்தில் குங்குமப்பூ, ஏலப்பொடி, மசித்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கு மொந்தை, இவற்றைப் பாகில் கொட்டி நன்றாகக் கிளற வேண்டும். இரண்டு மூன்று நிமிஷங்களுக்குப் பின் நெய்யை அதில் கொட்டி மேலும் கிளறிக்கொண்டிருக்கவேண்டும். இதற்கு முன்னாலேயே முந்திரிப்பருப்பை சிறு துண்டுகளாக்கி நெய்யில் வறுத்து வைத்துக்கொள்ளவும். அல்வாவில் நெய் விட்டு ஐந்து நிமிஷங்களுக்குப் பின் இந்த முந்திரிப் பருப்பையும், திராட்சைப் பழத்தையும் அதில் கொட்டிக் கிளறவும். பின் ஒரு தட்டில் நெய் தடவி அதில் அல்வாவைக் கொட்டிக் குளிர வைக்கவும். பிற்பாடு எடுத்துச் சாப்பிட்டால் வெகு ருசியாக இருக்கும்.

## 'குவேக்கர் ஓட்ஸ்' தோசை

மேலே சொன்ன 'குவேக்கர் ஓட்ஸ்' தோசைகள் ஐந்து செய்வதற்கு கீழ்கண்ட அளவு அந்த அந்த சாமான்கள் தேவை. 'குவேக்கர் ஓட்ஸ்' கால் பவுண்டு டின், ஒரு ஆழாக்கு தயிர், இரண்டு மிளகாய் வத்தல், துளி பெருங்காயம், ஒருடீ ஸ்பூன் உப்பு, நெய் ஒருடீ கப்.

'ஓட்சை' தயிரில் போட்டு சுமார் 15 நிமிஷம் ஊறவைக்கவும். அதில் மிளகாயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் போடவும். பெருங்காயத் தண்டையும் கறைத்து அதில் ஊற்றவும். உப்பையும் போட்டுவிட வேண்டியது. எல்லாவற்றையும் நன்றாகக் கறைக்கவும். இதை நெருப்பாக [illegible]



134086

அடுப்பில் தோசை வார்க்கும் சட்டியைப் போட்டு அதில் ஒரு டேபிள்ஸ்பூன் நெய்யை விடவும். நெய் சூடானவுடன் 'ஓட்ஸ்' தோசை மாவில் இரண்டு டேபிள் ஸ்பூனைச் சட்டியில் விட்டு உள்ளங்கை அளவு அதை நன்ருகப் பரப்பிவிடவும். சுமார் மூன்று அல்லது நான்கு நிமிஷங்கள் வெந்தபின் திருப்பிப் போட்டு மறுபடியும் ஒரு டேபிள் ஸ்பூன் நெய் விடவும். ஒரு மூன்று நிமிஷம் அது வெந்தபின் எடுத்துவிட வேண்டியது. இதேபோல் ஒவ்வொரு தோசையையும் சுட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

## ஆரஞ்சுப் பழத்தோல் சட்ணி

'குவேக்கர் ஓட்ஸ்' தோசைக்குத் 'தொட்டுக்கொள்வதற்கு' ஆரஞ்சுப் பழத்தோல் சட்ணி வெகு பொருத்தமாயும், ருசியாகவும் இருக்கும். இது செய்வதற்கு குடகு ஆரஞ்சுப் பழங்களின் தோலே விசேஷம். கெட்டியாகவும், நன்ருகவும் பழுத்த இரண்டு பழங்களின் தோலும், இரண்டு மிளகாயும், ஒரு டீஸ்பூன் கடுகும், கொஞ்சம் புளியும் ஒரு சிறு வெல்லக்கட்டியும், உப்பு ஒரு டீஸ்பூனும் வேண்டும்.

கடுகையும், மிளகாய் வத்தலையும் ஒரு டீஸ்பூன் நல்லெண்ணையில் போட்டு வறுத்துக்கொள்ளவும். ஆரஞ்சுத் தோலையும் சின்னத் துண்டுகளாக நறுக்கி அவற்றை இரண்டு டீஸ்பூன் நெய்யில் பொன்னிறத்துக்கு வறுத்துக்கொள்ள வேண்டியது. பின் வறுக்கப்பட்ட ஆரஞ்சுத்தோல், கடுகு, மிளகாய், முதலியவற்றையும், புளியையும், வெல்லக்கட்டியையும் உப்பும் கலந்து நேகாக துளி ஜலம் தெளித்து அம்மியில் வைத்து அறைத்தெடுத்துச் சாப்பிட்டால் எத்தனை தோசைகள் வேண்டுமானாலும் சாப்பிடலாம்.



# 'தாயைப்போல பிள்ளை'

ஸ்ரீமதி எஸ். கமலா

○

மங்கலமென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு

—திருவள்ளுவர்.

இல்லத்துக்குச் சிறப்பையும், அழகையும் அளிப்பவள் மனைவி. மனையாளது நற்குண நற்செய்கைகள் குடும்பத்துக்குப் புகழையும் கௌரவத்தையும் கொடுக்கின்றது. இப்பேர்ப்பட்ட குணமுடைய கிரஹலக்ஷ்மிக்கு நல்ல மக்கள் பெறுதல் அவளது நற்குண நற்செய்கைகளுக்கு நல்ல ஆபரணமென்று பெரியோர் கருதுகின்றனர். உத்தம மங்கைக்கு பூரண அழகையும், ஸ்தானத்தையும் கொடுப்பது நற்குண நற்செய்கைகள் மட்டுமல்லவென்பதும், சத்சந்தானமும் வெகு முக்கியமென்பதுமே மேற்கூறப்பட்ட குறளின் கருத்து. இல்லற வாழ்க்கையின் உயர்ந்த லட்சியங்களில் வம்சாவிருத்தியும் ஒன்று என்பது யாவரும் அறிந்த விஷயம். தாய்மையை விரும்பாத ஸ்திரீ உலகத்திலிருக்கவே மாட்டாள். ஒவ்வொரு மங்கையும் என்று தான் குழந்தைப் பெற்று அதை அன்போடு வாரியெடுத்து மார்போடணைத்து உச்சி முகர்ந்து உவந்து மகிழ்வோம் என்று ஏக்கத்துடனேயும், ஆவலுடனேயும் அந்நன்னாளை எதிர் நோக்கியிருப்பர். அந்நாளை அவர்களின் வாழ்க்கையில் ஒரு பிரதான தினமாகக் கருதுவர்.

இவ்வளவு பேரானந்தம் ஏன் மக்கள் தம்பதிகளுக் களிக்கின்றனர்? என்று கேட்டால் அது தான் இயற்கை இன்பம். தங்களது இன்பத்தின் விளைவுகளான மக்களை தாய் தந்தையர் எவ்வளவுதான் விரும்பமாட்டார்கள்? அவர்களின் அன்புக்குமோர் எல்லைகாணமுடியுமோ? செல்வங்களுள் சிறந்த செல்வம் மக்கட் செல்வமேயன்றோ? ஆகையினாலன்றோ "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்ல பிற" வென்று பொய்யில் புலவர் கூறியிருக்கின்றார். செல்வங்களிளெல்லாம் தலையாயது மக்கட் செல்வம் என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். நாமும் நமது வாழ்க்கையில் தம்பதிகள் புத்திரபாக்கியம் பெறும் பொருட்டு எந்த விதமான தியாகங்களையும் செய்யத் தயாராய் இருக்கின்றனர் என்பதைக் காண்கிறோம். தான தர்மங்களும், விரத பூஜா அனுஷ்டானங்களும் செய்தாவது தம் மக்களின் மெய்தீண்ட ஆவல் கொள்கிறார்கள். ஏன் அவ்வளவு ஆசை? "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர், சொற்கேட்டலின்பஞ் செவிக்கு". தம் அருமந்த குழவிகளின் உடல் தங்கள் மேனியிற் பட்டாலே ஒரு வித அற்புத இன்பத்தை தாய்மார்கள் அனுபவிக்கின்றனர். அவர்களது சொற்கள் அதனினும் ஆனந்தத்தைப் பெற்றோர்க்கு அளிக்கின்றன. அச் சொற்களின் பெருமையை வள்ளுவர் எவ்வளவு

அழகாகச் சொல்லியிருக்கின்றார் பாருங்கள்! "குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள், மழலைச் சொல் கேளாதவர்" என்று கூறியிருப்பது உண்மையே அல்லவா? எத்தனை தாய்மார்கள் தங்கள் குழவிகளின் 'உளரல்களை' மழலைகளை பல விதமாகப் புகழ்ந்து தங்களிஷ்டர்களிடமெல்லாம் கூறி பெருமை அடைகின்றனர் என்பது நாம் யாவரும் அறிந்ததே. குதலைச் சொற்கள்—பொருள் புரியாமல் மதலைகள் உதிர்க்கும் சொல்—பெற்றெடுத்த பெண்களுக்கு புல்லாங்குழலினினோசையினும், வீணையினொலியினும் சிறந்ததாகவும், அதிகமான இன்பத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

அது மட்டுமா? சாதாரணமாக அசுத்தமான காரியங்களை நங்கையர்கள் கண்டால் மிகவும் வெறுக்கின்றனர். எப்பொழுதும் எதையும் சுத்தமாக வைத்துக் கொண்டு கண் குளிரக்கண்டு கர்வம் கொள்ளுவார்கள். ஆனால் தாம் சாப்பிடும் போது தமது செல்வக் குழந்தை வந்து அந்த அன்னத்தில் தன் அழுக்குக்கையை விட்டுக் குழப்பி அளைந்தால் அச்சோற்றை அவர்கள் வீசியெறிந்து விடுகின்றனரா? இல்லை. அந்த சிதைபட்ட அன்னம் அவர்களுக்கு மதுரமிக்க அமிர்தத்தைப் பார்க்கினும் இனிமையுடையதாயிருக்கும். ஆகையாலன்றோ பொய்யா மொழிப்புலவரும் "அமிழ்தினு மாற்ற வினிதே தம் மக்கள் சிறு கையளாவிய கூழ்" என்று கூறியிருக்கின்றார்.

இவ்வளவு இன்பத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கும் தங்கள் குழந்தைகளை தாய்மார்கள் மிகவும் புத்திசாலித்தனமாக வளர்க்கவேண்டியது அவர்களது முதற் கடமையல்லவா? "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை" என்பது பண்டை மொழி. எனவே தாய் எவ்வாறு இருக்கின்றாளோ அவ்வாறே குழந்தைகளின் குணகுணங்களும், பழக்க வழக்கங்களும், ஒழுக்க நடவடிக்கைகளும் அமையும். ஆகையால் தங்கள் குழந்தைகள் பிற்காலத்தில் சான்றோர்களாக இருக்கும்படியான வாழ்க்கை முறையை தாய்மார்கள் போதிக்கவேண்டும். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்" என்றபடி தாயானவள் தனது குழவியைப் பெற்ற காலத்திலடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அச்சிறு மகவு பெரியதாகி கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்ததெனக் கேட்குங்கால், பலர் புகழக்கேட்கும் பொழுது அதிகமான மகிழ்ச்சியை அடைகின்றாள்.

மூவர்ண ஓவியத்தில் ஓரிளமாது தேவியை நமஸ்கரித்து தியானித்த வண்ணம் ஒரு வெண் தாமரை புஷ்பத்தை தேவியின் பாதமலரில் சமர்ப்பிக்கின்றாள். அந்த நற்செய்கையை தன் தாய் செய்வதை கவனித்துக்கொண்டிருந்த இளமதலை தானும் சில மலர்களை தேவிக்கு தன் மென் கரங்களால் கொடுக்கின்றது. என்ன தூய்மையான மனது! குழந்தைகளுக்குப் பிறர் செய்வதைத் தாங்களும் செய்யும் குணம் இருப்பதால் பெரியோர்கள் அவர்கள் முன் நற்காரியங்களையும், நற்பேச்சுகளை மட்டுமே பேசி, அவர்கள் பிற்காலத்தில் தங்களுக்கும், தங்கள் பெற்றோருக்கும் நற்கீர்த்தியும், புகழும் கொண்டுவருமாறு செய்வார்களாக!



# இத்தாலி

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

இன்று உலகசமாதானத்துக்கு உலை வைத்துக்கொண்டிருக்கும் மூன்று முக்கிய நாடுகளில் சென்ற இதழில் ஜப்பானைப்பற்றி எழுதியிருந்தேன். இம்மாத சஞ்சிகையில் கலியுக ஹிரண்ய கசிபுவாகிய முஸோலினி சர்வாதிகாரியாக விளங்கும் இத்தாலி நாட்டைப்பற்றி எழுதுகிறேன். இத்தாலியே சமீபத்தில் அபிசீனியாவை விழுங்கியது. இன்றும் ஸ்பெயினைக் கபளீகரம் செய்ய முயற்சித்து வருகிறது.

இத்தாலி ஆதியில் ஒரு சிறு நாடே. தற்சமயம் இத்தாலி என்று அழைக்கப்படும் தேசம் பலசிறிய சிறிய நாடுகள் ஒன்று சேர்க்கப்பட்ட ஒரு பெரிய வல்லரசு. இந்த "ஒற்றுமை இத்தாலி" (United Italy) 1861ம் வருஷம் தான் ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லலாம். அதற்குமுன் அத்தேசத்தில் உள்நாட்டுக் கலகங்களும் சிறு சிறு நாடுகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டுமிருந்தன. இத்தாலியை ஒன்றுபடுத்தி அது ஒரு கௌரவ ஸ்தானம் பெற அடிகோலியவர்கள் மூன்று தேசீய சிங்கங்கள். அவர்கள் மாஜினி, கரிபால்டி, ஸவூர் ஆவர். இம் மூன்று இரத்தினங்களே இத்தாலி ராஜ்யத்தின் ஸ்தாபகர்கள் என்று கூறின் அது மிகையாகாது. இத்தாலி ஐரோப்பா கண்டத்தின் மத்தியிலுள்ள ஒரு தீபகற்பம். இதில் ஸிஸிலி, சார்டீனியா முதலிய தீவுகளும் சேர்ந்திருக்கின்றன. இதன் பரப்பளவு 118,130 சதுரமைல்கள். ஜனத்தொகை சுமார் ஆறுகோடி.



புஷ்பம் விற்கும் இத்தாலிய இளமங்கை

## அரசியல்

இது தற்சமயம் சர்வாதிகார ஆட்சியில் இருந்து வருகிறது. பேருக்கு பரம்பரை மன்னனிருக்கின்றான். ஆனால் அவன் பல்லைப்பிடுங்கப்பட்ட நல்ல பாம்பு போல் சர்வாதிகாரி முஸோலினி ஆட்டிவைக்கும்படியெல்லாம் ஆடவேண்டும். நடவடிக்கையில் தேசத்தின் சர்வ அதிகாரி முஸோலினியே. முஸோலினிக்கு உதவி புரிய ஒரு மந்திரி சபையுண்டு. அதற்குப் பெயர் பாஸிஸ்டு க்ராண்டு கௌன்ஸில் (Fascist Grand Council) என்பது. இதில் முஸோலினியின் சகாக்கள்மட்டுமே ஸ்தானம் வகிக்கின்றனர். பேருக்கு பார்லிமெண்டும், தேர்தல்களும் உண்டு. ஆனால் பார்லிமெண்டு சபை முஸோலினி

சொன்னதற்கு மறுபேச்சுச் சொல்ல முடியாது. மக்கள் சர்க்காரின் ஆதிக்கத்துக்கு பலதுறைகளிலும் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். தனிச்சுதந்திரம் (Induvidual liberty) இத்தாலியில் இன்று பூஜ்யம். படைபலம் அதிகம். பால்யம் முதல் ராணுவப்பயிற்சி அளிக்கப்படுகிறது. கட்டாயராணுவ சேவை அமுலிலிருந்து வருகிறது. ஆகாயப்படை, நிலப்படை, கப்பல்படை முதலிய அம்சங்களில் இத்தாலி இன்று தலைதூக்கி நிற்பதால்தான் தன்னிஷ்டப்படி அது பிறநாடுகளில் பாய்ந்து அட்டகாசம் செய்ய முடிகின்றது.

## முக்கிய நகரங்கள்

இங்கு நிலவி வரும் மதம் கத்தோலிக் கிறிஸ்தவ மதம். அம்மதத்தின் தலைவராகிய போப் இத்தாலியின் தலைநகராகிய ரோமாபுரியில் தான் இருக்கிறார். இத்தாலியின் இதர முக்கிய நகரங்கள் நேப்பிள்ஸ், மிலான், வெனிஸ், பாடுவா, டூரின், ப்ளாரன்ஸ், ஜினோவா முதலியன.

இத்தாலியில் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் மூன்றும் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. பட்டு, பருத்தி வஸ்திரங்கள் செய்வது, ஜரிகைவேலை, க்ளாஸ் தொழில் முதலியன முக்கியம். கந்தகம், தகரம், ஈயம், இரும்பு முதலியனவும் கிடைக்கின்றன. ஏராளமான ரயில் வசதிகளும் இதர நாகரீக நவீன போக்குவரத்து சாதனங்களுமிருக்கின்றன. சர்க்காரே நேரடியாக தொழில், விவசாய, பொருளாதார அபிவிருத்திக்காக வேண்டிய காரியங்களைச் செய்து வருகின்றனர். கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. பல யுனிவர்ஸிடிகள் அத்தேசத்திலிருக்கின்றன. எழுதப் படிக்கத் தெரியாதவர்களே கிடையாது.

## ஸ்திரீகள்

இத்தாலிய தேசத்து மங்கையர்கள் மிகவும் வனப்புவாய்ந்தவர்கள்; அழகிய வதனமும், ஆரோக்கியமும் பூரணமாயுடையவர்கள். தங்கள் கணவன்மாரோடு சகலவிதங்களிலும் ஒத்துழைத்துக் குடும்பத்தை நடத்துவார்கள். சோம்பலென்பது சற்றும் கிடையாது. பொதுவாக ஸ்திரீகள் சர்வ சுதந்திரத்துடன் வாழ்கின்றார்கள் என்று சொல்லலாம். ஆண்மக்களுக்கு மங்கையர் அடிமையல்ல. இவர்கள் தங்கள் பொழுதை வீணுகக் கழிப்பதே கிடையாது. கைத்தொழில்கள் பல கற்றிருக்கின்றனர். முக்கியமாக 'எம்ப்ராய்டரி',



சிங்காரத் தையல் வேலை செய்கிறள்





ஜிகினு, ஜரிகை வேலைகளுக்கு இத்தாலிய மங்கையர்கள் உலகப்பிரசித்த மடைந்தவர்கள். தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் அதிக ஊக்கம் காட்டுகிறார்களாயினும் இவர்களிடம் நகைப் பைத்தியம் அவ்வளவு அதிகமில்லை. பலவித வர்ண ஆடைகளை தினுசு தினுசாக அணிவார்கள். உடை, நடை, பாவனைகளில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் காணப்படுகிறது. மார்க்கட்டுகளிலும், தெருக்களிலும் ஸ்திரீகள், புஷ்பம், காய்கறிகள் முதலியவற்றை விற்று ஜீவனம் செய்கிறார்கள். இவர்களிடை புருஷர்களைவிட அதிகமதப்பற்று காணப்படுகிறது. மாதர்கள் தங்கள் வீட்டு வெளி வாசலுக்கெதிரே தெருக்களிலுட்கார்ந்துகொண்டு தங்கள் குழந்தைகளுக்கு அலங்காரம் செய்வதும், 'லேஸ்' தைத்துக் கொண்டிருப்பதும், தங்கள் தலையை வாரிக் கொண்டு இருப்பதும் சர்வ சாதாரணமான காட்சிகள். சமையல் செய்வது, சிசுபராமரிப்பு முதலிய குடும்ப வேலைகளை ஸ்திரீகளே கவனித்து வருகின்றனர்.

பொதுவாக இத்தாலிய மங்கையர் குடும்ப சேவைக்கு மட்டும் தயாரானவர்களில்லை. வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியனவும் கற்றிருக்கின்றனர். தற்சமயம் முஸோலினியின் அதிகாரத்தின் கீழ் அவர்களுக்கும் ராணுவப்பயிற்சி ஓரளவு அளிக்கப்படுகிறது. தேச சேவையும் அவர்கள் செய்ய தகுந்தவர்களாய் இருக்கின்றனர்.

## இத்தாலியர்

இத்தாலியின் ஜனங்கள் நல்ல உயரமும், தேக்கட்டும் வலிமையும் மிகுந்தவர்கள்.



வெனிஸ் நகரத்து வனப்பு வாய்ந்த வனிதை

தங்கள் தேசத்தின் கௌரவத்தில் பெருமைகொண்டு அதன் புகழையும், ஆதிக்கத்தையும் உலகம் முழுதும் ஸ்தாபிக்க வேண்டுமென்ற மனப்பான்மை அவர்களிடை தற்சமயம் வெகு மும்மரமாக இருந்து வருகிறது. இயற்கையிலேயே அவர்கள் வெகு பலாட்டியர்கள். சிறந்த உழைப்பாளிகள். ஆடம்பர வாழ்க்கையை அவர்கள் விரும்புவதில்லை. அப்பேர்பட்டவர்களை முசோலினி இன்று ஒரு பெரும் கட்டுப்பாட்டுக் குட்படுத்தி தேச முன்னேற்றத்துக்காக தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத் தயாராய் இருக்கும்படி செய்திருக்கிறான். இவர்கள் சந்தோஷத்துடனேயே எப்பொழுது மிருப்பார்கள். அடிக்கடி விருந்துகளும், கேளிக்கைகளும் நடத்தி இன்புறுவார்கள்.

# மனைவி பேச்சை கேட்கலாமா?

“பிரேமா”

சேஷுவையரும் நாராயண ஐயரும் நண்பர்கள். ஒரு நாள் பகல் 12 மணி யிருக்கும்; இருவரும் சாப்பிட்டு விட்டு கையில் தாம்பூலத்துடன் ஒருவரை ஒருவர் தற்செயலாய் சந்தித்தார்கள். அவர்களிருவர்களுக்குள்ளும் கீழ் கண்ட சம்பாஷணை நடந்தது. அதாவது :—

சேஷு அய்யர் :—என்ன நாராயணய்யரே! ஏன் ஒருவாறு முகவாட்ட மடைந்திருக்கிறீர்கள். எல்லாரும் சௌக்யந்தானே?

நாராயண :—என்ன சௌக்யம் வேண்டி இருக்கிறது. என்னமோ காலம் கடத்த வேண்டியது. என்ன வாழ்க்கை!

சேஷு :—என்ன ஸ்வாமி பெருத்த வேதாந்தத்தில் இரங்கி விட்டாப் போலிருக்கிறதே! உமக்கென்ன இப்போ குறை வந்தது? கிளியாட்டமா மனைவி, முத்தும் ரத்தினமும் போல் குழந்தைகள், அருமையிடதாயார், தாங்கிப்பேச தங்கை, சம்பாத்யமோ சமர்த்யா ஸம்பாதிக்கிறீர். என்னவைய்யா வந்து விட்டது வைராக்யம்?

நாராயண :—கடைசியில் சொன்னீர்களே அதனால்தான் தகராறு. ஏதோ சொற்ப சம்பாத்யமா யிருந்தால் உண்டு உடுத்து சிவனே என்று கிடக்கலாம். யாரிடமும் மனஸ்தாபம் குறை குற்றம் ஒன்றுமே யிராது.

சேஷு :—ஏனய்யா சுற்றி சுழற்றுகிறீர்களே தவிர விஷயத்தை வெளியிட மாட்டேன் என்கிறீர்களே? கிடக்கட்டும் சொல்லுங்கள். என்னை நம்பலாம் காணும்.

நாராயண :—உம்மிடம் சொல்லாமலென்ன? யாரிடம் சொல்லி என்ன பயன் என்று தான்...........சொல்லுகிறேன் கேளும். எனக்கும் விவாகமாகி 10வருடமாச்சுது. உமக்கும் தெரியும். ஏதோ ஈஸ்வரன் நாலு குழந்தைகளையும் குடுத்து விட்டார். எத்தனை சம்பாத்ய மிருப்பினும் சற்று கருத்துடன் இருக்கவேணுமென்றும் குடும்ப விஷயங்களில் தன்னுடைய இஷ்டத்தையும் கலந்துகொள்ள வேணுமென்றும் தனக்கும் எல்லாம் தெரியவேணுமென்றும் என் மனைவி சிறிது நாளாய் என்னை வாட்டுகிறாள்.

சேஷு :—அவள் இஷ்டப்படி சொல்லி விட்டுப் போகிறதுதானே. அதனால் உமக்கென்ன சிரமம்? இருப்பு சிலவுதெரிந்தால் அதற்குத் தக்கபடி குடும்பம் நடத்திக் கொள்ளுவாள். உமக்கும் சுகந்தானே.

நாராயண :—சுகம்வேண்டாம் ஸ்வாமி! நாலுபேர் நம் ப்ராணனை பலவிதமாய் வாங்காதிருந்தால் போதும்! சுருக்கமாய் சொல்லட்டுமா. நேற்று நடந்த விஷயம் கேளும். நான் இரண்டு ஜதை வேஷ்டி எனக்காக வாங்கிவந்தேன். அதை என் மனைவியிடம் காண்பித்தேன். விலை என்னவென்று வழக்கம்போல் கேட்டுவிட்டாள். நானும் ஜதை மூன்று ரூபாய் என்று சொன்னேன். நான் எப்பவும் வாங்கும் விலை அவ்வளவுதான். ஆனால் அவள் இது அரை ரூபாய் ஒரு ஜதைக்கி அதிகம் குடுத்திருப்பதாயும் இதுபோன்ற வேஷ்டி இரண்டரை ரூபாய்க்குத் தான் ஒரு கடையில் பார்த்ததாயும் சொல்லி, அந்த விலைக்கே இரண்டு ஜதை வாங்கிவந்தாள். வேஷ்டியும் நான் வாங்கியதைவிட சற்று நன்றாகவே இருந்தபடியால் நான் வாங்கியதைத் திருப்பிக் குடுத்துவிட்டேன். சில நாட்களாய் சின்ன விஷயங்களில் நான் அவள் யோசனையைக் கலந்து வந்ததுடன் இது ஒன்று பெரியதாகிவிட்டது. இதனால் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு மனஸ்தாபம். பெண்டாட்டி உத்திரவுபடி நடக்கிறேனும். பெண்புத்தி கேட்பவனும்; எனக்குப் பௌருஷமில்லையாம். இப்படியாக இதன் விரிவை எனக்குச் சொல்லவும் ஞாபகமில்லை ஸார். விவாகம் செய்துகொள்ளாமலிருந்தேனானால் எவ்வளவு சுகமாயிருந்திருப்பேன். இனி என்னய்யா செய்ய முடியும்? ஒருபுரம் மனைவி ‘ஸ்வதந்திரம் ஸ்வதந்திரம்’ என்று கழுத்தை அறுக்கிறது; ‘மனைவிக்கி ரொம்ப இடம் குடுத்துவிட்டேன் என்று மற்றவாள் ப்ராணனை எடுக்கிறது. இந்த சம்பாத்யமும் வேண்டாம் இந்த பணமும் வேண்டாம்!

சேஷு :—ஊ-ம் என்னமோ என்று பார்த்தேன். இதுதானா ப்ரமாதம். நீர் என்னய்யா ப்ரமாதமாய் மனைவிக்கி இடம் குடுத்துவிட்டீர்கள்? பாருங்கள் நம்மை படைத்த ப்ரும்மா இருக்கானே அவன் தன் மனைவியை நாக்கிலேயே வைத்துக் கொண்டிருக்கிறான். நம்மை ரக்ஷிப்பவனோ மார்பினுள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறான். ஸம்ஹரிப்பவன் காதலோ விபரீதம்! பாதி சரீரத்தையே மனைவிக்கென்று குடுத்துவிட்டான் ஸார். இவர்கள்பாடே இப்படி இருக்க நீர் என்னமோ பெருத்த தப்பு செய்துவிட்ட மாதிரி கோட்டான் போல விழித்து வெட்கப்படுகிறீர். மனைவியின் ஒத்துழைப்பும் தூண்டுதலும் இல்லாத குடும்பம் எப்படியய்யா சுகப்படும்? எத்தனை பக்தர்கள் பகவானைவிட அம்பாளை ஸ்துதிசெய்து அவள் க்ருபையால் பகவானின் க்ருபையைப் பெறுகிறார்கள். மனைவி சொல் கேட்பதில் தவறு என்ன என்பதை கேட்டீர்களா? யாராயிருப்பினும் துர்புத்தி சொன்னாலோ நஷ்டப்படச் சொன்னாலோ அவாள் வார்த்தையைக் கேட்கக் கூடாதென்பது உண்மையான தத்துவமாக்கும். மனைவி சோல் கேட்கக்கூடாது; அது ஏளனம், கௌரவமில்லை, என்று சோல்வதேல்லாம் வீண் துர்புத்திதான். உங்கள் வேஷ்டி விஷயத்தில் அவள் சொல் கேட்டதால் இரண்டு ஜதையில் ஒரு ரூபாய் உமக்கு லாபமே தவிர நஷ்டமென்ன வந்தது சொல்லும்?

நாராயண :—அதில்லை ஐயர் விஷயம். நம் தேசத்தில் மனைவியை கௌரவிப்பது, மனைவிக்கி ஸ்வதந்திரம் குடுப்பது, அவளிடத்தில் ப்ரியமாயிருப்பதாய் ஒருவரறிய நடந்துகொள்வது இவைகள் போன்றது வழக்கத்திலில்லை. மனைவி என்று விவாகம் செய்துகொள்வது வீட்டிலுள்ள வேலைகள் செய்யவும், வம்சவ்ருத்திக்காகவுமே என்பது நம் தேசத்தவர் அனுஷ்டித்து வரும் வ்ருதங்களில் ஒன்றாக்கும். இதை எவனாவது தவறி நடந்தானானால் அவன் பாடு இப்படித்தான்.

சேஷு :—ராவணன், வாலி இவர்கள் மனைவியின் புத்திமதியைக் கேட்காததால் உயிர் இழந்தார்கள் தெரியுமா? தைவ

கைங்கர்யம் பித்ருக்கடன் இவைகளுக்கு இப்பவும் கூட மனைவி கூட இல்லாமல் செய்யப்படுகிறதா? ஒருவனுக்கு ஒரு காலணா தக்ஷிணை குடுத்தால் கூட மனைவி ஒரு உத்திரணி ஜலம் விடாவிட்டால் அது ஒப்புக்கொள்ளப்படாது என்றிருக்கிறதாக்கும் சாஸ்திரம்! இதை உமக்கு எவ்வளவென்று நான் சொல்லி முடியும். உம்முடைய புத்தியைக்கொண்டு ஆராய்ச்சி செய்து பாரும் ஐயா!

நாராயண:—நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனாலும் ஒவ்வொன்றும் அதாவது குடுக்கல் வாங்கல், நஷ்டம் லாபம் எல்லாம் தினமும் மனைவியிடம் பாடம் ஒப்பிப்பதென்றால் எனக்கே கஷ்டமாயிருக்கிறது. சில சமயம் ஞாபகமிருப்பதுமில்லை. அவளென்ன நமக்கு சம்பாரித்துக் குடுக்கப்போகிறாளா? ஏதோ கொண்டுவந்து கஷ்டப்பட்டுப் போட்டோமானால் நம்மைக் கணக்குக் கேட்க இவளென்ன என்று கூட ஒவ்வொருஸமயம் தோன்றுகிறது. சம்பாத்யமே இல்லாதவன் பாடு சுகம் என்று முன்னமேயே சொன்னேனல்லவா அதுதான் யுக்தம். அதிகம் சம்பாதிப்பது பிடுங்கலுக்கு விதை விதைத்த மாதிரிதான். வேலையில்லா திண்டாட்டம் தற்சமயம் வந்திருப்பது ஒரு விதத்தில் நன்மைதான் என்று நினைக்கிறேன்.

சேஷு:—பைத்யம்போல் உளராதேயுங்கள். சம்பாத்யம் ஸாமான்யமாய்க் கிடைக்காது. மனைவிமக்களும் புண்ய விசேஷத்தினால் கிடைக்கக் கூடியதாக்கும். ஏறுமாறாயிருந்தாலொழிய யாரையும் வெறுக்கக்கூடாது. உதாரணமாய் சொல்லுகிறேன் கேளும். என் மைத்துனன் ஒருவன் இப்படித்தான் உம்மைப்போல் குடும்ப விஷயம் மனைவியிடம் சொன்னால் கௌரவக்குறைவு; நாலுபேர் மதிக்கமாட்டார்கள் என்று எந்தவிஷயமும் அவளிடம் சொல்லமாட்டான். அந்த உத்தமி ஏதோ தனக்குத் தோன்றியபடி ஸம்ஸாரம் செய்து வந்தாள். அவரும் தன் இஷ்டம்போல் சம்பாதிப்பதைச் சிலவு செய்து வந்தார். திடீரென்று 8 நாள் ஜ்வரத்தில் ஆஸாமி காலமாகிவிட்டார். அவருக்கு நாலு குழந்தைகளுமுண்டு. மனைவியோ நிர் அபராதி; ஒன்றுமே தெரியாது. சுற்றத்தார் தங்கள் கைக்ககப்பட்டதைச் சுற்றிக்கொண்டு போய் விட்டார்கள். மிச்சமிருந்ததை அந்த ப்ரும்மணன் தன்பேரிலே எழுதிக்கொண்டிருந்தபடியால் அதை சர்க்கார் மனைவிக்குக் குடுக்க பாத்யமில்லை என்று சொல்லி விட்டார்கள். அவளிடத்தில் கொஞ்சம் நகைகளிருந்தது. அதை விற்றுப்பணமாக்கி அதை வட்டி வரும் இடத்தில் கட்டி அதன் சட்டப்ரகாரம் எழுதிவாங்கி நடத்திக்கொள்ள அடிமை வாழ்க்கை நடத்திய பேதையாகிய அவளுக்குத் தெரியாது. அதையும் யாரோ தெரிந்த பந்துக்களிடம் கொடுத்தாள். அவாள் அதை விழுங்கி விட்டார்கள். இப்போ அவளும் அவள் குழந்தைகளும் படும் கஷ்டமும் தரித்திரமும் சொல்லிமுடியாது. பரிதாபமாயிருக்கிறது.

நாராயண:—நன்றாயிருக்கிறது. ஏதோ பேசவந்தவர் ஒரு கதையைச் சொல்லி என்னை பயப்படுத்தி விட்டீர்களே. நானென்ன உம்ம மைத்துனனைப்போல் திடீரென்று சாகப்போகிறேன் என்று தீர்மானித்து விட்டீர்களா? ஏதோ ஒவ்வொரு கேஸ் அப்படியாகிறது. அதற்காக?





சேஷு:—அதற்காகவா? நான் சொல்வதைக் கேளும். உம்மை நான் சாகச் சொல்லவில்லை. முதலில் உம் மனைவிக்கி நல்ல புத்திமதிகள் சொல்லி அவள் குணத்தில் கூடுமானமட்டும் குற்றமில்லாமல் பழகிவிட்டாளா பாருங்கள். தன் குடும்பமென்றும் அதில் கஷ்ட சுகம் தன்னைச் சேர்ந்ததென்றும் உணர்ந்து ஊதாரியாயில்லாதபடி கவனித்துக் கொள்ளவேணும். உங்கள் கடன் ஆஸ்தி இவைகள் அவளுக்குத் தெரிந்திருந்தால் சம்ஸாரத்தை அதற்கேற்றபடி நடத்துவாள். மேலும் பேங்க் விஷயமாயும், தபாலாபீஸ் விஷயம், பங்காளியாய்ப் பணம் போட்டதிலோ இன்ஷ்யூரன்ஸிலோ சட்டங்கள் எப்படி எப்படி இருக்கிறது, அதில் பணம் போட, வாங்க என்னென்ன செய்ய வேணும், நீங்கள் எந்தெந்த ஒப்பந்தத்தின்மேல் பணம் போடுகிறீர்கள், இவைகள் அவளுக்கும் நிச்சந்தேகமாய்த் தெரிந்திருக்க வேணும். மற்றொரு புத்திமதி நான் சொல்வதென்னவென்றால் உங்கள் சொத்துகள் எல்லாம் அவளையும் சேர்ந்ததாக எழுதி வைத்துக்கொள்வது மிகவும் நல்லது. ஏதோ நல்லகாலமா இருந்து விட்டால் பாதகமில்லை. ஒரு வேளை அவள் அத்ருஷ்டம் குறைந்துபோனால் என் மைத்துனன் மனைவி மாதிரி தவிக்காமலிருப்பாள். இப்படி நடந்துகொள்வதுதான் எனக்குப் புத்திசாலித்தனம் என்று தோன்றுகிறது. ஏதோ உங்களிடத்திலுள்ள அபார அன்பினால் சொன்னேன். கேட்டுக்கொண்டால் சுகப்படுவீர்கள்.

நாராயண:—என்னமோ பார்க்கலாம், நாழிகையானதே தெரியவில்லை. பேசிக்கொண்டேயிருந்து விட்டோமே. போய் வரேன் ஸார்.

சேஷு:—(மேல் வேஷ்டியைத் தட்டி எடுத்துக்கொண்டு) நானும் போய் வருகிறேன். வைராக்யம் வேதாந்தம் எல்லாம் அப்புரம் பார்த்துக்கொள்ளலாம். வீட்டில் போய் மனைவியுடன் சிரித்துப் பேசுங்கள், எல்லாம் சரியாய் போய் விடும்!

சேஷுவையரின் மனைவி உள்ளிருந்தபடியே இவர்கள் ஸம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தன் புருஷன் தனக்கு வாங்கிவந்த புடவையின் விலையை அவள் கேட்டபோது, "உனக்கெதற்கு விலைதலை எல்லாம், நீ என்னபணம் குடுக்கப்போகிறாயா; வாங்கிக்குடுத்ததை கட்டிக்கொள்வதைவிட்டு விலைகேட்க வந்துவிட்டாயா?" என்று அவர் அதட்டியது ஞாபகத்தில் வந்து மனம் போராடியது. உள்ளே அவர் வந்ததும் "ஏதோ மனைவி விஷயமாய் பெரிய ப்ரஸங்கம் செய்தாப் போலிருக்கே" என்று கேட்டாள். அதற்கவர் "அதெல்லாம் உனக்கா? நாராயண ஐயரின் மனைவிக்கு" என்று சொல்லிக்கொண்டே வெளியில் போய்விட்டார்.

# பலதாரமணம்

**ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், எம். எல். ஏ.**

(மத்திய சட்டசபை)

கல்வி பரவப்பரவ பலதாரமணங்கள் ஒழிவதற்கு அது உதவியிருக்கவேண்டும்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக இச்சீர்திருத்தம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஒரு புதிய பலதார மணமுறையை கல்வி சமூகத்தில் புகுத்திவிட்டது. நவீனகல்வி கற்றபெண்கள், ஏற்கனவே மணஞ் செய்து, தங்கள் மனைவிகளுடன் இல்வாழ்க்கை நடத்திக்கொண்டு, மீண்டும் மணம் செய்துகொள்ள அவசியமில்லாமலிருக்கும் புருஷர்களைக் கல்யாணம் செய்கின்றனர். நல்ல உண்மையான பதி விஸ்வாசமுள்ள முதல் மனைவி, இந்தப் புது மணத்தின் காரணமாக வெறுத்து ஒதுக்கப்படுகிறாள். எனவே இவ்வித விவாஹத்தை பண்டைய ஹிந்து வழக்கத்தின்படி அனுமதிக்கப்படும் பலதார மணமென்று சொல்ல முடியாது.

முன்காலத்தில் சமூகநிலை வேறு விதமாக இருந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் கூட்டுக்குடும்ப முறை ஒன்றுபடுத்தி ஐக்கியமாக வைத்து, அவர்களுக்கு சமமான பாதுகாப்பு அளித்து வந்தது; எனவே அக்காலத்தில் பலதாரமணம் இவ்வளவு கொடுமையாக இருந்ததில்லை. ஒரு திட்டமான காரணங்களைக்கொண்டு, குடும்பத்தில் மூத்தோர்களால் கல்யாணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒரே சமூகத்திலிருந்தே பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரும்பாலும் மாப்பிள்ளையின் சுற்றத்தாரிலிருந்தே பெண் எடுப்பது வழக்கம். எல்லாமனைவியரும் சேர்ந்து வாழ்ந்து வந்தனர்; இளையோர் மூத்தோரை சகோதரிகளென்றே அழைத்து வந்தனர். ஆனால் தற்காலத்துப் பலதாரமணமுறை, முதல் மனைவிக்குக் கொடுமையும், துன்பமும் விளைவிக்கின்றது. பெரும்பாலும், அவள் மிகவும் இளமைப்பருவத்திலேயே மணஞ் செய்விக்கப்பட்டிருப்பாள்; நல்ல வயது வருமுன்னரே தாயாகவுமாகியிருப்பாள்; ஒரு நவீன நாகரீக சமூகமங்கை தன் புருஷனை வசீகரிக்கின்றது போன்று அவள் தனது வசீகரசக்தியை அவ்வளவு இளவயதில் அபிவிருத்தி செய்திருக்க முடியாது. புதிய மனைவியோ, முதல் மனைவி பூரணமாக வெறுத்து ஒதுக்கப்படும் வரை—அவள் குழந்தைகளிடமிருந்துகூட பிரிக்கப்படும் வரை திருப்தி அடைவதில்லை. பொதுவாழ்விலீடுபட்டுள்ள நமது பிரபலஸ்தர்கள் (ஆடவரும், பெண்டிரும்) சிலர்கூட இம்மாதிரிக் குற்றத்துக்கு ஆளாகி இருப்பது வருந்தத்தக்கது. இவர்களுக்குச் செல்வமும், செல்வாக்கும், அந்தஸ்தும் இருந்தால் தற்கால சமூகமும் இம்மாதிரி மணங்களை ஆமோதித்துப் பாராட்டவும் செய்கின்றது. எனவே, இம்மாதிரி மணங்களை அங்கீகரிக்கின்றனர் என்ற தப்பபிப்பிராயம் ஏற்பட்டு, அதன் பயனாக, பெண்களுக்கு உயர்தரக்கல்வியளித்தல், மணவயதை உயர்த்தல் முதலிய பெண் சமூகத்தினுடையவும், தேசத்தினுடையவும், முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான சீர்திருத்தங்களுக்கு வைதீகத்தினிடையே எதிர்ப்பும், வெறுப்பும் ஏற்படக்காரணமாகின்றது.



மேனாடுகளில் நடை முறையிலிருக்கும் விவாக ரத்துச் சட்டம் இந்து சமூக உணர்ச்சிக்கு இன்னும் எதிரிடையாகவேயிருந்து வருகின்றது; கல்யாணம் தெய்வத்தன்மை பொருந்தியது என்று கருதுபவர்களுக்கு இது வெறுப்பைத் தருகின்றது. ஆகவே விவாக ரத்துச் சட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு இருக்கும். இதனிடை பலதார மண முறையானது மிகக் கொடுமையாக பரவி வருகின்றது. ஹிந்து குடும்பங்களின் சமாதானமும், சந்தோஷமும், பெரும் ஆபத்திலிருக்கின்றன. வெறுத்து ஒதுக்கப்பட்ட மனைவியர் துன்பங்களும், அழுகையும் இத் துறையில் சட்டமியற்றுவதன் அவசியத்தை வற்புறுத்துகின்றன. எனவே, பலதார மணத்தை தடுக்க சட்டமியற்றுவது அதிக அத்தியாவசியமாகின்றது. தற்காலப் பலதார மணங்களால் வாழ்விழந்த மனைவியருக்கு சாதாரண விவாகரத்து மசோதா, அதுவும் அவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாயும், ஏழைகளாயுமிருந்தால் அதிக உதவி அளிக்காது. புருஷனும், புதுமனைவியும் தங்கள் புது மணத்தை நியாயமானது என்று ருசிப்பிக்க ஒதுக்கப்பட்ட மனைவி மீது அவளுக்குப் பைத்தியமென்றும், தீராத நோயாளி என்றும் பலவிதமாய் குறைகளை எல்லாம் அவள்மீது சுமத்த முன்வருகின்றனர். பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவோம், குழந்தைகளை விட்டுப் பிரித்துவிடுவோம் என்றெல்லாம் பயமுறுத்தி ஜீவனாம்சம் கேட்கவோ, சீதனத்தைத் திரும்பிக் கேட்கவோ இடமில்லாது செய்து அவளை நிர்க்கதிக்குள்ளாக்குகின்றனர். இவ்வாறு தள்ளி வைக்கப்படும் பெண் தன் புத்தி சுவாதீனத்தை இழக்கிறாள்; அல்லது தனது சுற்றத்தார் யாரிடமாவது சென்று அவர்களுக்குப் பாரமாகி செக்கு மாடுபோல் உழைத்து வயிறு வளர்க்கின்றாள்; அல்லது தற்கொலை புரிகின்றாள். புருஷன் பணக்காரனாகவும், மனைவி ஏழையாகவும், படிப்பில்லாதவளாகவும் தற்கால சமூக நிலைமையையும், சட்டங்களையும் அறியாதவளாயுமிருந்தால் நியாயமற்ற முறைகளில் அவளை விவாகரத்து செய்து பிரித்துவிடுவது மிக எளிதாக இருக்கும். மேலும் விவாகரத்து என்று சென்னால், அதில் மனுதார் மறுமணம் செய்ய விரும்புகிறார் என்றும் அர்த்தமாகும். மேலும் ஒரு சிறந்த பழமையான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஹிந்து ஸ்திரீ, அவளது மணவாழ்க்கை எவ்வளவு சந்தோஷமற்றதாயிருப்பினும் எக்காரணத்தைக்கொண்டும் விவாகரத்தை விரும்புவாள் என்பது மிகவும் அருமையான காரியமே. பழங்கொள்கைகளை இன்றும் கடைப் பிடித்தொழுகும் ஹிந்து சமூகம், விதவா விவாகத்தைக்கூட இன்னும் பூரணமாக ஆதரிக்காதிருக்கும் பொழுது விவாகரத்துச் செய்த மனைவியர் மறுமணம் செய்துகொள்வதை அங்கீகரித்து ஆதரிக்குமென எதிர்பார்க்க முடியாது. அங்ஙனம் மறுவிவாகம் சாத்தியமில்லாமல் போய்விட்டால் கல்வி யறிவில்லாதவளும், அக்ரமமாக புருஷனால் விவாகரத்துச் செய்யப்பட்டு பிரிக்கப்பட்ட ஒரு பெண்ணின் கதி என்னவாகும்? சகல சமூகப் பெண்களிடையும் கல்வி பரவி முன்னேற்றக் கொள்கைகளுக்கு ஆதரவு உண்டாவதற்கு முன் தற்பொழுது அமுலிலிருக்கும் சட்டங்களைவிட அதிகமாக எளிதான விவாகரத்து சட்டங்களால் அவர்

கள் அதிகம் துன்பத்துக்குள்ளாக்கப்படுவார்கள். சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் நமது ஜனத்தொகையில் மிக சொற்பமாயிருக்கும் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கு மட்டுமின்றி நவீன வாழ்க்கை பற்றிய கொள்கைகளையே உணராத கிராம வாசிகளான பல கோடிமக்களுக்கும் பயன் தருவனவாயிருத்தல் வேண்டும்.

இந்தப் பலதார மணத்தை சட்டப்படி தடுக்க நான் முதலில் தயாரித்த மசோதா பலதார மணத்தைச் சாத்திய மற்றதாகச் செய்யாவிடினும், மிகவும் கஷ்டமாகச் செய்வதாயிருந்தது. ஒதுக்கப்பட்ட மனைவிக்குச் சிறிது நிவாரணமும், பாதுகாப்பும் அளிப்பதாயுமிருந்தது. நண்பர்களும், பொது ஜனங்களும் அதைப்பற்றி வெளியிட்ட அபிப்பிராயங்களை யொட்டி அதைச் சீர்திருத்தி இந்தியா சட்ட சபையில் கொண்டுவர உத்தேசித்திருப்பதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

## மசோதா விபரம்

1938-ம் வருஷத்து ஹிந்து பலதார மணத்தடை மசோதா. இது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சகல ஹிந்துக்களையும் பாதிக்கும். 1939-ம் வருஷம் ஏப்ரல் 1 உயன்று அமுலுக்குவரும். இந்து சட்டத்திலோ வழக்கத்திலோ வேறு விதமாக இருந்தபோதிலும் கல்யாணமாயிருக்கும் எவரும் சட்டம் அல்லது வழக்கத்தால் மறுமணம் செய்ய உரிமையுடைய மனைவியர் நீங்கலாக தமது மனைவி புருஷனுடைய ஜீவிய காலத்தில் மற்றொரு பெண்ணை அல்லது புருஷனை இரண்டாமுறை மணஞ் செய்யக்கூடாது.

இந்த சட்டப்படி யல்லது ஏற்கனவே மணமாயிருக்கும் ஒரு புருஷன் அல்லது மனைவி தனது மனைவி அல்லது புருஷனுடைய ஜீவிய காலத்தில் இன்னொரு கல்யாணம் செய்தால் இந்தியன் பீனல் கோடு 494 அல்லது 495-வது பிரிவுப்படி குற்றஞ் செய்தவராகி அப்பிரிவுகளில் விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைகளுக்குள்ளாவர். அம்மாதிரி செய்யப்படும் கல்யாணமும் செல்லுபடி யாகாது.

அடியிற்கண்ட காரணங்களில் ஏதாவது ஒன்றுக்காகவோ பலவற்றுக்காகவோ தனது மனைவி அல்லது புருஷனுடைய ஜீவிய காலத்திலேயே ஒருவர் மற்றொரு மனைவி அல்லது புருஷனை மணஞ்செய்து கொள்ள சிவில் கோர்ட்டில் அனுமதி கோரலாம்:—

தொடர்ச்சியாக 5 வருஷகால தொத்து நோய்; தொடர்ச்சியாக மனைவியோ புருஷனோ தன்னைத்தள்ளி வைத்து வாழ்வது; மனைவி அல்லது புருஷன் ஒரு வருஷத்துக்கு மேலாக அதிகமாக விபசாரத்திலீடுபட்டிருத்தல்; கொடுமையாக நடத்துதல் முதலியன.

முதல் காரணத்தைக்கொண்டு மறுமணத்துக்கு அனுமதி கேட்பவர் புருஷனாயிருந்தால் தன் மனைவிக்கு அவள் தாய் தந்தையர் கொடுத்த சீதனங்களையும், நகைகளையும், அவனுக்கு ஆண் சந்ததிகள் இல்லாதிருந்தால், அவனது சங்கம ஸ்தாவர சொத்தில் மூன்றிலொருபாகத்தையும், பாகம் பிரிக்காமலிருந்தால் பிரித்தால் அவனுக்கு எவ்வளவு வீதம் கிடைக்குமோ அதில் சரிபாதியையும் அவளிடம் சேர்த்து விட்டதாக மனுவில் குறிப்பிட வேண்டும்.

புருஷன் ஒரு பாகமாகாத குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தால் இச் சட்டப்படி அவனுடைய சொத்தில் அந்த பாகமும் சேரும். மேற்படி மனு கொடுத்ததின்பேரில் கோர்ட்டார் சம்பந்தப்பட்ட மனைவி அல்லது புருஷனுக்கு நோட்டீஸ் கொடுத்து விசாரணை செய்து, சொல்லப்பட்ட காரணங்கள் உண்மையானவென்று திருப்திகரமாகத் தெரிந்தால் மறுமணம் செய்ய அனுமதி கொடுக்கலாம். ஏற்கனவே ஜீவனாம்சம்பெற உரிமையுள்ள ஒரு மனைவியின் அப்பாத்தியதையை இச் சட்டம் எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது. இதுதான் மசோதாவின் சாராம்சம்.





ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், எம். எல். ஏ.,
(இந்தியா சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும் முதல் இந்திய ஸ்திரீ இவர்தான்).



பம்பாய் மாகாண மாதர்கள் கௌன்ஸில் பார்லிமெண்டரி சப் கமிட்டியின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் ஸ்ரீமதி. காந்தாபென் காந்த்வாலா சாரதா சட்ட சீர்திருத்தத்தைப் பற்றி பேசினர்.

# ஹிந்து சட்ட சீர்திருத்த விசாரணை

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி

ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் மத்திய சட்ட சபையில், ஸ்திரீகளின் ஜீவனாம்சம், சொத்துரிமை விற்பனை, குழந்தைகள் விஷயத்தில் பாதுகாப்புரிமை, கூட்டுக் குடும்பசொத்தில் அவர்களுக்குள்ள பாத்தியதைகள், வாரீசு உரிமைகள், பிதுரார்ஜித சொத்தில் உள்ள பாத்தியதைகள் சம்பந்தமாக ஹிந்து சட்டத்திலுள்ள (Hindu law) குறைபாடுகளையும், இன்னும் அதில் மாதர்களின் முன்னேற்றத்துக்காக செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் பற்றி தீர விசாரிக்கும் பொருட்டும், அவ்வித விசாரணையின் பேரில் எவ்வித சட்ட திட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சிபார்சு செய்யவும் உத்தியோகப்பற்றற்ற ஆறு அங்கத்தினர்களையும், ஒரு அக்கிராசனரையும் கொண்ட (ஆறு அங்கத்தினர்களில் மூவருக்குக்குறையாமல் ஸ்திரீகளாக இருக்கவேண்டும்) ஒரு கமிட்டியை வைசிராய் உடனே நியமிக்க வேண்டுமென்று வருகிற கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருப்பதைக் கண்டு நானும் என் போன்ற சகோதரிகளும் பரமானந்தமடைந்தோம். இம் மாதிரியான விசாரணைக் கமிட்டி யேற்படுத்தி ஹிந்து சட்டத்தில் ஸ்திரீகளுக்கிருக்கும் அளவற்ற அநீதிகளையும், பாரபட்சமான விதிகளையும் ஒழிக்க வேண்டுமென்று வெகுகாலமாக கிளர்ச்சியிருந்தும் மத்திய சர்க்காரின் காதில் அது படவே இல்லை. அக்கிளர்ச்சியை நடத்தினவர்களும் போதிய ஊக்கம் காட்டாததினால் அவ்விஷயம் சர்க்காராலும் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தது. இதை முன்னணிக்கொண்டுவந்த ஸ்ரீமதி சுப்பராயன் மாதர் சமூகத்துக்கே ஒரு பெரு நன்மையைச் செய்தவராவர். அவர் கூறியபடி அமைக்கப்படும் விசாரணைக் கமிட்டியில் பாதிப்பேருக்குக் குறையாமல் ஸ்திரீகளிருக்க வேண்டுமென்று விரும்புவதும் நியாயமே. ஸ்திரீகள் தங்கள் கஷ்டங்களை சரிவர உணர்ந்து தக்க பரிகாரங்களைத் தேடிக்கொள்வார்கள். சட்ட ஆராய்ச்சியாளர்களும், நிபுணர்களும் அக் கமிட்டியிலிருக்க வேண்டியது அவசியமென்று நான் கருதுகிறேன்.

இந்தத் தீர்மானத்தை கட்டாயம் ஒவ்வொரு அஸெம்பிளி அங்கத்தினரும் ஆதரிக்க முன்வருவார்களென்று நான் நம்புகிறேன். இத்தீர்மானம் கோருவது விசாரணைக் கமிட்டியே. ஒரு விஷயத்தை விசாரிக்கக்கூடாதென்று வைதீகர்கூடச் சொல்ல முன்வரமாட்டார்கள். கமிட்டி நியமனத் தீர்மானத்தை மத்திய சட்ட சபை ஏகமனதாக நிறைவேற்றி வைக்குமென்று எதிர்பார்க்கிறேன். அப்படியில்லாது அதை யெதிர்த்தால் எதிர்க்கும் அங்கத்தினர்கள் மாதர்களின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டை போடும் ஆசாமிகள் என்பதை ஒவ்வொரு ஸ்திரீயும் மனதில் பதியவைத்துக்கொண்டு மறுபடியும் அப்பேர்பட்டவர்கள் தேர்தல் காலத்தில் எந்தப் 'போர்வை' போர்த்துக் கொண்டு ஓட்டுக் கேட்க வந்தாலும் தக்க படிப்பினை கொடுத்து அனுப்பவேண்டும் என சகோதரிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்காரும் ஸ்ரீமதி ராதாபாயின் இந்த மிகவும் தாழ்மையான கோரிக்கையை எதிர்க்காமல் ஆதரித்து கூடிய விரைவில் விசாரணைக் கமிட்டியை நிறுவி மாதர்களின் வந்தனத்துக்குள்ளாவார்களாக.

# செய்தித்திரட்டு

## பாபட்லா மாதர் மண்டலி வருஷாந்திர விழா

பாபட்லா மாதர் மண்டலியின் ஏழாவது வருஷவிழா வெகு சிறப்பாக ஜூலை மாதம் 9, 10ௗ களில் ஸ்ரீமதி பு. சுபத்ரம்மாவின் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமதி க. வரலக்ஷ்மம்மாள் வருஷாந்திர அறிக்கையை படித்தார். மண்டலியின் சொந்தக்கட்டட நிதிக்காக ஜில்லா போர்டும், சர்க்காரும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. மறுநாள் சிறுமிகள் ஒரு நாடகம் நடத்திக் காட்டினார்கள்.

... ... ...

## மங்களூர் பாகினி சமாஜம்

ஜூலை மாதம் 7ௗ பாகினிசமாஜம் என்ற ஸ்திரீகள் சபை மங்களூரில் நிறுவப்பட்டது. ஸ்ரீமதி எப். லோன்ஸ் அக்கிராசனராகவும், ஸ்ரீமதி ராமபலிகா உப அக்கிராசனராகவும், ஸ்ரீமதி லீலாபாய் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர். அடுத்த செப்டம்பரில் மாகாணமாதர் மகாநாட்டைக் கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது.

... ... ...

## குதிரை மீது உலகயாத்திரை

மிஸஸ் பார்பாரா ஷேரிக் என்ற ஆஸ்திரிய பிரயாணி உலகம் பூராவும் குதிரை மீதே சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறாள். இவளுக்குவயது 43. தற்சமயம் இவள் இந்தியாவிலிருக்கிறாள். அவள் தன் வீட்டைவிட்டு இந்த உலகயாத்திரையில் 1926 ம் வருஷம் புறப்பட்டாள். தன் யாத்திரையை முடித்துக்கொண்டு தன் னூருக்கு 1940-ம் வருஷத்துக்குள் போய்ச்சேர்ந்து விடலாமென்று பார்பாரா கருதுகின்றாள். அவள் புறப்பட்டு ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களைத் தாண்டுவதற்குள்ளாகவே ஐந்து குதிரைகள் இறந்து போயின. குட்டையான குதிரைகள்தான் கஷ்டமான பிரயாணங்களுக்கு தகுந்தவைகள் என்று அவள் அனுபவத்தில் தெரிகின்றதாம். ஹிமாலயபர்வதத்தைக் கடந்து வரும் பொழுது ஒருசமயம் அவள் 23,000 அடி உயரத்தில் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது.

... ... ...

## ஜெர்மனியில் புதிய விவாக விதிகள்

ஹெர்ஹிட்லர் புதியவிவாக சட்டமொன்றை பிறப்பித்திருக்கிறார். இது ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் ஆகஸ்ட் 1 ௳யிலிருந்து அமுலுக்கு வருகின்றது. இச்சட்டப்படி சிவில்விவாகங்களே செல்லக்கூடியவையாயிருக்கும். இது பற்றி நீதி மந்திரியான ஹெர்கார்ட்னர் பத்திரிகைப்பிரதிநிதிகளுக்கு பேட்டியளித்த போது கீழ்கண்டவாறு கூறியிருக்கிறார்:—

விவாகமென்பது தேசமுழுதும் சிரத்தை கொண்டுள்ள ஒரு விஷயமேதவிர அது



தனிப்பட்டவர்களின் அந்தரங்க ஒப்பந்தமன்று என்பதுதான் இப்புதிய சட்டத்தின் அடிப்படையான நோக்கம். ஆட்சேபகரமான விவாகங்களை பப்ளிக் பிராஸிக்யூட்டரே ரத்து செய்துவிடுவார். இச்சட்டத்தின்படி விபசாரம், குழந்தைகள் பெற மறுப்பு, கணவன் அல்லது மனைவி பிரிந்து செல்லல், சித்த சுவாதீனமின்மை, குணமாகாதவியாதி, மலடு இவற்றில் ஏதாவதொன்றைக் காரணமாகக் காட்டி விவாகரத்து பெறலாம்.

... ... ...

## ஸ்திரீகளுக்கு தனி மாகாணம்

அலகாபாத்தில் நடைபெற்ற ஸ்திரீகள் பொதுக்கூட்டமொன்றில் ஸ்ரீமதி விதேக் தலைமையில் "பலவேறு மாகாணங்களில் மந்திரிவேலை முதலிய பல உத்தியோகங்களை ஸ்திரீகள் ஏற்று நடத்துகிறார்கள். இதுவரையில் புருஷர்களுக்கென்றே பிரத்தியேகமாக இருந்த போலீஸ் இலாகாவில்கூட கான்பூரில் ஸ்திரீகள் புகுந்து விட்டனர். ஆகவே இனி ஸ்திரீகளே முற்றிலும் ஆட்சிபுரியும் வண்ணமாக ஒருமாகாணம் ஏற்படவேண்டும்" என்ற கோரிக்கை வெளியிடப்பட்டது. அரசியலை சமாதானத்துடன் பாரபட்சமும், தன்னலமுமின்றி நடத்தக்கூடியவர் மாதர்களே என்பது அக்கூட்டத்தின் அபிப்ராயம். ஸ்திரீகளிடை பொறாமை, அதிகார ஆசை, வகுப்புவாதம் கிடையாதாம்.

... ... ...

## மூட நம்பிக்கை

ஜபல்பூரில் ஒரு மில் தொழிலாளியின் குழந்தை சில நாட்களாகக் காணப்படாமலிருந்தது. போலீசார் பக்கத்துக் குடிசையை சோதனை போடச்சென்ற போது அதிலிருந்த ஸ்திரீ அக்குழந்தையை தேவதைக்குப் பலியிடுந்தருவாயி லிருந்தாளாம். அந்த ஸ்திரீ கைது செய்யப்பட்டாள். அவளுக்கு ஒரு குழந்தை இருக்கிறதென்றும் அதற்கு நோய் ஏற்பட்டதால் அது பிழைக்கவேண்டுமானால் வேறொரு குழந்தையை பலியிடவேண்டு மென்றும் எவனோ ஒரு மந்திரவாதி சொன்னதே அவள் அக்குழந்தையைத் திருடி பலியிட முயற்சித்ததற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

... ... ...

## அகில இந்திய ஸ்திரீகள் மகாநாடு

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டின் அரை வருஷத்திய கூட்டம் பரோடாவில் ஸ்ரீமதி ராஜகுமாரி அமிர்தகௌரியின் தலைமையில் ஜூலை 30ௗயிலிருந்து ஆகஸ்ட் 1ௗ முடிய மூன்று தினங்கள் வெகுசிறப்பாக நடைபெற்றது. பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. பிரபல மாதர் தலைவிகள் விஜயம் செய்திருந்தனர்.

... ... ...

## மறு மணத்துக்கு ஆதரவு

இங்கிலாந்தில் சார்லி உட்டைச் சேர்ந்த ஜான்டேவீ என்பவன் தன் மனைவி தன் மணத்துக்குப்பின் மறுவிவாகம் செய்துகொண்டால் அப்புருஷனுக்குத் தன் சொத்தாகிய 46783 பவுன் எஸ்டேட்டில் ஒரு பகுதியை எழுதிவைத்திருக்கிறானாம். விதவா விவாஹத்தை வெறுப்பவர்கள் கவனிப்பார்களா?

# *** கதம்பம் ***

### பாஞ்சால சர்க்காரும், ஸ்திரீகள் முன்னேற்றமும்

ஸ்திரீகள் முன்னேற்றத்துக்காக பாஞ்சால சர்க்கார் ஒரு தனி வேலைமுறை வெகு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வருவார்கள். கிராமாந்திரங்களிலுள்ள மாதர்களின் நன்மையை விருத்திசெய்வதே இத்திட்டத்தின் நோக்கம். தற்சமயம் பாஞ்சால பொது சுகாதார பள்ளிக்கூடங்களின் சூப்பரிண்டெண்டாக இருந்துவரும் ஒரு கௌரவகுடும்ப ஸ்திரீ இத்திட்டத்தை மேற்பார்வையிட்டு நடத்திவைக்கும் பொருட்டு கிராமப்புனருத்தாரண உதவி கமிஷனராக நியமிக்கப்படுவார். அடுத்தாற்போல் கிரஹ நிர்வாக (Domestic science) நிலையங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டு ஜில்லாக்களின் பல இடங்களிலிருந்தும் வரும் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். தாங்கள் கற்ற விஷயங்களை தங்கள் தங்கள் ஜில்லா மாதர்களுணரும்படி பிரசாரம் செய்யும் பொருட்டு பயிற்சி அளிக்கப்பட்ட ஸ்திரீகள் திரும்பவும் தங்கள் ஜில்லாவுக்குப் போய் வேலை செய்து வருவார்கள். காங்கிரஸ் சர்க்கார் கண் விழிப்பார்களா? இல்லை இன்னும் மழுப்பல் தானா?

... ... ...

### ஸ்தலஸ்தாபன பெண் பள்ளிக்கூடங்கள்

சென்னை சர்க்கார் கீழ்கண்ட உத்திரவு பிறப்பித்துள்ளார்கள். ஜில்லா போர்டு பாடசாலைகளுக்கு போர்டு அங்கத்தினர்களும், கல்வி நிரந்தரக் கமிட்டியங்கத்தினர்களும் விஜயம் செய்வதை 1935-ம் வரு நவம்பர் மீ 7உ யிட்ட எல். எம். 4590 வது உத்திரவு வகுத்திருக்கிறது. இந்த உத்திரவுப்படி பெண் பள்ளிக்கூடங்களுக்கு ஸ்திரீ அங்கத்தினர்கள் மட்டும் தான் விஜயம் செய்து பார்வையிடலாம். ஆனால் ஜில்லாபோர்டு அக்கிராசனர்களும், உபஅக்கிராசனர்களும், மேற்படி விதி நிர்வாக அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்தாதென்ற எண்ணத்துடன் பெண் பள்ளிக்கூடங்களுக்குப் பார்வையிடச் சென்று வந்திருக்கிறார்கள். அது மாதிரி அவர்கள் போவது சர்க்கார் உத்திரவின் நோக்கத்துக்கு விரோதமானது மன்னியில் பொது ஜன நன்மைக்கும் உகந்ததல்லவென்று சர்க்கார் கருதுகிறார்கள். ஆகையால் இனிமேல் ஜில்லாபோர்டு அக்கிராசனர்கள், உப அக்கிராசனர்கள், அங்கத்தினர்கள், ஜில்லாபோர்டு கல்வி நிரந்தரக் கமிட்டி அங்கத்தினர்கள், முனிசிபாலிடி தலைவர், உப தலைவர்கள், அங்கத்தினர்கள் ஸ்திரீகளாயிருந்தாலொழிய, மற்றவர்கள், பெண்களுக்கென பிரத்தியேகமாக நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கோ, அம்மாதிரி பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்புகளில் மட்டும் பாலர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் கூட, தலைமை உபாத்தியாயினியின் எழுத்து மூலமான அழைப்பிருந்தாலன்றியோ அல்லது போர்டு, கவுன்ஸில் கமிட்டியிலுள்ள ஸ்திரீ அங்கத்தினரை உடனழைத்துக் கொள்ளாமலோ அல்லது ஸ்தல ஸ்தாபனத்தைச் சேர்ந்த மேலதிகாரியுடனே அல்லது கல்வி இலாகா மேற்



பார்வை அதிகாரியுடனே அல்லாது தனியே செல்லக்கூடாது. இவ்விதி ஆண் பெண் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு கிடையாது. அவசியம் வேண்டியதுதான். பலே சென்னை சர்க்கார்!

... ... ...

### ஹைதராபாத்திலும் 'சாரதாச்' சட்டம்

ஹைதராபாத் (நிஜாம் சமஸ்தானம்) சமஸ்தானத்திலும் பால்ய விவாகத்தைத் தடைசெய்ய ஒரு மசோதா வருகிற சட்டசபைக் கூட்டத்தில் பிரேரிக்கப்படும். இச்சட்டமும் 'சாரதா'ச் சட்டத்தை அனுசரித்தே அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி பெண்களின் மணவயது 14 என்றும், ஆண்களுக்கு 18 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இம் மசோதாவில் 12 பிரிவுகளிருக்கின்றன. இவைகளின்படி இச் சட்டத்தை மீறி நடக்கும் விவாகங்களில் கலந்துகொள்பவர்கட்கும், நடத்திவைக்கும் புரோகிதர்களுக்கும் இதரர்கட்கும் 500 ரூபாய் வரை அபராதமும், தம்பதிகளின் தாய் தந்தையர், கார்டியன்கள் முதலியவர்கள் இவ் விவாகத்தை நடத்தவோ நடத்த உதவியோ செய்தால் 1000 ரூபாய்வரை அபராதமும் தண்டனை விதிக்கப்படுவார்கள். இம் மசோதாவுக்கு ஏராளமான பொதுஜன ஆதரவு சமஸ்தானத்திலிருந்து வருகிறது. 1931-ல் எடுக்கப்பட்ட ஜனசங்கியைப்படி இங்கு ஐந்து வயதுக் குட்பட்ட 4,073 விதவைகளும், 1778 ஐந்து வயதுக் குட்பட்ட தாரமிழந்தவர்களும் இருக்கின்றார்கள். என்ன கொடுமை! இதை ஒழிக்க முன் வந்த ஹைதராபாத் சமஸ்தானம் மற்ற சமஸ்தானங்களுக்கும் வழிகாட்டியாயிருக்கட்டும்! இதர சமஸ்தானங்களே! தூங்க வேண்டாம்.

... * ...

### பலதாரமணத்தடை படை

ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்த சதௌராவைச்சேர்ந்த ஸ்திரீகள் இரண்டாந்தாரக் கல்யாணங்களை தடுப்பதற்காக தொண்டர் படை திரட்டுகிறார்கள். இவர்கள் "இரண்டாங் கல்யாணங்களை தடுப்போம்; ஏக பத்தினிவிரதத்தை வளர்ப்போம்" என்ற பிரதிக்ஞையை எடுத்துக்கொள்வார்கள். அவர்கள் முதலில் சாத்வீகமாகவே வேலை செய்வார்கள். அதாவது விவாக தம்பதிகளுக்கு மணத்தை கைவிடும்படி பிரார்த்தனை செய்வார்கள்; அது பலிக்கவில்லையென்றால் மணப்பந்தலில் சாத்வீக மறியல் செய்வார்கள்; அதுவும் பிரயோசனப்படாவிடில் சமூக பகிஷ்காரம் செய்யும்படி பிரசாரம் செய்வார்கள். வீரப் பெண்கள் வீறிட்டெழுந்து விட்டார்கள்! அநீதிகளே எடுங்கள் ஓட்டம்!

... ... ...

### பெண் போலீஸ் படை

நியூஸிலந்து பெண் போலீஸ் படை அமைக்கத் தீர்மானித்துள்ளது. சென்னையும் விரும்புகிறது. சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

... ... ...

### நாய்களுக்கு ராணுவ பயிற்சி

நாய்களுக்கெல்லாம் கட்டாய ராணுவ பயிற்சி கொடுக்கவேண்டுமென்று கர்னல் ரிச்சர்ட்ஸன் என்கிற ஆங்கில படைத் தலைவர் கூறுகிறார். கடந்த மகாயுத்தத்தில் ராணுவப் பயிற்சி பெற்ற நாய்கள் மிகவும் உதவியாயிருந்ததென்று அவர் கூறுகிறார்.

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## ஒருவளுக்கு 5 இரட்டை குழந்தைகள்

யூகோஸ்லேவியாவைச் சேர்ந்த இப்ராஹிம்ஸாகின் பிகேவிட்ஸ் பாஸ்லியா என்பவனின் மனைவிக்கு அடுத்தடுத்து சமீபத்தில் ஐந்தாம் முறையாக இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இதுவரை அவளுக்கு 15 குழைந்தைகளிருக்கின்றன.

... ... ...

## கல்லை வளர்க்கும் பார்பர்

சீமை ஸ்போல்க் ஜில்லாவிலுள்ள ஐக்கென் கிளிப் கிராமவாசியான திரு. வில்லியம் பார்பர் என்பவர் கற்களையும் மற்ற ஜீவன்களைப்போல் வளரச் செய்கிறார். கற்கள் இளவேனிற் காலத்திலும், இலையுதிர்காலத்திலும்தான் வளர்கின்றனவென்று பார்பர் கூறுகிறார். முதலில் கொஞ்சமும், பின் ஜலம் ஊற்ற ஊற்ற அதிகமாகவும் வளருகிறதாம். ஒரு வருஷத்தில் சுமார் அரை அங்குலம் வளர்கின்றனவாம்.

... ... ...

## பாதாளம் பார்க்கும் ப்ரொபஸர்

தமது பலூன் விமானத்தில் ஆயிரக்கணக்கான அடி உயரம் ஏறிப் புகழ்பெற்றுள்ள பெல்ஜிய தேசவாசியான பிரொபஸர் பிக்கார்ட் சீக்கிரத்தில் சமுத்திரத்தின் ஆழத்தில் ஒரு கோஷ்டியுடன் 30,000 அடி வரை போய் கடலடியிலிருக்கும் ஜீவவர்க்கங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் போகிறாராம்.

... ... ...

## மூளை போய் புத்தி கூர்மை.

லண்டன் ஆஸ்பத்திரியில் ஒரு நூதன சம்பவம் நடைபெற்றது. ஒருவனது மூளையில் ஒரு பாகத்தை நறுக்கி எடுத்துவிட்டார்கள். ஆபரேஷன் செய்யப்பட்ட மனிதன் மூளைக்கோளாறு அடைவானென்று எதிர்பார்த்த டாக்டர்கள் அவன் அதிக புத்திசாலியாக மாறியதைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர். மூளையின் இடது பாகத்தை வெட்டிவிட்டால் புத்தியே சிதறிப்போய் விடுமென்று இதுவரை டாக்டர்கள் நம்பியிருந்தது பொய்யாயிற்று. இதேபோல் மூளை எடுக்கப்பட்ட வேறு மூன்று பேர்களும் யாதொரு புத்தி மாறுபாடுமின்றி இருக்கிறார்களாம்.

... ... ...

## 29 குழந்தைகளின் தாய்

மெக்ஸிகோவில் 63 வயதுள்ள இரேஸிபா என்பவளுக்கு மொத்தம் 29 குழந்தைகள் பிறந்தன. அவளுக்கு மெக்ஸிகோ சர்க்கார் 200 பவுன் பரிசும் ஒரு மெடலும் கொடுத்தனர். அங்கு அவளைவிட அதிகக் குழந்தைகள் பெற்றவள் யாருமில்லை. ஆனால் இப்பொழுது 19 குழந்தைகளே உயிருடனிருக்கின்றன. பேரன் பேத்தி உள்பட அவளுக்கு மொத்தம் சந்ததிகள் 149.

... ... ...

## மனைவிகளுக்கு சம்பளம்

தாலி கட்டுகையிலேயே தங்களுக்கு வீட்டு வேலைகள் பார்ப்பதற்காக வாராவாரம் சம்பளம் கொடுப்பதாக புருஷர்களிடமிருந்து எழுத்துமூலம் உறுதிவாங்கிக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் லண்டனில் விவாகமான பெண்கள் ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கின்றனர். சம்பளமட்டுமின்றி, வேலைநேரம், லீவு முதலியனவும் வழங்கவேண்டுமாம். இதன் தலைவிகள் மிஸ். மோனிகா வாட்லியும், மிஸ். பிரான்ஸிஸ் என்பவளும். விபரீதம் வேறு வேண்டுமா?

... ... ...

## இருவரை 8 தடவை மணந்தவள்

பாரிஸில் வஸிக்கும் எமிலியன் என்னும் ஸ்திரீ 1903-ல் சண்டர்லாண்டில் முதன் முதலாக எர்னஸ்ட் ஹார்வே என்பவரை மணந்துகொண்டார். இருவருஷ வாழ்வுக்குப்பின் அவரை விவாஹரத்து செய்துவிட்டு போலோன் சென்று பக்ளே என்பவரை மணந்தாள். அவருடன் மூன்று வருஷம் வாழ்ந்தபின் அவருடனும் விவாகரத்து செய்துகொண்டு மறுபடியும் முதல் கணவன் ஹார்வேயை மணந்தாள். இவ்வாறு இவ்விரு கணவர்களையும் எமிலியன் எட்டு தடவைகள் மாறி மாறி மணந்து 8-வது தடவைக்குப் பின் விவாகரத்துக்கு வந்தபொழுது ஜட்ஜ் அவர்களைச் சமாதானப் படுத்திப் போகச்சொல்லிவிட்டார்.

... ... ...

## பின்னால் நடக்கும் பந்தயம்

கேம்ப்ரிட்ஜில் ட்ரினிடி கலாசாலை மாணவன் க்ரெய்கும், பெம்ப்ரோக்கைச் சேர்ந்த ஸ்பென்ஸ் என்பவனும் கேம்ப்ரிட்ஜிலிருந்து நியூமார்க்கட்வரை, சுமார் 13 மைல்கள் பின்புறமாகவே நடந்து சென்றனர். அவர்களுடைய சகாக்கள் அம்மாதிரி நடக்க 12 மணி ஆகுமென்றனர். ஆனால் க்ரெய்கும், ஸ்பென்சும் 5½ மணி நேரத்தில் நடந்து விட்டனர்.

... ... ...

## காதல் கடிதம் எழுதும் வேலை

புடாப்பெஸ்டைச் சேர்ந்த ஒரு மங்கை டைப்பிஸ்டுக்கு வேலை போய்விட்டது. உடனே அவள் அந் நகரின் பெரிய மார்க்கெட்டுக்குச் சென்று எழுதத் தெரியாத காதலர்களுக்கு காதல் கடிதங்கள் எழுதிக் கொடுத்து அதற்குப் பதிலாக உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுகிறாள்.

... ... ...

## மாணவிகள் பூட்ஸ் துடைக்கின்றனர்

அமெரிக்காவில் கலாசாலைகளில் படிக்கும் பெண்கள் லக்ஷாதிபதிகள் உள்பட சொந்த துட்டுக்காக பூட்ஸ் துடைப்பது போன்ற சில்லரை வேலைகள் செய்கின்றனர் என்று அமெரிக்க மாதர் யுனிவர்ஸிடி பெடரேஷன் பிரஸிடெண்ட் மிஸ். இல்டர்ஸ்லீவ் சொல்லுகிறார்.

# சினிமா செய்திகள்

### மாதங்கினி

பங்கிம் சந்திர சாட்டர்ஜி இயற்றிய "மாதங்கினி" எனும் கதையை சென்னை மயூரா பிலிம்ஸார் தமிழ் படமாகத் தயாரிக்கப் போகின்றனர். திரு. ஜி. பஞ்சநதம் இப்படத்தை டைரக்ட் செய்வாராம்.

### "ப்ரிதிவிராஜன்"

திருச்சி ஜோதிபிலிம் கம்பெனியார் "ப்ரிதிவிராஜன்" என்ற வீரம் ததும்பும் சரித்திரக் கதையை தமிழ் சினிமாப்படமாக கல்கத்தா ஈஸ்ட் இந்தியா ஸ்டூடியோவில் தயாரிக்கப் போகின்றனர். இப்படத்தை எல்லிஸ் ஆர். டங்கன் டைரக்ட் செய்வார்.

### கஜேந்திர மோக்ஷம்

ஸ்ரீராஜ் மூவிடோன் கோலாப்பூர் ஸ்டூடியோவில் "கஜேந்திர மோக்ஷத்தை" படம் எடுக்கப் போகின்றனர்.

### விமோசனம்

ஹிந்துஸ்தான் பிலிம்ஸ், ஜயா பிலிம்ஸ் "விமோசனம்" என்னும் மதுவிலக்கு நாடகத்தைப் படம் பிடிக்கப் போகின்றனர். ஸ்ரீமார்கனி என்னும் கல்கத்தா காமிராக்காரர் படத்தை டைரக்ட் செய்வார். நடிகர்கள் பொறுக்கி ஒத்திகைகள் நடந்து வருகின்றன.

### டம்பாச்சாரி

சவுண்டுஸிடி திரு. ஏ. நாராயணன் "டம்பாச்சாரி" கதையை தமிழ் படமாக உயர்ந்த முறையில் எடுக்கப் போகிறாராம். இதில் ஸ்ரீமதி டி. வி. ராஜசுந்தரிபாய் பிரதான நடிகையாகத் தோன்றுவாள் என்று கூறப்படுகிறது.

### கிருஷ்ணன் தூது

ராஜகோபால் டாக்கீஸார் "கிருஷ்ணன் தூது" படத்தை மோஷன் பிக்சர் ஸ்டூடியோவில் பாதிக்குமேல் எடுத்துவிட்டனர். பல ஜனத்திரள் காட்சிகள் மிக அழகாக கோலாப்பூர் ஸ்டூடியோவில் எடுத்து விட்டனர். படம் வெகு உன்னதமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

### மாயா மசீந்திரா

மெட்ராபாலிடன் பிக்சர்ஸார் தங்கள் அடுத்த படத்துக்கான "மாயாமசீந்திரா"வுக்கு நடிகர்களைப் பொறுக்கி எடுத்துவிட்டனர். இதில் திரு. எம். கே. ராதாவும், எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியும் பிரதம நடிகர்களாம்.

### தாயுமானவர்

ஜெயபாரதிபிலிம் கம்பெனியாரின் "தாயுமானவர்" வெகு துரிதமாக சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டூடியோவில் தயாராகிறது. திரு. தண்டபாணிதேசிகர், மிஸ். எம். எஸ். தேவசேனா முதலியவர்கள் நடிக்கின்றனர்.

### ஸ்வர்ணலதா

ராஜேந்திரா பிலிம் கம்பெனியார் "ஸ்வர்ணலதா"வை படமெடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டனர். இப்படத்தை திரு. ஒய். வி. ராவ் டைரக்ட் செய்வதுடன் அதில் நடிக்கவும் செய்வாராம்.

# ஆசிரியர் குறிப்புகள்

### பலதாரமணத்தடை மசோதா

பலதாரமணத்தால் ஹிந்து ஸ்திரீகள் படும் கஷ்டங்களை நாம் இதற்குமுன் பல முறைகள் எடுத்துக்கூறி இக்கொடுமையை சட்ட பூர்வமாய் தடை செய்வதையும் ஆதரித்திருக்கிறோம். சில மாதங்களுக்கு முன் அவ்விதமசோதாவை பாஞ்சால சட்டசபையில் பிரேரிக்கமுன்வந்த ஸ்ரீமதி தூனிசந்து அவர்களை நாம் போற்றி ஆதரித்துள்ளோம். பலதாரமணத்தால் ஏற்படும் தீமைகளை விவரித்துக் கூறவேண்டியது அவசியமில்லை. இது நம்மாதர்கள் சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினையாகும். ஒரு மனைவி இருக்கும்போதே வேறுபல மனைவிகளை மணந்து கொள்வது என்பதை எந்ததர்ம நியாயவாதியும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆண்பாலருக்கு ஒரு நீதியும், பெண் பாலாருக்கு மற்றொரு நீதியையும் வகுப்பது தர்மசாஸ்திரம் ஆகாது, அது அதர்ம குத்திரமேயாகும்.

இந்த அநீதியை ஒழிக்க ஒரு மசோதா கொண்டு வரப்போவதாக ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் எம். எல். ஏ. (மத்திய சட்டசபை) நோட்டீஸ் கொடுத்திருப்பதையும், அந்த மசோதாவின் அவசியத்தைப்பற்றிய அவர் விளக்கமும் பிரிதோரிடத்தில் நாம் பிரசுரித்திருக்கிறோம். அதை ஒவ்வொரு வாசகரும் ஊன்றிப்படிக்க வேண்டுகின்றோம். இம்மசோதாகொண்டுவர முன்வந்த ஸ்ரீமதி ராதாபாய்க்கு எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம். அம்மசோதாவின் முக்கியமான தத்துவத்தையும், லட்சியத்தையும் பரிபூரணமாக நாம் ஆதரிக்கிறோம் என்பதை அவருக்கும், மத்திய, மகாணசர்க்காருக்கும், இதரர்களுக்கும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினருக்கும் நாம் பகிரங்கமாக மாதர்களின் சார்பாகத் தெரிவிக்கிறோம். மேலும் சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியினருக்கு இது ஒரு சோதனை காலம் என்பதையும் அவர்களுக்குப் பிரத்தியேகமாக நாம் ஞாபகப்படுத்துவது மன்னியில் ஏதாவது சாக்குப் போக்குகளைச் சொல்லி இம் மசோதாவின் முக்கியமானலட்சியத்தையோ அம்சங்களையோ அவர்கள் ஆதரிக்காமல், அல்லது மறைமுகமாகவோ நேரடியாகவோ எதிர்த்து அம்மசோதாவின் உயரிய நோக்கம் நிறைவேறுதபடி செய்தால் அக்கட்சியினர் மாதருலகுக்கு, ஏன் பாரத அன்னைக்கே பெருந்துரோகம் செய்த பழிபாவத்துக்கும், அதன் பலாபலன்களையும் அடைய நேரிடுமென்று எச்சரிக்கையும் செய்கிறோம். சாரதாச்சட்ட சீர்திருத்தமசோதாவை ஆதரித்ததுபோல் மத்தியசர்க்காரும் இம்மசோதாவையும் ஆதரித்து மாதர்களின் நன்றியைப் பெறவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாம் இம்மசோதாபற்றி ஸ்ரீமதி ராதாபாய் அவர்களை நேரில் பேட்டிகண்டபோது அவர்கள் தன் மசோதாவின் கருத்துக்கு விரோதமில்லாத எந்தவிதமான சிறு திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும், முக்கிய நோக்கத்துக்கு முரண்

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளி லிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரியீ 1வ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8வ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]


| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜுன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜுன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜுலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜுலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜுன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜுன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜுலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜுலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

**Printed and Published by Dr. S. Seshagiri Rao at the Lodhra Press, Royapettah, Madras.**


மதராஸ் டி. சி. என். கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய

## கழுத்து செயின்கள்




அசல் தங்க செயின்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது.

2 வருஷம் உத்தரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

செயின்கள் விலை விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| பெரிய சைஸ் | ஒத்தபேட்டை | 1-க்கு | ரூ. | 7—0—0 |
| ,, | ரெட்டபேட்டை | ,, | ரூ. | 14—0—0 |
| ,, | மூன்றுபேட்டை | ,, | ரூ. | 21—0—0 |
| ,, | நான்குபேட்டை | ,, | ரூ. | 28—0—0 |

வி. பி. செலவு 1 பேட்டை முதல் 4 பேட்டை வரையில் 8 அணு

பேபி சைஸ் (சின்னது) ஒத்தபேட்டை 1-க்கு ரூ. 5—0—0

,, ரெட்டபேட்டை ,, ரூ. 10—0—0

வி. பி. செலவு 1-க்கு 8 அணு

குறிப்பு:—"கிரஹலக்ஷ்மி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும். மேலும் 2 அணு பெருமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனம்.

டி. சி. நாகலிங்கப்பா அண் கோ., 280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன் மதறாஸ்.



## "கிரஹலக்ஷ்மி"

பைண்ட் வால்யூம் 1. : : வெளிவந்து விட்டது

1937ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் முடிய வெளிவந்த பன்னிரண்டு இதழ்களும் வெகு நேர்த்தியாகவும் அழகாகவும் பைண்ட் செய்யப்பட்ட "கிரஹலக்ஷ்மி" பைண்ட் வால்யூம் 1. ஒவ்வொரு கிரஹ தலைவியின் கையிலும் இருக்கவேண்டியது. தமிழ் நாட்டு ஸ்திரீகள் அனைவரும் படித்து பயனடையத்தக்கது. சொற்ப பிரதிகளேயுள்ளன.

விலை ரூ. 5—0—0.

"கிரஹலக்ஷ்மி" காரியாலயம்

தபால் பெட்டி நெ. 655,

ராயப்பேட்டை, :: மதறாஸ்.

பாடில்லாத எவ்வித யோசனைகளையும் ஏற்றுக்கொண்டு மசோதாவை சரிப்படுத்தவும் இஷ்டம் என்று தெரிவித்தார். இதனின்றும் அவரது தூயமனப்பான்மையும், ஊக்கமும் தெளிவாகிறது. மேலும் ஆங்காங்குள்ள மாதர் சபைகளும், சீர்திருத்த சங்கங்களும், தனிப்பட்ட ஆண், பெண்களும் பத்திரிகைகள் மூலமாயும், நேரடியாகவும் தாங்கள் மேற்படி மசோதாவின் நோக்கத்தை ஆதரிப்பதை சர்க்காருக்கும், ஸ்ரீமதி ராதாபாய்க்கும் தெரிவித்து தன்னை ஆதரித்து ஊக்கமளிக்கவேண்டுமென்று அவர் நம்மைக் கேட்டுக்கொண்டார். அவ்வாறு பலரும் செய்யவேண்டியது கடமை யென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மசோதாவில் சில சீர்திருத்தங்கள் அவசிய மென்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். சென்னையில் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியின் தலைமையில் நடை பெற்ற மாதர்களின் கூட்டமொன்றில் நிறைவேற்றப் பட்ட தீர்மானமும் இம்மசோதாவை சீர்திருத்தங்களுடன் ஆதரிக்கின்றது. ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி முதலிய பிரபல தலைவர்களும், அகில இந்தியமாதர் மகாநாடும் மசோதாவின் லட்சியத்தை ஆதரிக்கின்றனர். இவ்வளவு பேராதரவுடைய மசோதா அவசியமான திருத்தங்களுடன் நிறைவேறும் என்று நம்புகிறோம். ஸ்ரீமதி ராதாபாய் வெற்றி அடைவாராக! மேலும், மேலும் இதுபோன்ற உருவான மசோதாக்களை நிறைவேற்றி மாதர் நிலையை உயர்த்துவாராக!

## சாரதாசட்ட அமுல்

மேலகாண்டேஷ் ஜில்லாவில் ஒரு மார்வாடியும் மற்றொரு ஸ்திரீயும் பால்ய விவாகத்தடைச் சட்டத்துக்கு விரோதமாக விவாஹம் செய்த குற்றத்துக்காக ஜில்லா மாஜிஸ்டிரேட் முன் விசாரிக்கப்பட்டு வெறும் கண்டனத்துடன் மாஜிஸ்டிரேட்டால் விடப்பட்டனர். அந்த ஜில்லாமாஜிஸ்ட்ரேட் இது சட்டப்படி தான் குற்றமே தவிர, மத ஆசார ஒழுக்கத்துக்கும் மார்வாடி ஜாதியினரின் வழக்க ஒழுக்கத்துக்கும் விரோதமான தல்லவென்றும் ஆகையால் தண்டனை விதிக்க வேண்டியதில்லை யென்றும் சொன்னார். இது ஹைகோர்ட்டுக்கு அப்பீலில் வந்தது. அதை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. திவேதியாவும், திரு. நார்மனும் ஜில்லாமாஜிஸ்டிரேட் செய்ததை வெகுவாகக் கண்டித்து அவர் செய்தது சட்டத்துக்கு விரோதமென்றும், அப்படிச் செய்வது சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் அவமதிப்பு விளைவிப்பதாகும் என்றும் நல்ல சூடுகொடுத்து குற்றவாளிகளுக்கும் முறையே 100-ம், 50 ரூபாயும் அபராதம் விதித்தனர். சாரதாச் சட்டத்தை வெகு கண்டிப்பாக அமுல் நடத்தாவிட்டால் சட்டத்தின் நோக்கமே தோல்வியுறும் என்பதை ஒவ்வொரு நீதிபதியும் நன்குணர்ந்து அதை ஊக்கத்துடன் நடத்தி வைக்கவேண்டுமென்று எடுத்துக்கூறிய பம்பாய் நீதிபதிகள் திரு. திவேதியாவுக்கும், திரு. நார்மனுக்கும் மாதருலகம் நன்றி செலுத்தக்கடமைப் பட்டுள்ளது. இது மாதிரியே சர்க்காரும் சாரதாச்சட்டத்தை மீறுவோருக்குக் கடுந்தண்டனை விதிப்பதற்கு மாஜிஸ்டிரேட்டுகளும், நீதிபதிகளும் தயங்கக்கூடாதென்று ஒருபொது சுற்றறிக்கையும் வெளியிட்டால் மிகவும் நன்மையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1938ஞு ஆகஸ்டுமீ பகுதான்ய ஞு ஆடிமீ-ஆவணிமீ<br>திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| ஆகஸ்டு 1 | ஆடி 17 | திங் | ஷஷ் 32-25, ஹஸ் 12-13, ரா 1-16, சூரிய ஷஷ்டி. |
| 2 | 18 | செவ் | ஸப் 32-53, சித் 13-41, தி 28-29, ஸத்திவரர். |
| 3 | 19 | புத | அஷ் 35-22, ஸ்வா 17-8, ரா 0-56, பக்ஷிராஜர். |
| 4 | 20 | வியா | நவ 39-31, விசா 22-21, ரா 2-3, கரிநாள். |
| 5 | 21 | வெ | தச 44-52, அநு 28-53, ரா 13-15, வரலக்ஷ்மி விரதம். |
| 6 | 22 | சனி | ஏகா 50-55, கேட் 36-16, கலியர், கோட்புலி ஏகா. |
| 7 | 23 | ஞாய | துவா 57-11, மூல 43-55, சே 2-49, ரா 8-15, |
| 8 | 24 | திங் | திர 60-0, பூரா 51-26, தி 10-55. [பட்டினத்தார். |
| 9 | 25 | செவ் | திர 3-12, உரா 58-28, தி 13-47, ஸ்ரீ ஆளவந்தார். |
| 10 | 26 | புத | சசி 8-45, ஸ்ரீவ 60-0, தி 9-32, தெர்க்காழ்வான். |
| 11 | 27 | வியா | ○ 13-36, ஸ்ரீவ 4-53, தி 15-50, கஞ்சி கஜேந்திர. |
| 12 | 28 | வெ | பிர 17-40, அவி 10-34, தி 30-1. |
| 13 | 29 | சனி | துவி 20-48, சத 15-23, ரா 1-15, ராகவேந்திரர். |
| 14 | 30 | ஞாய | திரி 23-6, பூட் 19-19, ரா 13-23, கஜ்ஜலிதிர்தியா. |
| 15 | 31 | திங் | சது 24-23, உட் 22-24, ரா 22-14. |
| 16 | ஆவணி 1 | செவ் | பஞ் 24-38, ரே 24-20, ஸிம்மேரவி 20-50. |
| 17 | 2 | புத | ஷஷ் 23-45, அசு 25-12, தி 15-4, ரா 17-57, கரிநாள். |
| 18 | 3 | வியா | ஸப் 21-30, பர 24-44, ரா 22-50, கோகுலாஷ்டமி. |
| 19 | 4 | வெ | அஷ் 17-56, * கிரு 23-2, முனித்திரய ஸ்ரீஜயந்தி. |
| 20 | 5 | சனி | நவ 13-6, ரோ 19-56, தி 0-58, ரா 1-56, ஸ்ரீஜயந்தி. |
| 21 | 6 | ஞா | தச 6-59, உப 52-53, மிரு 15-37, ரா 3-48. |
| 22 | 7 | திங் | துவா 52-0, ஆரு 10-19, ரா 6-23. [யனம் 48-8. |
| 23 | 8 | செவ் | திர 43-38, புந 4-19, உப 53-36, தி 22-11, கன்யா |
| 24 | 9 | புத | சசி 35-9, ஆயி 51-33, தி 26-31, புகழ்த்துணை, கரி. |
| 25 | 10 | வியா | ● 26-57, மக 45-38, தி 18-35, இளையான்குடிமாரர். |
| 26 | 11 | வெ | பிர 19-37, பூர 40-38, தி 3-58, பாத்ரபதம். |
| 27 | 12 | சனி | து 13-31, உ 36-57, சே 1-32, மறைஞானசம்பந்தர். |
| 28 | 13 | ஞாய | திரி 8-57, அஸ் 35-0, சே 1-16, ரா 24-14, ஸாமோபா<br>[கர்மம், விநாயகசதுர்த்தி. |
| 29 | 14 | திங் | சது 6-16, சித் 35-1, ரா 18-44, ருஷிபஞ்சமி. |
| 30 | 15 | செவ் | பஞ் 5-35, ஸ்வா 37-7, ரா 21-20, சம்பா ஷஷ்டி. |
| 31 | 16 | புத | ஷஷ் 6-59, விசா 41-11, ரா 21-26. |






| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

134086.
சென்னை-600 008.




# ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கப ஜுரம் முதலிய எல்லாவித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்தி செய்வதில் முதன்மையானது

# அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணவிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளுவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இதன் விலை | 6 | அவுன்ஸ் புட்டி | ரூ. | 2 | 8 | 0 |
| ,, | 3 | ,, | ,, | 1 | 8 | 0 |
| ,, | 1 | ,, | ,, | 0 | 8 | 0 |

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**



ஏன் நீங்களும் இன்றிருந்தே
இதைக் கையாண்டு இதன் அபார
மான பலனை அடையக்கூடாது?

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேசரியின் பற்பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை
பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, அழகு செய்வது மன்னி
யில் பற்களுக்கு வசீகரத்தையும், பிரகாசத்தையும், மதுரத்தை
யும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8